542
31

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்
# இருபத்தைந்து ஆண்டுகள்

8660

மக்கள் பிரசுராலயம்
வெளியீடு
1968

# இலங்கை
# கம்யூனிஸ்ட்
# கட்சியின்
# இருபத்தைந்து
# ஆண்டுகள்

S. K. K. N. Bharan

★

5660

131542

131542 CC

மக்கள் பிரசுராலயம்
124, குமாரன் ரத்தினம் ரோட்,
கொழும்பு—2
1968

320.53209

உள்ளே. . . .


1வது அத்தியாயம்
ஆரம்ப காலம்............................ 1

2வது அத்தியாயம்
சுதந்திரப் போராட்டம்............ ... 17

3வது அத்தியாயம்
2வது காங்கிரஸ் முதல்
4வது காங்கிரஸ் வரை.................... 41

4வது அத்தியாயம்
யு. என். பியின் தோல்வி................ 59

5வது அத்தியாயம்
பண்டாரநாயக்கா
கொள்கைக்கு ஆதரவு..................... 89

6வது அத்தியாயம்
பிற்போக்கின் எதிர்த்தாக்குதலை
எதிர்த்துப் போராட்டம்................. 107

7வது அத்தியாயம்
யு. என். பி—சமஷ்டி'
அரசாங்கத்திற்கு எதிரான
போராட்டம் ... ..................... 133


## முதலாம் அத்தியாயம்

# ஆரம்ப காலம்

இவ்வருடத்தில் 25வது ஆண்டு விழாவை நடத்தும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943 ஜூலை 3ந் திகதி உத்தியோக பூர்வமாக நிறுவப்பட்டது. ஆனால் அதற்கு வெகுகாலத்துக்கு முன்பே இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஆரம்பமாகிவிட்டது.

இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் சுமார் கால் நூற்றாண்டுகளாக நடத்திய போராட்டங்களிலிருந்து பெற்ற அனுபவங்களை, 1917ம் வருட மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியிலிருந்தும் சோவியத் நாட்டில் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்பியதிலிருந்தும், உலகெங்கினும் ஏற்பட்ட மார்க்ஸீய-லெனினிய போராட்டங்களிலிருந்தும் பெற்ற படிப்பினைகளுடன் இணைத்ததின் விளைவாகவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது.

மகத்தான அக்டோபர் புரட்சியின் தாக்கம் 1920க்குப் பிந்திய பத்தாண்டுகளில் உலகெங்கினும் உணரப்பட்ட பொழுது, இலங்கையில் ஸ்தாபனரீதியான தொழிலாளர் இயக்கம் உருவாகியது.

இந்தக்காலத்தில் இலங்கையில் ஸ்திரமான தொழிலாளர் வர்க்க ஸ்தாபனங்களைக் கட்டியெழுப்புவது கடினமான, சிக்கலான காரியமாக இருந்தது. இலங்கையில் நிரந்தரக் குடிகளல்லாத குடியேறிய தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தில் கணிசமான ஒரு பகுதியாக இருந்தனர். தொழிலாளர் கருணையின்றி சுரண்டப்பட்டது மட்டுமின்றி, சேவை பற்றிய சிவில் நிபந்தனைகளை மீறினால் சிறைத்

தண்டனையும் மற்றும் கிறிமினல் தண்டனைகளையும் வழங்கும் அடிமை சேவை போன்ற வேலை நிபந்தனைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

ஆனால் தொழிலாளர் ஸ்தாபனங்கள் படிப்படியாக உருவாகத் தொடங்கின. ஆரம்பத்தில் அவை இலங்கைத் தொழிலாளர் நலவுரிமை லீக் (1919), இலங்கை தொழிலாளர் சம்மேளனம் போன்ற பரஸ்பர உதவி, நலவுரிமைச் சங்கங்ளாகவே இருந்தன. 1922 செப்டம்பர் 22ந் திகதி முதலாவது தொழிற் சங்கமான இலங்கை லேபர் யூனியன் திரு ஏ. ஈ. குணசிங்கா தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை லேபர் யூனியனதும், 1928 அக்டோபர் 28ந் திகதி நிறுவப்பட்ட அகில இலங்கை தொழிற் சங்கக் காங்கிரஸினதும் தலைமையின் கீழ் நகரத் தொழிலாளர்கள் 1920க்குப் பிந்திய பத்தாண்டுகளில் பல வீரமிக்க வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்தினார்கள். 1923ல் நடைபெற்ற புகையிரத எஞ்ஜினியரிங் வேலைநிறுத்தமும் இதர வேலைநிறுத்தங்களும் 1928ல் லேக்ஹவுஸ் மற்றும் அச்சகங்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களும் 1929ம் வருட டிராம்கார் வேலை நிறுத்தமும் முக்கியத்துவம் பெற்ற சில போராட்டங்களாகும்.

இந்த ஆரம்பப் போராட்டங்களில் தொழிலாளர்கள் தங்களின் மகத்தான துணிச்சலையும், வீரத்தையும் எடுத்துக் காட்டினார்களெனினும், இந்த ஆரம்பக் கட்டத்தில் இவ்வியக்கம் அநேக பலவீனங்களைக் கொண்டிருந்தது. ஆனால் இந்தக் கால கட்டத்திற்றான், இலங்கை சமுதாயத்தில் தாங்கள் ஒரு தனி வர்க்கம் என்பதையும், ஏகாதிபத்திய ஆட்சிக்கும் முதலாளித்துவச் சுரண்டலுக்கும் எதிரான போராட்டத்தில் தாங்கள் ஸ்தாபன ரீதியாகத் திரள வேண்டிய அவசியத்தையும் தொழிலாளர் உணர்ந்தனர்.

1920க்குப் பிந்திய பத்து ஆண்டுகளில் தொழிலாளர் போராட்டங்கள் பல்வேறு பொருளாதாரக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகவே பெரும்பாலும்



நடத்தப்பட்டன. தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் நோக்கங்கள் போதுமானஅளவு வற்புறுத்தப்படவில்லை. உண்மையில் 1928ல் தான் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியற்கட்சியொன்றினை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது-அதுதான் இலங்கைத் தொழிலாளர் கட்சி. இக்கட்சியின் நடவடிக்கைகள் தொழிலாளர்களுக்கு வாக்குரிமையை வென்றெடுப்பதையே பெரும்பாலும் நோக்கமாகக் கொண்டிருந்தன. 1931ல் அந்த நோக்கம் நிறைவேறியது.

1920க்குப் பிந்திய பத்து ஆண்டுகளில் நிறுவப்பட்ட தொழிலாளர் வர்க்க ஸ்தாபனங்கள் அந்தப் பத்தாண்டின் இறுதியில் சிதைந்துபோகத் தொடங்கின. இதற்குக்காரணம் ஆரம்பகாலத் தொழிலாளர் போராட்டங்களை நடத்திய திரு. ஏ.ஈ. குணசிங்கா என்னும் தனிநபரைச் சுற்றி ஆரம்பத் தொழிலாளர் வர்க்க ஸ்தாபனங்கள் கட்டியெழுப்பப்பட்டிருந்ததே. 1927க்குப் பின்னர், திரு. குணசிங்கா ராம்ஸே மாக்டொனல்ட் போன்ற பிரிட்டிஷ் வலதுசாரி ''தொழிலாளர்'' தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, முதலாளிகளுடன் ஒத்துழைத்து தொழிலாளர் வர்க்க இயக்கத்தைப் பிளவு படுத்துவதற்காக குறுகிய இனபேதக் கொள்கையைக் கையாண்டு, பகிரங்கமாக வேலை நிறுத்தங்களை முறியடிப்பதற்குக் கூட இறங்கிவிட்டார். அதனால் அகில இலங்கைத் தொழிற் சங்கக் காங்கிரசும் இலங்கைத் தொழிலாளர் கட்சியும் நொறுங்கி விழத் தொடங்கின. இதன் விளைவு, உலகெங்கினும் பரவிய முதலாளித்துவத்தின் மாபெரும் பொருளாதார நெருக்கடி 1929ல் இலங்கையையும் தாக்கத்தொடங்கிய பொழுது தொழிலாளர்கள் நிராயுதபாணிகளாகி, பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதே.

1930க்குப் பிந்திய பத்தாண்டுகளின் ஆரம்ப வருடங்களில் தொழிலாளர் வர்க்க இயக்கம் புத்துயிர் பெற்றதால் அவ்வியக்கத்தின் வரலாற்றிலே இரண்டாவது சட்டம் ஆரம்பமாயிற்று. 1940 வரை நீடித்த இக்

கட்டத்திலே இலங்கையில் சோஷலிஸ்ட் இயக்கம் தோன்றி வளர்ந்தது. இந்த காலக்கட்டத்திற்றான் தொழிலாள வர்க்க இயக்கத்தில் மார்க்ஸிஸம்—லெனினிஸக் கருத்துக்கள் செல்வாக்குப் பெறத்தொடங்கின.

உலகெங்கினும் பரவிய முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் நாசகரமான விளைவுகளால் 1930க்குப் பிந்திய பத்தாண்டுகளின் ஆரம்பத்தில் இலங்கையும் பாதிக்கப்பட்டது. தொழிலாளர் இயக்கத்தில் திரு. குணசிங்காவின் சமுதாய — சீர்திருத்தக் கொள்கைகளின் போலித்தன்மையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைப்பதிற்றான் இலங்கையின் சுதந்திரமும், சுபீட்சமும் தங்கியுள்ளது என்று உபதேசித்து வந்த சர். டி. பி. ஜயதிலக்கா, டி. எஸ். சேனநாயக்கா போன்ற தேசிய இயக்கத்தின் பூர்ஷுவா தலைவர்களது கொள்கைகளின் மாய்மாலங்களையும் இந்த நெருக்கடியின் விளைவுகள் தெளிவாக அம்பலப்படுத்தின.

சோஷலிஸ்ட் சோவியத் யூனியன் மட்டும் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட்டிருந்தமை தொழிலாளர் வர்க்கம், அதிவிவேகிகள் ஆகியோர் மத்தியில் ஓர் ஆழ்ந்த உணர்ச்சியைத் தோற்றுவித்து அவர்களிடையே அரசியலில் அதிக வளர்ச்சி பெற்றவர்கள் இலங்கையின் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு சோஷலிசமே என்று கருதத்தொடங்கினர். இந்தப் போக்கு, சர்வஜன வாக்குரிமையால் பொதுமக்கள் முதன்முதலாக அரசியல் அரங்கத்துள் இழுக்கப்பட்ட பின்னர், மேலும் தீவிரமடைந்தது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா வெளிநாடுகளில் கல்வி கற்று 1920க்குப் பிந்திய பத்தாண்டுகளின் இறுதியில் இலங்கைக்குத் திரும்பினர். வெளிநாடுகளில் இருந்தபோது அவர் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். அவர் மார்க்ஸிஸம்-லெனினிஸத்தின் விஞ்ஞான சோஷலிசக் கருத்துக்களை



யும் முதன் முதலாக இலங்கையிற் பரப்பவும், முதலாவது தொழிலாளர் ஆட்சியான சோவியத் நாட்டின் சாதனைகளைப் பிரசாரம் செய்யவும் ஆரம்பித்தார்.

அவரது முயற்சியின் விளைவாக போதனை வட்டங்களும், சிறு சோஷலிஸ்ட் கோஷ்டிகளும் உருவாகின.

1931ல் டாக்டர் விக்கிரமசிங்கா முதலாவது இராஜாங்க சபைக்குச் சோஷலிஸ்ட் அபேட்சகராகத்தெரிவு செய்யப்பட்டதையொட்டி அதுவரை பூர்ஷுவாக்களும், நிலப்பிரபுக்களும் அனுபவித்து வந்த அரசியல் ஏகபோகம் முதன் முதலாகத் தகர்க்கப்பட்டது. இராஜாங்க சபையிலும் வெளியிலும் சோஷலிஸ, கம்யூனிஸக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதிலும், அக்கருத்துக்களை இலங்கைத் தொழிலாளர் விவசாயிகளின் யதார்த்த நிலைமையுடன் இணைப்பதிலும்டாக்டர் விக்கிரமசிங்கா மகத்தான சேவைகளைச் செய்தார். அவர் இலங்கைக்குப்பூரண தேசிய சுதந்திரம் வேண்டிநின்றார். சமுதாய அநீதிகளை அம்பலப்படுத்தினர். உழைப்பாளி மக்களின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார். இலங்கை பின்தங்கியிருப்பதும், இந்நாட்டு மக்களின் வறுமையும் இலங்கையில் ஏகாதிபத்திய ஆட்சியினதும், சுரண்டலினதும் நேரடி விளைவுகளே என்பதையும் தெளிவுபடுத்தினர்.

நாட்டுப்பற்றும், தீவிர மனப்பான்மையும் கொண்ட வாலிபர்கள் பலர் டாக்டர் விக்கிரமசிங்காவைச் சுற்றிக் குழுமினர். விரைவில் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்தன போன்ற வெளிநாடுகளில் கல்வி பயின்று திரும்பிய மாணவர்களும், பின்னர் உடகெந்தவல சிறி சரணங்கர தேரோவும் டாக்டர் விக்கிரமசிங்காவுடன் சேர்ந்து கொண்டனர்.

இந்த தீவிர மனப்பான்மை கொண்ட வாலிபர்கள் சோஷலிஸ்ட் கருத்துக்களைப் பிரசாரம் செய்து வந்ததுடன், பல மக்கள் இயக்கங்களையும் உருவாக்கி தலைமை தாங்கி நடத்தினர். இவ்வியக்கங்கள் பொது மக்களின் ஏகாதிபத்திய — எதிர்ப்பு, பிரபுத்துவ — 'எதிர்ப்பு

உணர்ச்சியைத் தீவிரப்படுத்துவதற்கு உதவின. அவற்றில் மிகப்பலமானது 1933ல் ஆரம்பிக்கப்பட்டு, மென்மேலும் மக்கள் ஆதரவைப் பெற்று 1930க்குப் பிந்திய பத்தாண்டுகளின் இறுதிவரை நீடித்த சூரிய மலர் இயக்கமே.

இலங்கையில் ஏகாதிபத்திய — எதிர்ப்பு இயக்கத்தின் ஆரம்பமாக அமைந்த சூரிய மலர் இயக்கத்தின் தலைவியாக திருமதி டொரீன் விக்ரமசிங்காவும் (டாக்டர் விக்ரமசிங்காவின் மனைவி), கூட்டுக்காரியதரிசிகளாக திரு. டெரன்ஸ் டி. சில்வா, திரு. றொபின் ரத்னம் ஆகியோரும் பணியாற்றினர். டாக்டர் விக்ரமசிங்காவைத் தவிர எம். ஜி. மெண்டிஸ், டி. துரைசிங்கம் போன்ற இதர கம்யூனிஸ்டுகளும் ஆரம்பக் கட்டங்களில் இயக்கத்துடன் தொடர்பு கொண்டு தீவிரமாகப் பணியாற்றினார்கள். 1933 — 1934ல் இலங்கையை சூறையாடிய மலேரியா கொள்ளை நோய் பரவியிருந்த சமயத்தில் இலங்கை விவசாய மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள சூரிய மலர் இயக்க ஊழியர்களால் முடிந்தது.

பல வருடங்களாக நடைபெற்று வந்த ஏகாதிபத்திய சுரண்டலால் தோற்றுவிக்கப்பட்டதும், அன்று நிலவிய பொருளாதார நெருக்கடியால் மிக மோசமான நிலையை அடைந்ததுமான வறுமை, போஷாக்குக் குறைவு ஆகியவற்றின் விளைவாக மலேரியாவின் தாக்கத்தைத் தாங்குவதற்குச் சக்தியற்றிருந்த பல்லாயிரக்கணக்கான கிராம மக்கள் அதற்குப் பலியாகினர். உதாரணமாக, 1934ல் முதல் 8 மாதங்களில் மேற்கு மாகாணத்தில் மட்டும் 1,25,000 பேர் மலேரியாவால் மரணமடைந்தனர்.

பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்குக் காலனி அரசாங்கத்திடமிருந்து நிவாரணம் கிடைக்கவில்லை. சூரிய மலர் ஊழியர்கள் தங்கள் ஸ்தாபனத்தின் முழு பலத்தையும், மற்றும் ஆதரவு சக்திகளையும் உபயோகித்து பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினர். ஹோமகம



தொட்டுருவான்வெல, மாவனெல்லை வரையுள்ள கிராமங்களில் முகாம்கள் அமைத்துப் பணியாற்றிய விசேட நிவாரணக் கோஷ்டிகள் நோய்வாய்ப்பட்ட மருந்துகளையும் உணவு வகைகளையும் அவர்களுக்கு வழங்கி வந்தனர். பின்னர் அரசாங்கமும் நிவாரணம் வழங்க முன்வந்தது. அரசாங்க நிவாரண நடவடிக்கைகளிலும் பார்க்க சூரிய மலர் ஊழியர்கள் வழங்கிய நிவாரணம் மிகச் சிறந்ததாகவும் பயனுள்ளதாகவும் இருந்ததால், அரசாங்கம் தனது நிவாரணங்களைச் சூரிய மலர் ஊழிகள் வாயிலாகக் கிராம மக்களுக்கு வழங்கியது.

சூரிய மலர் ஊழியர்கள் மலேரியா பரவியிருந்த சமயத்தில் செய்த சேவை, அவர்களுக்கு ஏகாதிபத்திய சுரண்டலின் விளைவுகள் பற்றியும் கிராம விவசாயிகளின் வறுமை பற்றியும் அறிந்து கொள்வதற்கான ஒரு மாபெரும் படிப்பினையாக அமைந்தது. அது அவர்களின் ஏகாதிபத்திய—எதிர்ப்பு உணர்ச்சியை தீவிரப்படுத்தியதுடன், அந்த பிரதேசங்களில் மக்களோடு நீடித்து நிற்கும் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு உதவியது கம்யூனிஸ எதிர்ப்பும் மார்க்ஸிஸப் பூச்சாண்டியும் இலங்கையில் அதிக பயனளிக்க முடியாமல் போனதற்கு இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்த முன்னோடிகளின் ஆரம்ப சேவையும் ஒரு காரணமாகும்.

இந்த இயக்கங்களைத் தவிர, ஏகாதிபத்திய — எதிர்ப்புக் கிளர்ச்சியை நடத்திய வாலிபர் சங்கங்கள் பல நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்பட்டன. இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளால் நடத்தப்பட்ட ஆரம்ப வேலை நிறுத்தப் போராட்டங்களில் 1933ல் நடைபெற்ற வெள்ளவத்தை நெசவாலைத்தொழிலாளர் வேலை நிறுத்தம் மிகவும் பலமானதாகும்.

1935 டிசம்பர் 18ந் திகதி இலங்கை சமசமாஜக் கட்சியை அமைப்பதற்கு இவை அனைத்தும் வழிவகுத்தன. பிரகடனப்படுத்தப்பட்ட கட்சியின் நோக்கங்களாவன:-(1) தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்தல் (2) உற்

பத்தி சாதனங்களையும், விநியோகம், பண்டமாற்று ஆகியவற்றையும் சோஷலிஸ மயமாக்குதல். (3) பொருளாதார, அரசியல் ஏற்றத் தாழ்வுகளையும், வர்க்க, இன, சாதி, சமய, பால் வேறுபாடு முதலிய வித்தியாசங்களிலிருந்து ஏற்படும் அடக்கி ஒடுக்குதலையும் ஒழித்தல். இலங்கை அரசியல் வரலாற்றிலே இத்தகைய நோக்கங்களைப் பிரகடனப்படுத்திய முதலாவது கட்சி சமசமாஜக் கட்சியே.

1935ம் வருட சமசமாஜக்கட்சி அப்போதைய இலங்கையின் ஏகாதிபத்திய— எதிர்ப்பு முற்போக்கு இயக்கத்தினது வளர்ச்சியின் பெரும்பாலும் தீவிர குட்டி—பூர்ஷுவாக்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், பல விடயங்களில் அந்தச் சமுதாயப் பகுதியின் தன்மையைப் பிரதிபலிப்பதாகவும் இருந்தது. அது சித்தாந்த ரீதியாக நிலைபெற்ற அல்லது ஒரே இயல்புள்ள சோஷலிஸ்ட் கட்சியாக இருக்கவில்லை. ஆனால் குட்டி—பூர்ஷுவா தீவிரவாதிகள் தொட்டு கம்யூனிஸ்டுகள் ஈறாக பல்வேறு ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை ஒன்று சேர்த்த ஒரு தொய்ந்த ஸ்தாபனமாக இருந்தது.

1935 முதல் 1939வரை யுத்த—முற்கால சமசமாஜக்கட்சி அநேக ஏகாதிபத்திய — எதிர்ப்பு, பிரபுத்துவ—எதிர்ப்பு இயக்கங்களை நடத்தி மக்களிடையே கணிசமான செல்வாக்கையும் பலத்தையும் பெற்றது. அன்று ஏகாதிபத்திய — எதிர்ப்பு, முற்போக்கு இயக்கங்களின் கேந்திர ஸ்தானமாக அது விளங்கியது. தேசிய சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்திலே இலங்கையிலுள்ள எல்லா ஏகாதிபத்திய — சக்திகளையும் ஒன்று சேர்ப்பதற்கு அது முயற்சி செய்தது. அது சோஷலிஸ்ட் சோவியத் யூனியனின், ஐரோப்பிய பாசிஸ்ட் — எதிர்ப்புப் போராட்டங்கள், இதர காலனி மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஆகியவற்றுடன் ஒத்துழைத்து வந்தது.



டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா, எம். ஜி. மெண்டிஸ், காலஞ்சென்ற யூ. சரணங்கரதேரோ, கே. இராமநாதன், டப்ளியூ. ஆரியரத்ன, டி. பி. யசோதிஸ், டி. துரைசிங்கம் ஆகிய கம்யூனிஸ்டுகளும் மற்றும் பலரும் சமசமாஜக்கட்சியின் ஆரம்பகாலப் போராட்டங்களில் முக்கிய பங்கெடுத்து முன்னணியில் நின்று செயலாற்றினர் எம். ஜி. மெண்டிஸ் கட்சியில் கூட்டுக் காரியதரிசியாக இருந்தார். கே. இராமநாதன் கட்சிப் பத்திரிகையொன்றின் ஆசிரியராகப் பணியாற்றினர். மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் பிரசுரங்களைப் பிரபலப்படுத்துவதையும், விநியோகிப்பதையும் டி. துரைசிங்கம் பொறுப்பேற்று நடத்தினர்.

யுத்த—முற்கால சமசமாஜக் கட்சி செய்து வந்த நல்ல வேலைகள் 1939ல் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானதும் தடைபட்டன. இது சர்வதேச அரங்கிலே கம்யூனிஸத்திற்கு எதிராக உலகெங்கினும் கடுமையான இயக்கம் நடைபெற்ற காலகட்டமாகும். உள்நாட்டிலே, குறிப்பாக பிரிட்டிஷாருக்குச் சொந்தமான தோட்டங்களிலே வேலை நிறுத்தங்கள் பொங்கியதையொட்டி இடதுசாரி இயக்கத்திற்கு எதிராக அடக்குமுறை ஆரம்பமாயிற்று.

இந்தக் கட்டத்தில் டிராஸ்ட்கிஸத்தின் செல்வாக்கில் சிக்கிய சமசமாஜக் கட்சித் தலைவர்கள் சிலர், ''மூன்ருவது அகிலத்தின் மீது கட்சிக்கு நம்பிக்கையில்லை'' என்ற தீர்மனத்தைக் கட்சி நிர்வாகக் குழுவில் பிரேரேபித்தனர்.

சமசமாஜக்கட்சியிலிருந்த கம்யூனிஸ்ட்டுகள் இத்தீர்மானத்தை வாபஸ் வாங்கும்படி வற்புறுத்தினார்கள். இத்தீர்மானம் பிழையானது மட்டுமின்றி, இந்த நெருக்கடியான கட்டத்தில் கட்சியைப் பிளவுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதுமாகும் என்று அவர்கள் விளக்கிக் கூறினர். ஏகாதிபத்தியத்துக்கும் யுத்தத்திற்கும் எதிராகப் போராடும் பொருட்டு கட்சியின் ஐக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்கள் கடுமையாகப் போராடினர்.

ஆனால் இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நிர்வாகக்குழு வலியுறுத்தியது. தீர்மானத்தை எதிர்த்த நிர்வாகக்குழு அங்கத்தவர்களான டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா, எம். ஜி. மெண்டிஸ், டப்ளியூ. ஆரியரத்ன, கே. இராமநாதன், ஏ. குணசேகரா ஆகிய ஐவரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்த நிலையைப் புனராலோசனை செய்வதற்காக ஒரு விஷேட மகாநாட்டைக் கூட்டும்படி கோரி சமசமாஜக் கட்சி அங்கத்தினர்கள் 70 பேர் கட்சி நிர்வாகக் குழுவுக்கு ஒரு வேண்டுகோள் சமர்ப்பித்தனர். அவர்களின் சார்பில், ''சமசமாஜிஸமும் முன்னாலுள்ள பாதையும்'' என்னும் தலைப்பின் கீழ் ஏ. வைத்தியலிங்கம் எழுதிய உள் — கட்சிப் பிரசுரமொன்று 1940 மே 11ந் திகதி வெளியிடப்பட்டது. இந்தப் பிரசுரம் மூன்றாவது (கம்யூனிஸ்ட்) அகிலத்தின் கொள்கைகளை ஆதரித்ததுடன் அவற்றை விளக்கியும் கூறியது; சமசமாஜக் கட்சியினுள் நெருக்கடிக்கான காரணங்களை விமரிசனம் செய்தது. கட்சியினுள் விவாதிக்கப்படும் இந்த விசயத்தை இக்கட்டத்தில் எதேச்சாதிகாரமாகக் கொண்டு வந்ததைக் கண்டித்து; ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட்டத்தை நடத்வதுதற்காக கட்சியின் ஐக்கியத்தையும் மக்கள் மத்தியில் வேலை செய்யவேண்டிய அவசியத்தையும் வறுபுறுத்தியது.

இந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கப்படவில்லை. 70 அங்கத்தினர்களில் சிலர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். மற்றவர்கள் கட்சியிலிருந்து வெளியேறினர். கடந்த பத்தாண்டுகளாக வளர்ந்து வந்த ஐக்கிய இடதுசாரி இயக்கம் 1940ல் கம்யூனிஸ — எதிர்ப்பை முன்னிறுத்தியதால் இவ்வாறு பிளவுபட்டு போயிற்று.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட கம்யூனிஸ்ட்டுகள் தங்களின் சகாக்களுடன் 'சேர்ந்து ''தொழிலாளர் கிளப்'' என்னுமிடத்தில் தங்களின் தலைமை நிலையத்தை நிறுவிக் கொண்டனர். இது முதலில் கொழும்பு ஹல்ஸ்டோப்



வீதி 81ம் எண் கட்டிடத்திலும், பின்னர் கொழும்பு வில்சன் வீதி 37ம் இலக்க கட்டிடத்திலும் அமைந்திருந்தது. இத்தலைமை நிலையத்திலிருந்து அவர்கள் தொழிற் சங்கங்களை நிறுவவும், தொழிலாளர்கள் மத்தியில் மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் போதனா வகுப்புகளை நடத்தவும், பத்திரிகைகள் சோஷலிஸ்ட் பிரசாரங்கள் ஆகியவற்றை வெளியிடவும் ஆரம்பித்தனர்.

சில மாதங்களுக்குப் பின்னர் — 1940 நவம்பரில் பேலியகொடை என்னுமிடத்தில் ஒரு மாநாடு நடத்தி ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியை (ஐ. சோ. க.) ஸ்தாபித்தனர். பிற்காலத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாகப் பரிணமித்தது இந்த ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சிதான்.

டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா, பீட்டர் கெனமன் (வெளிநாடுகளில் கல்வி கற்று அப்பொழுதுதான் இலங்கைக்குத் திரும்பி இருந்தார்.), எம். ஜி. மெண்டிஸ் ஏ. வைத்தியலிங்கம், கே. இராமநாதன், டப்ளியூ. ஆரியரத்னா ஆகியோரும் காலஞ்சென்ற யூ.சரணங்கரதேரோ, பி. கந்தையா, லயனல் குலதுங்க, கே. ஏ. சிரிரத்னா முதலியோரும் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியை நிறுவுவதற்கான நிலையை உருவாக்குவதற்காக அயராது பாடுபட்டவர்களிற் சிலராவர். பீட்டர் கெனமன் ஐ. சோ. க. யின் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1930க்குப் பிந்திய பத்தாண்டுகளின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லவும், மார்க்ஸிஸ-லெனினிஸ அடிப்படையில் அவற்றை வளர்க்கவும் ஐ. சோ. க. பாடுபட்டது. பிற்காலத்தில் ஐ. சோ. க. பற்றி விளக்கிக் கூறும் போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் காரியதரிசி பீட்டர் கெனமன் குறிப்பிட்டதாவது:—

''கொள்கையிலும் ஸ்தாபன அமைப்பிலும் ஐ. சோ. க. கம்யூனிஸ்ட் கட்சியை ஒத்திருந்தது. அது மார்க்ஸிஸம் — லெனினிஸத்தை' ஏற்றுக்கொண்டது. ஜனநாயக ரீதியாக ஒரு முகப்படுத்தல் என்னும் கொள்

கையின் மீது தனது ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்பியது. லெனின் தோற்றுவித்த புதுவிதக்கட்சி அடிப்படையில் தன்னை உருவாக்கிக் கொண்டது. ஆனால், நாம் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி என்று அப்பொழுது கூறிக் கொண்டிருந்தோமானால், அது பிழையாக இருந்திருக்கும். ஏனெனில், நாம் அன்று அந்தக் கட்டத்துக்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. நாம் அன்றுவரை தொழிலாளருடனும், பொது மக்களுடனும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டும், அனுபவம் பெற்றுக்கொண்டுமே இருந்தோம். ஐ. சோ. க. நமது வளர்ச்சிக்கு ஓர் அவசியமான கட்டமாக இருந்தது. 1930க்குப் பிந்திய பத்தாண்டுகளிலும் தோன்றிய தொழிலாளர் ஸ்தாபனங்களிலிருந்து (1943ல் நிறுவப்பட்ட) கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறிய ஒரு மாற்றத்தையே ஐ. சோ. க. குறிக்கிறது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை அமைப்பதற்கான அடிப்படையை உருவாக்கியதும் அதனை அமைப்பதைச் சாத்தியமாக்கியதும் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியே''

பலம்வாய்ந்த தொழிலாளர் வர்க்க ஸ்தாபனங்களைக் கட்டியெழுப்பி, அதன் மூலம் சோஷலிஸத்தைத் தொழிலாளர் வர்க்க இயக்கத்துடன் இணைத்தல் ஐ. சோ. க. மேற்கொண்ட முக்கிய கடமைகளில் ஒன்றாகும். 1920க்குப் பிந்திய புத்தாண்டுகளில் அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் திரு ஏ. ஈ. குணசிங்கா கூடுவிட்டுக் கூடுபாய்ந்த பின்னர் நாசமாக்கப்பட்டன. 1930க்குப் பிந்திய பத்தாண்டுகளில் சமசமாஜக் கட்சி உருவாக்கிய தொழிற்சங்க இயக்கம் அடக்குமுறையின் விளைவாகவும், திரு ஏ. ஈ. குணசிங்கா, திரு ஜே. எல். (பின்னர் சர்ஜோன்) கொத்தலாவலை போன்றவர்கள் தொழிலாள வர்க்க இயக்கத்தைப் பிளவுபடுத்தி நாசமாக்குவதற்கான கருவியாக வகுப்புவாதத்தை உபயோகித்ததாலும் பெரும் நெருக்கடிக்குள்ளாகியது.

அப்பொழுது முழு இலங்கையிலும் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 50க்கு குறைவாகவே இருந்தது. தொழில் இலாகாவில் ஒரு ''தொழிலாளர் கண்ட்ரோலரும்'' ஒரு சில சில்லரை



அதிகாரிகளுமே இருந்தனர். அவர்களின் முக்கிய கடமை முதலாளிகளின் நன்மையை முன்னிட்டு தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துவதாகவே இருந்தது. தொழிலாளர்கள் ஒரு சில உரிமைகளையும் சலுகைகளையும் மட்டுமே கொண்டிருந்தனர். 10—12 மணி நேர வேலைக்கு 60 அல்லது 70 சதம் போன்ற சொற்ப வேதனமே அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் பொதுவாக ''கூலிகள்'' என்று அழைக்கப்பட்டனர். முதலாளிகளும், காலனி அரசாங்கமும், அன்றைய ''சமுதாயமும்'' அவர்களை மிருகங்களைப் போல நடத்தினர். சம்பளத்துடன் விடுமுறை, ரஜா, மற்றும் சலுகைகள் பற்றி அவர்கள் தெரியாதிருந்தனர்.

5660

ஐ. சோ. க. கொழும்புத் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டி புதிய தொழிற்சங்கங்களைக் கட்டியெழுப்பி தொழிலாளர் போராட்டங்களை நடத்துவதில் ஈடுபட்டது. அவர்களின் இந்த வேலை சுலபமானதாக இருக்கவில்லை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் யுத்தகால இலங்கையை ஆட்சிபுரிந்த அட்மிரல் ஜொப்ரி லேட்டன் கையாண்ட சர்வாதிகார கொடிய ஆதிக்க அதிகாரங்களுக்கும் ஈடுகொடுத்து அவர்கள் செயல்படவேண்டியதாயிற்று.

அத்துடன், முதலாளிகளின் கையாட்களும், திரு குணசிங்கா ஏவிவிட்ட காடையர்களும் அவர்கள் மீது பலாத்காரம் பிரயோகித்தனர். கற்களும் போத்தல்களும் மழைபோல் பொழிய அவற்றின் மத்தியில் கூட்டங்கள் நடத்தவும், அடி உதைகளிலிருந்தும், கத்திக் குத்துக்குப் பலியாவதிலிருந்தும் தப்பி உயிரைப்பாது காத்துக்கொள்வதற்காக பாய்ந்தோடவேண்டிய நிலையும் கம்யூனிஸ்டுகளுக்கு அடிக்கடி ஏற்பட்டது.

ஆனால் ஏற்கனவே வறுமை வாய்ப்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை மிகத் துரிதமாக க்ஷீணிக்கத் தொடங்கியதால், ஐ.சோ. க. தொடர்ந்து உறுதியுடன் நடத்திய சேவை விரைவில் பயனளிக்கத் தொடங்கியது. அரசாங்கத்தின் புள்ளி விவரப் பகுதி

131542

யால் தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் 1940 கடைசியில் வாழ்க்கைச் செலவுகள் யுத்த முற்கால அளவிலும் பார்க்க 12 சத வீதம் கூடியிருந்ததை எடுத்துக் காட்டின. கொழும்பில் 381 தொழிலாளர் குடும்பங்களின் வரவு-செலவு பற்றி அரசாங்கம் நடத்திய பரிசோதனையிலிருந்து அநேகமாக அவர்கள் அனைவருமே கடனில் மூழ்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆதலின், வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளிக்கும் பொருட்டு சம்பள உயர்வுக்காகவும், பஞ்சப்படி உயர்வுக்காகவும் ஐ. சோ. க. நடத்திய போராட்டங்கள் மென்மேலும் அதிகமான தொழிலாளர்களைக் கவர்ந்திழுத்தன. 1940 டிசம்பரில் இந்தச் சங்கங்கள் ஒரு தனி சம்மேளனத்தில் இணைக்கப்பட்டன. அதுதான் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் (இப்பொழுது லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனம்). இதனையடுத்து, தொழிற்சங்கங்களின் அமைப்பில் மாறுதல் செய்யப்பட்டது. இதற்கு முன்பு கையாண்ட முறை ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தனித்தனி தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டதே இந்த முறை மாற்றப்பட்டு, ஒவ்வொரு தொழிலிலுமுள்ள தொழிலாளர்கள் அனைவரும் ஒரே தொழிற்சங்கத்தில் ஒன்று சேர்க்கப்பட்டனர்.

இந்த காலகட்டத்திற்குள் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த பிரபலமான சக்திவாய்ந்த சில தொழிற் சங்கங்கள் தோன்றின. பாதுகாப்பு சட்டங்களின் கீழ் நிறுவப்பட்டிருந்த சட்ட ஏற்பாடுகளின் உபயோகத்தைச் சட்ட விரோதமான வேலைநிறுத்தங்களுடன் மிகத் திறமையான முறையில் இணைத்து, இன்று கொழும்புத் தொழிலாளர் அனுபவிக்கும் வெற்றிகளில் பலதைக் கம்யூனிஸ்டுகள் படிப்படியாக வென்றெடுத்தனர். சட்டபூர்வமான குறைந்த பட்ச சம்பளம், சம்பளத்துடன் விடுமுறை, சம்பளத்துடன் காஷுவல் விடுமுறை, குறைந்தநேர வேலைநாள், ஓவர்டைம் வேலைக்கு ஒன்றரை மடங்கு சம்பளம்



இலவச மத்தியான போசனம், தவறாது வேலைக்கு ஆஜராவதற்கான போனஸ், வேலையில் உற்சாகம் ஏற்படுத்துவதற்கான போனஸ், நீண்டகால சேவைக்கான போனஸ், ஓய்வுகாலச் சம்பளம் போன்ற இன்னும் பல நன்மைகளே வென்றெடுத்த கோரிக்கைகள்.

இவ்வாறு செயலாற்றியதன் மூலம் தொழிலாளர்களிடையே, சிறப்பாக கொழும்புத் தொழிலாளர்களிடையே ஓர் உறுதியான அத்திவாரத்தைக் கம்யூனிஸ்டுகள் அமைத்தனர்.

ஆனால் கம்யூனிஸ்டுகள் இந்தச் சிறந்த சேவையைச் செய்து கொண்டிருந்தபோது ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் உள்ளூர் ஏஜண்டுகளும் சும்மா பார்த்துக் கொண்டிருக்கவில்லை. ஐ. சோ. க. காரியாலயமும், அச்சகமும் பொலீசாரால் அடிக்கடி சோதனையிடப்பட்டன. டாக்டர் விக்ரமசிங்கா, உடகெந்தவல சரணங்கர தேரோ, டி. பி. யசோதிஸ் போன்ற அதன் உறுப்பினர்கள் பலர் மீது வழக்குத்தொடர்ந்து அவர்களுக்கு நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

1942 மார்ச் மாதத்தில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காலனி அதிகார வர்க்கம் ஐ. சோ. கட்சியை சட்டவிரோதமாக்கியது. ஆகவே சட்டவிரோதமான வேலைகளுடன் சட்டரீதியான வேலைகளை எப்படி இணைப்பது என்பதை இந்த இளம் கட்சி செயல் பூர்வமாகக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

சட்டபூர்வமாக இயங்கும் பொருட்டு ''ஜப்பானிய-எதிர்ப்புப் பிரச்சார மத்திய நிலையம்'', ''தொழிலாளர் பொதஜன வட்டம்'' போன்ற பல்வேறு பெயர்களுடன் தோன்றி, ஐ. சோ. க. செயலாற்றத் தொடங்கியது. ஓர் ஸ்தாபனத்தைப் பொலீசார் சோதனையிட்டு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அதனைத் தடைசெய்த பொழுது, அதன் இடத்தை மற்றொரு ஸ்தாபனம் தோன்றி நிரப்பிவிடும். இவ்வாறு பல்வேறு பெயர்களுடன் தோன்றி பணியாற்றிய செயல் திட்டம் எவ்வ

ளவுதூரம் ஒழுங்காக நடைபெற்றதென்ருல், அப்போதைய உள்நாட்டு விவகார மந்திரி சர். ஏ.மகாதேவா ''கம்யூனிஸ்டுகளைச் சட்டவிரோதமாக்குவதில் பயனில்லை. ஒரு பெயரின் கீழ் அவர்களைச் சட்டவிரோதமாக்கும் போது, மற்ருெரு பெயருடன் அவர்கள் அதே வேலையைச் செய்கின்றனர்'' என்று பாராளுமன்றத்தில் கவலையுடன் கூறவேண்டியதாயிற்று.

சட்ட விரோதமானதும்; சட்டபூர்வமானதுமான வேலைகளைச்செய்துவந்த இந்தக் காலகட்டத்தில் இலங்கையில் ஓர் உண்மையான மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சியை உருவாக்குவதற்கான அடிப்படையை அமைக்கும் ஆரம்ப வேலைகளை ஐ. சோ. க. பூர்த்தி செய்தது. இலங்கை சோஷலிஸ்ட் கட்சிபோன்ற ஏனைய சோஷலிஸ்ட் கட்சிகளுடன் தொடர்புகொண்ட ஐ. சோ. க. அவற்றின் அங்கத்தினர்களையும் தனது கட்சியில் சேர்த்துக்கொண்டது.

இவ்வாறு,சட்டவிரோதமான நிலைமையில்,ஐ.சோ.க. அங்கத்தினர்கள் 1943, ஜுலை 2-3ந் திகதிகளில் பொரளை கொட்டா வீதி 85ம் எண் கட்டிடத்தில் கூடி, ஓர் இரகசிய மகாநாடு நடத்தினர். மகாநாட்டின் இரண்டாவது நாள் கூட்டத்தில் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியைக் கலைத்துவிடுவதென்றும், அதனிடத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.



## இரண்டாவது அத்தியாயம்

# சுதந்திரப் போராட்டம்

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அன்ருட வேலைகள் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மத்தியக் குழுவின் தலைமையில் நடைபெற்று வந்தன. பீட்டர் கெனமனைக் காரியதரிசியாகக் கொண்ட அந்தக் குழுவில் பீட்டர் கெனமன், ஏ. வைத்தியலிங்கம், டி.ஸி. வியனகே, பி.சங்கர், டப்ளியூ ஆரியரத்ன ஆகியோர் அங்கம் வகித்தனர். கட்சியின் அங்கத்தினர் தொகை குறைவாக இருந்ததால் கட்சியை எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகள் பற்றி முடிவு செய்வதற்காக அங்கத்தினர்களின் பொதுச் சபைக் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டன. 1944 ஜுலை 2ந் திகதி நடைபெற்ற முதலாவது வருடாந்த மகாசபைக் கூட்டத்தில் ஜனநாயக ரீதியாக ஒருமுகப் படுத்தும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட கட்சி விதிகள் அங்கீகரிக்கப்பட்டன.

கட்சி விதிகளில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது:—

''கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படை நோக்கம் சோஷலிஸ்ட் இலங்கையை உருவாக்குவதே. பாதுகாப்பு, வேலை செய்வதற்கும் ஓய்வுபெறுவதற்குமுள்ள உரிமை, வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ந்து உயர்த்துதல், விடுதலை, சுதந்திர சுபீட்ச வாழ்வுக்கான சமசந்தர்ப்பம் ஆகியவற்றைப் பெறுவதற்காக ஒவ்வொரு

பிரஜைக்கும் உத்தரவாதமளிக்கும் பொருட்டு பொருள், உற்பத்தி, விஞ்ஞான வளங்களைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடக் கூடியதாக சோஷலிஸ்ட் இலங்கை தேசிய பொருளாதாரத்தில் பொது உரிமையை நிலை நிறுத்தும்; மனிதனை மனிதன் சுரண்டுவதையும், தேசிய இனத்தைத் தேசிய இனம் சுரண்டுவதையும் ஒழித்து விடும்; சமுதாயத்தில் நிலவும் வர்க்க பேதங்களை அகற்றிவிடும்.

கட்சி விதிகள் மேலும் கூறியதாவது;— இந்த அடிப்படை நோக்கத்தை வளர்க்கும் பொருட்டு பாசிஸ்ட் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காகவும், ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெறுவதற்காகவும் இலங்கை மக்களில் நாட்டுப்பற்றுள்ள பகுதியினரைக் கொண்ட ஒரு தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவது கட்சியின் உடனடிக் கடமையாகும் சுதந்திர இலங்கையைப் பெறுவதற்காக விடுதலையை விரும்பும் ஸ்தாபனங்களுடனும், மக்கள் பகுதியினருடனும் ஒத்துழைக்க கட்சி முயற்சி செய்யும். அந்த சுதந்திர இலங்கை பரிபூரண ஜனநாயகத்தையும், தேசிய இனங்களிடையே சமத்துவத்தையும், கிராமப்புறங்களிலுள்ள நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை அகற்றுவதையும், சிறந்த வாழ்க்கைத் தரத்துக்கான பாதுகாப்பையும், சிவில் சுதந்திரங்களையும், ஒவ்வொரு பிரஜைகளுக்கும் உத்தரவாதமளிப்பதுடன் உலகில் எல்லா நாடுகளுடனும் நெருக்கமாகவும், நட்புடனும், சுதந்திரமாகவும், சமநிலையில் ஒத்துழைக்கும்

கட்சிவிதிகளில் தொடர்ந்து குறிப்பிட்டிருப்பதாவது:—

''இந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, ஒடுக்குதலும் - யுத்தமுமற்ற ஓர் உலகத்தையும், மனிதனின் பொது சகோதரத்துவத்தையும் உருவாக்கும் பொதுப் போராட்டத்திலே இதர நாடுகளின்



தொழிலாளருடனும் மக்களுடன் தோளோடு தோள் நிற்பதற்கு இலங்கைத் தொழிலாளர்களையும் மக்களையும் கம்யூனிஸ்ட் கட்சி வழிநடத்திச் செல்லும்''

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட பீட்டர்கெனமனையும், ஏ. வைத்திலிங்கத்தையும் நிறுத்தியது மூலம் 1943 கடைசியில் கம்யூனிஸ்ட் கட்சி முதன் முதலாகத் தேர்தல் போராட்டத்தில் குதித்தது. வலதுசாரி ''தொழிலாளர்'' தலைவரான குணசிங்காவுடன் அவரதுகோட்டையாயிருந்த பொரளை வட்டாரத்தில் போட்டியிட்டதன் மூலம் சிங்கத்தை அதன் குகைக்குள் வைத்தே தாக்குவதற்குக் கெனமன் முன்வந்தார். பெரிய முதலாளியான மூசாஜியை எதிர்த்து வைத்திலிங்கம் ஹுனுப்பிட்டி வட்டாரத்தில் போட்டியிட்டார்.

இத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால், கம்யூனிஸ்ட் மாநகரசபை அங்கத்தினர்கள் மாநாகரசபை நிர்வாகத்தில் இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழிப்பதற்காகவும், வீட்டு வாடகைகளைக் குறைப்பதற்காகவும், பல்வேறு மாநகரசபை சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும், சேரிகளை ஒழிப்பதற்காகவும், வீடமைப்புத் திட்டங்களைக் கொண்டுவருவதற்காகவும், ஏழைப் பிள்ளைகளுக்குப் பாலும், பாடசாலைப் புத்தகங்களும் இலவசமாக வழங்குவதற்காகவும் பாடுபடுவார்கள் என்று கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் இருவரும் தோற்கடிக்கப்பட்டனரெனினும், அவர்கள் கணிசமான வாக்குகளை பெற்றனர். அவர்களின் தீவிர பிரசாரத்தினால் பெரும் பகுதி மக்களுக்குக் கட்சி தனது கொள்கைகளைத் தெளிவு படுத்த முடிந்தது.

ஐ. சோ. க. தடைசெய்யப்பட்ட பின்னர் ஒரு சட்டவிரோதக் கோஷ்டியாகப் பணியாற்றிவந்த கம்யூனிஸ்டுகள், இலங்கைத் தேசிய காங்கிரஸில் தனிப்

பட்ட அங்கத்தினர்களாகச் சேரவேண்டுமென்றுசெய்தி ருந்த முடிவு கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்த மகா நாட்டில் அங்கீகரிக்கப்பட்டது.

1942 வரை இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டி நின்றவர்கள் இடதுசாரிக் கட்சிகள் மட்டுமே. 1942 டிசம்பரில் களனியில் நடைபெற்ற இலங்கைத் தேசிய காங்கிரஸ் மகாநாட்டில் திரு. டி. எஸ். சேன நாயக்காவின் கடுமையான எதிர்ப்புனூடே, அதன் டொமினியன் அந்தஸ்து கோரிக்கை பூரண சுதந்திரக் கோரிக்கையாக மாற்றப்பட்டது. இந்தத் தீர்மானத் தின் விளைவாக திரு. சேனநாயக்கா தான் அப்பொழுது காங்கிரஸில் வகித்த தலைமைப் பதவியை ராஜினாமா செய்தார்.

1943ல் அம்பலாங்கொடையில் நடைபெற்ற இலங் கைத் தேசிய காங்கிரஸ் மகாநாடு கம்யூனிஸ்டுகளைத் தனிப்பட்ட அங்கத்தினர்களாகக் காங்கிரஸில் சேர்த் துக் கொள்வதென்று தீர்மானித்தது. இதனால் ஆத்திர மடைந்த திரு. டி. எஸ். சேனநாயக்கா தேசிய காங் கிரஸின் அங்கத்தினர் பதவியிலிருந்து ராஜினாமா செய் துவிட்டார்.

பீட்டர் கெனமன் பின்னர் எழுதிய ஒரு கட்டுரை யில் கம்யூனிஸ்டுகள் தேசிய காங்கிரஸில் சேர்ந்த கார ணங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார். அவர் கூறியதா வது:-

''சோஷலிஸ்ட் இலங்கையை உருவாக்குவதே கம் யூனிஸ்ட் கட்சியின் நோக்கம். நமது நாட்டில் முதலில் தேசிய சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டாலன்றி, சோஷலிஸத்துக்கு வேறு பாதை கிடையாதென்பது மார்க்ஸியவாதிகள் என்றமுறையில் கம்யூனிஸ்டுகளான எமக்குத் தெரியும். சுதந்திரம் பெற்றாலன்றி, நமதுநாடு தனது ஜனநாயகப் புரட்சியைப் பூர்த்திசெய்ய முடி யாது; அதன் வாயிலாக சோஷலிஸத்தை நோக்கி தொடர்ந்து முன்னேற பாதையைத் திறந்துவிடவும் முடியாது.



''நமது கட்சி தொழிலாளர் வர்க்கத்தின் முன்ன ணிப் படையாகும். ஆதலின், சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்துக்காகவும் நடைபெறும் போராட்டத்திற் குத் தொழிலாளர் வர்க்கம் தலைமைதாங்க வேண்டுமே யன்றி, அதனின்று விலகிநிற்க முடியாது என்பது நமக் குத் தெரியும். சுதந்திரம் கோரி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராயுள்ள எல்லா வர்க்கத்தினருடனும், மக்கள் பகுதியினருடனும்-குறிப் பாக விவசாயிகளுடனும் தீவிர விவேகிகளுடனும்-கட்சி ஒத்துழைக்க வேண்டும். சோஷலிஸத்தை நோக்கி முன் னேறுவதின் வேகமும் கஷ்டத்துக்கு உட்படும் அளவும், சுதந்திரப் போராட்டத்தில் ஏனைய பகுதியினருக்குத் தொழிலாளர் வர்க்கம் எவ்வளவு தூரம் தலைமை தாங்க முடியும் என்பதைப் பொறுத்தேயிருக்கின்றன.

''ஆகையாற்றான், காங்கிரஸ் 1942ல் சுதந்திரமே தனது இலட்சியம் என்று தீர்மானித்தபொழுது, கம்யூ னிஸ்டுகள் அதில் சேர்ந்தனர். காங்கிரஸின் சீர்திருத்த வாத, காட்டிக் கொடுக்கும் பழைய செயல்களை நாம் நன்கு தெரிந்து வைத்திருந்தோம். சுதந்திரம், ஜனநாய கம், இலங்கையில் பல்வேறு மக்களிடையே அரசியற் சமத்துவம், நாட்டின் பூரண பொருளாதார அபி விருத்தி, ஆகியவற்றை அடைவதற்கான பல்வேறுதேசிய இனங்களையும், வர்க்கங்களையும் கொண்ட ஒரு போராட்ட முன்னணியில், எல்லா வர்க்கங்களையும், இனங்களையும் சேர்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை ஒன்று சேர்க்கும் ஒரு மக்கள் ஸ்தாபனமாகக் காங்கிர ஸைக் கட்டியெழுப்ப முடியுமென்று நாம் எதிர்பார்த் தோம்.''

இலங்கைக்குப் பூரண தேசிய சுதந்திரம் வேண்டு மென்ற நோக்கத்தை மக்களிடையே பிரசாரம் செய்வ தற்காகவும், அந்த நோக்கத்தை அடைவதற்காக சுதந்தி ரம் கோரும் எல்லா மக்கள் பகுதியினரையும் கொண்ட ஒரு தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டி யெழுப்புவதற் காகவும் கம்யூனிஸ்டுகள் இலங்கை தேசிய காங்கிரஸ் வாயிலாகக் கிளர்ச்சி செய்தனர். பீட்டர் கெனமன்,

ஏ. வைத்திலிங்கம் சிறையிலிருந்து விடுதலையான பின்னர் டாக்டர் விக்ரமசிங்கா ஆகியோர் காங்கிரஸ் செயற்குழுவின் அங்கத்தினர்களாயினர்.

1944ல் அறிவிக்கப்பட்ட சோல்பரிக் கமிஷனைப் பகிஷ்கரிப்பதில் கலந்து கொள்ள காங்கிரஸைச் சம்மதிக்கச் செய்வதில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர். சோல்பரி கமிஷனுக்கு எதிராகவும், இலங்கைக்குப் பூரண அரசியல் சுதந்திரம் கோரியும் நாடெங்கினும் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதிலும் அவர்கள் காங்கிரசுடன் சேர்ந்து பணியாற்றினர்.

மூன்று பிரிட்டிஷார் கூடி நமக்காகத் தயாரிக்கப்படும் ஓர் அரசியற் சட்டத்தை வெறுமனே ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, சுதந்திரத்தையும் ஒரு சுதந்திர அரசியற் சட்டத்தைக் கோரும் ஓர் ஐக்கிய கோரிக்கையை உருவாக்கும் பொருட்டு சர்வகட்சி மகாநாடு ஒன்றினை நடத்துவதற்காக தனது சுயேச்சையான இயக்கத்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அதே சமயத்தில் தனியாக நடத்தியது.

''வெற்றிக்காகவும், சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் ஒன்று படுக!'' என்ற மத்திய போர் கோஷத்தின் கீழ் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது காங்கிரஸ் 1935 ஏப்ரல் 6,7,8ந் திகதிகளில் கொழும்பு பி. டி. எஸ். மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை முழுவதிலுமுள்ள கட்சி ஸ்தாபனங்களின் 109 பிரதிநிதிகள் இக்காங்கிரசில் கலந்து கொண்டனர். அவர்களில் 31 பேர் கட்சி முழுநேர ஊழியர்களாவர். தொழிற்சாலைத் தொழிலாளர்கள், தொழிற்சங்கவாதிகள் 34 பேரும், பெண்கள் ஏழு பேரும் இக்காங்கிரசில் பங்குபற்றினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சகோதரப் பிரதிநிதியாக பி. இராமமூர்த்தி காங்கிரசில் கலந்து கொண்டார். பிரிட்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து வாழ்த்துச் செய்திகள் கிடைத்



தன. அப்பொழுது நமது கட்சி தொடர்பு கொள்ள கூடியதாயிருந்ததை இந்தச் சகோதரக் கட்சிகள் மட்டுமே.

கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கட்சியின் வேலைகளையும், அதன் அப்போதைய கொள்கையையும் விளக்கி கட்சி மத்தியக்குழு தயாரித்த அறிக்கையை கட்சிப் பொதுக்காரியதரிசி பீட்டர் கெனமன் சமர்ப்பித்தார். காங்கிரஸ் அதனை விவாதித்து அங்கீகரித்தது. இந்தக் கொள்கை காங்கிரஸ் அங்கீகரித்த நான்கு முக்கிய தீர்மானங்களில் விளக்கிக்கூறப்பட்டது. (1) தேசிய ஐக்கியம். (2) தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமை. (3) சுதந்திரம், யுத்த பிற்கால பொருளாதார வளர்ச்சி. (4) கட்சி ஸ்தாபன அமைப்பு என்பனவற்றைப் பற்றியதே அத்தீர்மானங்கள்.

பாசிஸம் தோற்கடிக்கப்பட்டதின் விளைவாக சுதந்திரம், ஜனநாயகம் பற்றி உலகெங்கினும் தோன்றியுள்ள விழிப்பின் அளவுக்கு இலங்கையை எப்படிக் கொண்டுவர முடியும் என்ற கோரிக்கையைத் தேசிய ஐக்கியம் பற்றிய தீர்மானம் எழுப்பியது.

இத்தீர்மானம் கூறியதாவது:—

''பாசிஸ, ஏகாதிபத்திய சக்திகள் மிக வலுவிழந்திருப்பதும், தொழிலாளர் வர்க்க, ஜனநாயக சக்திகள் மேலும் பலமடைந்திருப்பதும் இன்று தெளிவாகத் தெரிகின்றன. உலக ஏகாதிபத்திய தளைகள் தொய்ந்து விட்டன. உலக சுதந்திரப் பிணைப்பு நாள் தோறும் வலுவடைந்து வருகிறது........

''மனித வர்க்கத்தின் நீண்டகாலக் கனவுகள் உலகில் ஆறில் ஒரு பகுதியான சோவியத் நாட்டிலே ஏற்கனவே நனவாகிவிட்டன. இன்று அவற்றை உலக ரீதியாக நனவாக்க முடியும். ஒரு புதிய உலக நிலை நம் கைக்கு எட்டிய தூரத்திற்கே வந்து விட்டது. அதுதான் பயத்திலிருந்தும் விடுபட்ட ஓர் உலகம்; பெரிய சிறிய பலமான பலவீனமான நாடுகளின் ஆதிபத்திய சமத்து

வத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் உலகம்; உலக சோஷலிஸத்தையும் துரித அபிவிருத்தியையும் உத்தர வாதப்படுத்தும் ஓர் உலகம்.

''காலனி மக்கள் எஜமானர்களை மாற்றிக் கொள்வதை விரும்பவில்லை. அவர்களின் கீழ் தொடர்ந்திருக்கவும் அவர்கள் விரும்பவில்லை. அடிமைத்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், சுயாதிபத்திய நாடுகள் என்ற முறையில் உலகத்தின் எதிர்காலத்தை உருவாக்குவதில் தங்களின் கடமையை நிறைவேற்றவும் அவர்கள் உறுதி பூண்டுள்ளனர்.

இலங்கையின் அரசியல் நிலைமை பற்றி அத்தீர்மானம் கூறியதாவது:—

''நமது சுயநிர்ணய உரிமையை மறுக்கும், நமது பொருளாதார முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் வெட்கங் கெட்ட இழிவான ஒரு ''சீர்திருத்த திட்டத்தை'' ஏகாதிபத்தியவாதிகள் நம்மீது திணித்துள்ளனர். சர்வஜன வாக்குரிமையைக் கைவிட்டு, வெளிநாட்டு முதலாளிகளின் நலன்களைப் பாதுகாத்து பிற்போக்கான மூதவை ஒன்றினைப் பெற்றுக் கொள்வதின் மூலம் மக்களின் தற்போதைய உரிமைகளையும் கூட கட்டுப்படுத்துமாறு வற்புறுத்துவதற்காக உள்நாட்டுப் பிற்போக்குவாதிகள் இந்த ''சீர்திருத்தத் திட்டத்தை'' ஏற்றுக்கொள்ள முயற்சி செய்கின்றனர்.

''தேசிய ஐக்கியக்குறைவு, ஒன்றுபட்ட நாட்டினது பலத்தின் மீது நம்பிக்கையில்லாமை, ஏகாதிபத்திய ''சீர்திருத்தங்கள்'' மீது இன்னும் நம்பிக்கை வைத்திருத்தல் ஆகியவைகளே நமது அரசியல் முன்னேற்றத்தைத் தடைசெய்து, ஏகாதிபத்திய அரசியல் விளையாட்டை முறியடிப்பதிலிருந்தும், ஒரு சுதந்திர உலகில் நமது சுதந்திரத்தை வென்றெடுப்பதிலிருந்தும் நம்மைத் தடுத்துக்கொண்டிருக்கின்றன.

'இச்சீர்திருத்தக் கொள்கையையும், 'சீர்திருத்தத் திட்டங்களை'' ஏற்றுக்கொள்ளும் கொள்கையையும்



கைவிடுவதின் மூலமும், நமது மக்களை ஐக்கியப்படுத்தி ஒன்று திரட்டுவதின் மூலமே நாம் சுதந்திரத்தை நோக்கி முன்னேற முடியும்.

''ஆகவே சோல்பரி கமிஷனைப் பகிஸ்கரிப்பதென்று இலங்கை தேசிய காங்கிரசும், சிங்கள மகாசபையும், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசும் செய்த முடிவை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இராஜாங்க சபை இந்த ''சீர்திருத்தத் திட்டத்தை'' நிராகரித்ததையிட்டு கட்சி மகிழ்ச்சியடைகிறது.

''சீர்திருத்த திட்டத்தை'' யும், பொதுவாக சீர்திருத்தங்களையும் பூரணமாக நிராகரிப்பதை பற்றி இந்த முகாமில் ஊசலாடும் போக்கு இன்னுமிருக்கிறது என்று கட்சி எச்சரிக்கிறது. இந்த முன்னணியை உறுதிப்படுத்துவதற்காகவும், சுதந்திரம், சுதந்திர அரசியற் சட்டம் ஆகியவற்றைப் பெறுவதற்கு இலங்கைக்குள்ள உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வென்றெடுப்பதற்காகவும், இந்த ஊசலாடும் போக்கைத் துடைத்தெறிய வேண்டியது அவசியமாகும்.

''பொது அடிமை எஜமானனிடமிருந்தோ, அவனுடைய கமிஷன்களிடமிருந்தோ தங்களின் ஜனநாயக உரிமைகளைப்பெற முடியாது என்று சிறுபான்மையோரையும் அவர்களின் ஸ்தாபனங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கிறது. நமது நாட்டின் பொருளாதார உயிர் நாடியைப் பிடித்துக் கொண்டிருக்கும் முதலாளிகள் அவர்களின் பொருளாதார வசதிகளையும் தேசியஐக்கியக் குறைவையும் பயன்படுத்தி, சிங்கள மக்களுக்கெதிராக சிறுபான்மையோரின் ஒரு ''ஐக்கிய முன்னணியை' உருவாக்கும் முயற்சிகளைக் கட்சி கண்டிக்கிறது.

''சிங்கள மக்கள் தாங்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருப்பதைச் சிறுபான்மையோரின் தேசிய வாழ்வுக்கும் அவர்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் எதிராகப் பயன்படுத்துவார்கள் என்ற பீதியைச் சிறுபான்மையோரின் உள்ளங்களிலிருந்து அகற்றினாலன்றி,

சுதந்திரத்தை வென்றெடுப்பதையும், வெளிநாட்டு முதலாளிகளை ஒதுக்கி தனிமைப்படுத்துவதையும் பற்றி சிங்கள மக்கள் நினைக்க கூட முடியாது என்று சிங்கள மக்களையும் குறிப்பாக அவர்களது ஸ்தாபனங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கிறது.

''தேசிய இனங்களின் சமத்துவ பரஸ்பர ஜனநாயக இலட்சியங்களை அங்கீகரிப்பதின் மூலமும், நமது மக்களின் பல்வேறு பகுதியினரை ஐக்கியப்படுத்துவதின் மூலமுமே ஐக்கிய மக்கள் என்ற முறையிலே நமது தேசியக் கோரிக்கையை வென்றெடுக்கவும், ஒவ்வொரு பகுதி மக்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதப் படுத்தவும் முடியும் என்று கம்யூனிஸ்ட் கட்சி அறிவிக்கிறது. சுதந்திர உலகில் சுதந்திர மக்கள் என்ற முறையில் மட்டுமே நாம் சமுதாய முன்னேற்றத்தையும் உழைப்பாளிகள் அனைவரும் உயரும் வாழ்க்கைத் தரத்தையும் உத்தரவாதம் செய்ய முடியும்.''

தொழிலாளர் வர்க்க ஐக்கியம் பற்றிய தீர்மானம் கூறியதாவது

''நமது உடனடி அரசியல் முன்னேற்றத்திற்குத் தேசிய ஒற்றுமை மிகஅவசியமாகஇருப்பதைப்போலவே, தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கு மட்டுமன்றி உடனடிக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும், தொழிலாளர் வர்க்கத்தின் உடனடி உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நம்நாட்டு அரசியல் வாழ்வில் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையை உருவாக்குவதற்கும், தொழிலாளர் வர்க்கத்தினதும் தொழிற் சங்கத்தினதும் ஒற்றுமை மிக அவசியமாகும்''

ஒரே தொழிற்சங்க மத்திய ஸ்தாபனத்தை உருவாக்குவதற்குப் பாதை செப்பனிடக் கூடியதாகத் தொழிற் சங்க ஐக்கியம் ஏற்படவேண்டுமென்றும், ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் புதிய உலக தொழிற்சங்க சம்மேளனத்திற்கு ஆதரவு அளிக்கவேண்டுமென்றும் இத்தீர்மானம் வேண்டுகோள் விடுத்தது.



இலங்கை தேசிய சுதந்திரம், இலங்கையில் யுத்த—பிற்கால பொருளாதார அபிவிருத்தி ஆகியவை பற்றிய தீர்மானம் கூறியதாவது:

''யுத்தபிற்கால பொருளாதார அபிவிருத்தி பற்றிய பிரச்சினையையும், நமது மக்களுக்கு அதிகரிக்கும் வேலை வசதிகளை வழங்கும் பிரச்சினையையும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதையும், நமது நாட்டுக்குச் சுதந்திரம் பெறுவதற்கான இயக்கத்திலிருந்தும் சுதந்திரக் கோரிக்கையிலிருந்தும் தனியாகப் பிரித்தெடுத்து தீர்த்துவைக்க முடியாது. நமது சுதந்திரம் பெறும் உரிமையையும் சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கப்படும் வரை, அரசியல் அதிகாரம் பூரணமாக இலங்கை மக்களின் கைக்கு மாற்றப்படும் வரை நமது நாட்டின்பொருளாதார அபிவிருத்திக்குத் தடையாயிருக்கும் முக்கிய முட்டுக்கட்டைகளை அகற்றமுடியாது.

''நமதுநாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத்திட்டம், சுதந்திரம் பெறுவதற்கும் நமக்குரிய சுதந்திர அரசியற் திட்டத்தைத் தீட்டுவதற்கும் நமக்குள்ள உரிமையை வென்றெடுப்பதற்காகத் தேசிய ஐக்கிய முன்னணி ஒன்றினை உருவாக்குவதற்கான திட்டத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும். பொருளாதார அபிவிருத்திக்கான அத்தகைய ஒரு வேலைத்திட்டம் பற்றி இணக்கம் ஏற்படுவதால், சுதந்திரம் பெறுவதற்கான தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவது சுலபமாவதுடன், அத்தகைய ஒரு முன்னணிக்கு ஆதரவாக மென்மேலும் அதிகமாக மக்கள் பகுதிகளைத் திரட்டுவதும் எளிதாகும்............

''இலங்கை தொழில் அபிவிருத்திப் பாதையிற் செல்லவேண்டும் என்பதே இணக்கம் ஏற்படவேண்டிய முக்கியமான கொள்கையாகும். தொழில், வர்த்தக அமைச்சின் ஆதரவில் நிறுவப்பட்டுள்ள பெக்டரிகளை நாட்டைத் தொழில் மயமாக்கும் திட்டமென்று கூற முடியாது. அந்த வேலைத்திட்டத்தின் சாரம், தொழில் தேசியப் பொருளாதாரத்தில் மிகமுக்கிய அம்சமாக

இருத்தல் வேண்டும் என்பதே. அத்தகைய ஓர் அபிவிருத்தி இல்லையேல், இலங்கை வெளிநாட்டு பொருளாதார சக்திகளின் தயவிலே என்றென்றும் வாழவேண்டியநிலை ஏற்படுவதுடன், மக்களுக்கு அதிகரிக்கும் வேலைவசதிகளையோ, உயரும் வாழ்க்கைத் தரத்தையோ வழங்குவதற்கான உத்தரவாதத்தையும் அளிக்க முடியாமல் போய் விடும்''

முதலாவதுகாங்கிரஸ் 11அங்கத்தினர்களைக்கொண்ட புதிய மத்தியக் குழுவைத் தெரிவுசெய்தது. கட்சி விதிகளுக்கேற்பஇக்குழு பின்னர்கூடிகட்சிஉத்தியோத்தர்களை தெரிவுசெய்தது. காலஞ்சென்ற வண. உடகெந்தவல சரணங்கர தேரோ தலைவராகவும், பீட்டர் கெனமன் மீண்டும் பொதுக்காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

''சுதந்திரம், அதிக வேலை வசதிகள், வாழ்வதற்குப் போதுமான சம்பளம்'' என்ற கோஷத்துடன் நாடெங்கினும் ஒரு பிரசார இயக்கத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி 1945 செப்டம்பர் 3ந் திகதி ஆரம்பித்தது. பொது மக்களிடம் பெருமளவில் கட்சிக் கொள்கையை எடுத்துச் செல்வதும் இந்தக் கோஷத்தைச் சுற்றி ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க உதவி செய்வதுமே இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இதற்காக கட்சி மத்திய குழு ஓர் அறிக்கையைத் தயார்செய்து அச்சிட்டு விநியோகித்தது. அப்போதைய அரசியல் நிலைமையின் பல அம்சங்களையும், மக்கள், தொழிலாளர் வர்க்கம் ஆகியோர் முன்னிலையிலிருந்த முக்கிய கடமைகளையும் இந்த அறிக்கை தெளிவுபடுத்தியது.

இலங்கை மக்களில் எல்லா பகுதிகளும் எதிர்நோக்கிய மிகமுக்கிய அரசியற் பிரச்சினை தேசிய சுதந்திரத்தைப் பெறுவதே என்பதை இவ்வறிக்கை எடுத்துக்காட்டியது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

''சுதந்திரம் நமது பிறப்புரிமை மட்டுமன்று—அது வெளியாரின் தலையீடின்றி நமது சொந்த அரசியற் சட்டத்தைத் தயாரிக்கும் விஷயமட்டுமன்று—அது வருங்



காலத்தில் நமது மக்களுக்கு அதிக அதிகமான தொழில் வசதிகளையும் வாழ்வதற்குப் போதுமான சம்பளத்தையும் வழங்கக் கூடிய பிரச்சினையின் உயிர்நாடியுமாகும். யுத்தம், அடக்கி ஒடுக்குதல், வறுமை, வேலையின்மை ஆகியவற்றை அடியோடு அகற்றிவிடக்கூடிய ஒரேயொரு மார்க்கமான சோஷலிஸத்தை நோக்கி தொடர்ந்து முன்னேறுவதற்காக எடுக்கப்படவேண்டிய முதலாவது நடவடிக்கை அதுவே.

''சுதந்திரமின்மையால், நமது நாடு பிரிட்டிஷ் பொருளாதாரத்துக்கு கட்டுப்பட்ட பின்தங்கியவிவசாய நாடாக்கப்பட்டிருப்பதுடன், வெளிநாட்டு முதலாளித்துவச் சுரண்டலுக்கும் பலியாக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரத்தின் மூலமாகவே நமது தேசிய பொருளாதாரத்தைக் கட்டிவைத்திருக்கும் தளைகளை அறுத்தெறியவும் நமது தற்போதைய வறுமையையும், பின்தங்கிய நிலைமையையும் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொண்டிருப்பதற்கான அரசியற் காரணங்களை அகற்றவும் முடியும். ஆகவே அதிக வேலை வாய்ப்புகளுக்காகவும், வாழ்வதற்கு போதுமான சம்பளத்துக்காகவும் நடத்தும் போராட்டம், சுதந்திரத்துக்காக நடத்தும் அரசியற் போராட்டத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும்''

ஜனநாயகமற்ற அடிமை அரசியற் சட்டமொன்றினை இலங்கையின் மீது திணிப்பதின் பயங்கர ஆபத்து பற்றியும், அத்தகைய ஒரு சமரசத்தை விரும்புகிறவர்களின் உதவியுடன் அத்ததைகய அரசியற் சட்டத்தை அங்கீகரிப்பதற்கு திரு. டி. எஸ். சேனநாயக்கா இணங்குவதின் ஆபத்துப் பற்றியும் அறிக்கை எச்சரிக்கை செய்தது.

அறிக்கை கூறியதாவது: 'சுதந்திரக் கோரிக்கைக்கு ஆதரவாக தேசபக்தியுள்ள ஸ்தாபனங்களிடையேயும் நெருங்கிய ஐக்கியத்தை உருவாக்குவதால் மட்டுமே ஏகாதிபத்திய வாதிகளினதும் பிற்போக்குவாதிகளினதும் முயற்சிகளை முறியடித்து, தேசியக்கோரிக்கைகளை விட்டுக்கொடுக்கும் சமரசவாதிகளைத் தனிப்படுத்தி ஒதுக்கித் தள்ளமுடியம்''

சுதந்திரம், அதிக தொழில் வாய்ப்பு வாழ்வதற்குப் போதுமான சம்பளம் ஆகியவற்றைப் பெறுவதற்காக ஒருதேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கும் பொருட்டு நாட்டுப்பற்றுள்ள ஸ்தாபனங்கள் அனைத்தும் சேர்ந்து ஐக்கிய நடவடிக்கை எடுப்பதற்கான ஓர் உடனடிவேலைத்திட்டத்தை அந்த அறிக்கை வெளியிட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் முதலாவது அம்சம் கூறுவதாவது:

(1) சோல்பரி அரசியல் திட்டத்தையும், சுதந்திரத்தை மறுக்கும் வேறு அரசியற் திட்டத்தையும் நிராகரிக்கும்படி இராஜாங்க சபையையும் - மக்களையும் தூண்டுதல்,

(2) மக்களிடையே சமத்துவத்தையும் தேசிய இனங்களிடையே சமத்துவத்தையும், தேசிய இனங்களுக்கிடையே ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தாத கொள்கையையும் உத்தரவாதப்படுத்தும் சுதந்திர இலங்கையை நிர்மாணிப்பதற்காக மக்களை ஒன்று திரட்டுதல்.

இந்த வேலைத்திட்டத்திலடங்கிய இதர அம்சங்களாவன:-

(3) சோல்பரி நகல் திட்டம், வேலையின்மை, யுத்த பிற்கால அபிவிருத்தி முதலியவை பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஓர் புதிய இராஜாங்கசபையைத் தெரிவுசெய்யும் பொருட்டு உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்துதல்.

(4) சிவில் சுதந்திரங்களை மீண்டும் பூரணமாக வழங்குதல்.

(5) வேலைவாய்ப்புகளை வழங்கும், அல்லது வேலையற்றோருக்குப் போதிய நிவாரணம் வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி அரசாங்கத்தை வற்புறுத்தல்.



(6) வெளிநாட்டு முதலாளித்துவ நலன்களின் கோட்டையைத் தகர்த்து, தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்யத் தேவைப்படும் பொருளாதார வாழ்வின்மீதும் வர்த்தகத்தின் மீதுமுள்ள அரசாங்கக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து நடத்துதல்.

அறிக்கை தொடர்ந்து கூறுவதாவது:- ''திரு. டி. எஸ். சேனநாயக்காவின் பிற்போக்குக் கொள்கைகளையும் அவர் பிரதிநிதித்துவம் தாங்கும் பிற்போக்குச் சக்திகளையும் எதிர்த்து நடத்தும் போராட்டம், சுதந்திரம் அதிக வேலைவசதிகள் வாழ்வதற்குப் போதுமான சம்பளம் ஆகியவற்றை வென்றெடுப்பதற்காக ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பும் முயற்சிகளின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும். சுதந்திரப் போராட்டத்திலே திரு. டி. எஸ். சேனநாயக்கா தான் ஊசலாடும் கொள்கையினதும் இழிவான சமரசக் கொள்கையினதும் தலைமைப் பிரதிநிதியாக இருக்கிறார். ''பிரிட்டிஷாருடன் சேர்ந்தே சுதந்திரம்'' என்னும் அவரது கோஷம் சுதந்திரம் வேண்டும் என்ற கோஷத்திற்கு முற்றாக முரண்பட்டதாகும். அதிக தொழில் வாய்ப்பும், வாழ்வதற்குப் போதுமான சம்பளமும் வழங்கக் கூடிய தேசிய அபிவிருத்திக்கான போராட்டத்திலே, திரு. டி. எஸ். சேனநாயக்கா நாட்டைத் தொழில்மயமாக்குவதைத் திட்டவட்டமாக எதிர்ப்பவராவார். ''விவசாயம் செய்வதற்குத் திரும்பிச் செல்லுங்கள்'' என்ற அவருடைய கொள்கை, காலனிப் பொருளாதாரத்தை நிரந்தரமாக்குவதற்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விவசாயத்துறையில் நம்மை அடிமைப்படுத்துவதற்கும் மட்டுமே உதவும். திரு. சேனநாயக்காவின் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் இழிவானதாகும், மக்களுக்குத் தீங்கு விளைவிப்பதாகும். அந்தக் கொள்கைகளுக்குப் பதிலாக சுதந்திரம் தேசிய ஐக்கியம் ஆகிய கொள்கையையும், அதிக தொழில் வசதிகளும், வாழ்வதற்குப் போதுமான சம்பளமும் வழங்கும் நாட்டைத் தொழில்மயமாக்கும் கொள்கையையும் கொண்ட ஓர் ஐக்கிய தேசிய முன்னணியை உருவாக்க வேண்டும்.

இறுதியாக, ஒரு தனி தொழிற் சங்க மத்திய ஸ்தாபனத்தை உருவாக்கும்படி கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளைக் குறிப்பிட்டு, அறிக்கை கூறியதாவது:- ''தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர அரசியற் தலைமை சுதந்திரப்போராட்டத்திலே தேசிய விவகாரங்களுக்குத் தேவைப்படுகிறது. ஏகாதிபத்தியத்துடன் எத்தகையசமரசமும் செய்யாமல் அதனைத் திட்டவட்டமாக எதிர்க்கும், தேசிய முன்னணியில் அனைவரையும் ஐக்கியப்படுத்தும் அதிவேக சக்தியாக விளங்குவதும் இந்தத் தலைமையே. அத்தகைய தலைமையை ஸ்தாபித்தல் சுதந்திரத்திலிருந்து சோஷலிஸத்துக்கு துரிதமாகத் தொடர்ந்து முன்னேறுவதை உத்தரவாதப்படுத்தும். சோஷலிஸம்தான் இறுதியாக முழு வேலைவாய்ப்புகளையும் வழங்கி, வாழ்க்கைத் தரத்தை தொடர்ந்து உயர்த்த முடியும்.''

1945 செப்டம்பர் முதல் 1946 ஜனவரி வரை நாடெங்கினும் இந்த இயக்கத்தை ஆதரித்து மாபெரும் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. அந்தச் சமயத்தில் நிலவியநெருக்கடியான அரசியல் நிலைமை பற்றிய கட்சியின் கொள்கை இந்தக் கூட்டங்கள் வாயிலாகப் பிரசாரம் செய்யப்பட்டதுடன், அந்த அறிக்கையும் மற்றும் பிரசுரங்களும் விற்பனை செய்யப்பட்டன.

கம்யூனிஸ்ட் கட்சி செய்த எச்சரிக்கை விரைவில் உண்மையாகிவிட்டது. சோல்பரி கமிஷனை ஆரம்பத்தில் ''பகிஷ்கரித்த'' திரு. டி. எஸ். சேனநாயக்காவும் அவரது மந்திரி சபையும், அக் கமிஷன் தயாரித்த அடிமை அரசியற் சட்டத்தை ஏற்றுக் கொள்வதென்று முடிவு செய்தார்கள். தேசிய காங்கிரஸ் தலைவர்களும் தங்களின் முந்திய முடிவுகளைக் காற்றில் பறக்கவிட்டு, ஒரு குத்துக்கரணம் அடித்து அந்த அரசியற் சட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இதனால் கம்யூனிஸ்டுகள் தேசிய காங்கிரஸிலிருந்து கூட்டமாக ராஜிநாமா செய்தனர்.



தங்களின் ராஜிநாமாவுக்கான காரணங்களை விளக்கி கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பீட்டர் கெனமன் விடுத்த அறிக்கை கூறியதாவது:—

''சுதந்திரத்துக்காகப் போராடும் எமக்கு சோல்பரி அடிமை அரசியற் சட்டத்தை அங்கீகரித்துச் செயல்படுத்தத் தயாராயிக்கும் ஓர் ஸ்தாபனத்தில் தொடர்ந்து அங்கத்தினர்களாக இருக்க முடியாது. ஆதலின், காங்கிரஸிலிருந்து வெளியேறுவதின் மூலமே நாம் சுதந்திரப் போராட்டத்தை இன்னும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.......

''வெள்ளை அறிக்கைக்கு இராஜாங்க சபை, காங்கிரஸ், மற்றும் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொண்டதில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், திரு. சேனநாயக்கா போன்ற அதன் கூட்டாளிகளும் இலங்கைத் தேசபக்தர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளனர். இந்த வெற்றி தற்காலிகமானதே. சுதந்திரத்தின் மூலமாகவே ஒரு முற்போக்கான ஜனநாயகத்தை ஸ்தாபித்து, நமது நாட்டின் பொருளாதார வளங்களைப் பூரணமாக அபிவிருத்தி செய்து நமது மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளையும் வாழ்க்கைத்தரம் உயர்வையும் உத்தரவாதப்படுத்த முடியும் என்பதை எதிர்வரும் நெருக்கடியும் போராட்டங்களும் நிரூபிக்கும்''

சோல்பரி அரசியற் சட்டம் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு மட்டும் பிரயோசனப்படும் ஒரு பிற்போக்கான அரசியற் சட்டம் என்று கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்தது. மக்கள் தங்களின் தற்போதைய உணர்ச்சியை ஒரு புதிய இராஜாங்க சபை மூலம் வெளியிடக் கூடியதாக உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்தும்படி கட்சி கோரியது. ஒரு புதிய இராஜாங்க சபையே இலங்கையின் எதிர்கால அரசியற் சட்டம் பற்றி முடிவு செய்ய முடியும்.

**1945 செப்டம்பர் மாதத்திற்றுன் கட்சியினதும் அதன் தொழிற் சங்கங்களினதும் தலைமையில் 25,000**

தொழிலாளர்களையும் வேலையில்லாதோரையும் கொண்ட ஒரு பிரமாண்டமான ஊர்வலம் தங்களின் அவசரப்பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்று கோரி இராஜாங்க சபையை நோக்கிச் சென்றது. போலிசார் இந்த ஊர்வலதைத் தடுத்து நிறுத்தித் தாக்கினர்.

இதற்குப் பதிலளிக்குமுகமாக அரைநாள் பொது வேலை நிறுத்தமொன்று நடைபெற்றது. இதனால் கொழும்பு நகரமே ஸ்தம்பித்தது. இந்த ஆட்சேபனை வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றிய கொழும்பு டிராம்வே தொழிலாளர் சங்கத்தின் மூன்று தலைவர்கள் பழிவாங்கப்பட்டதையொட்டி 30,000 தொழிலாளர் கலந்து கொண்ட யுத்த—பிற்கால முதலாவது பொது வேலை நிறுத்தமொன்றினைக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியது. 1945 செப்டம்பர் 18ந் திகதி முதல் 26ந் திகதி வரை நடைபெற்ற இவ்வேலைநிறுத்தம் முழு வெற்றியுடன் முடிவடைந்தது.

1946ல் பல வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. அவற்றில் கொழும்பு ஹாபர் தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் கொழும்புத் துறைமுகத் தொழிலாளர் 6000 பேர் கலந்து கொண்ட வேலை நிறுத்தமும் ஒன்றாகும். 1946 எப்ரல் 24ந் திகதி ஆரம்பமான இவ்வேலை நிறுத்தம் 26 தினங்களாக நடைபெற்றது. அந்தக் கால கட்டத்தில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களில் மிகக் கடினமானது இவ்வேலை நிறுத்தமே. அப்பொழுது போக்கு வரத்து, பொது வேலை அமைச்சராக இருந்த சர். ஜோன் கொத்தலாவலை முதலாளிகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் எல்லாவித அடக்குமுறை இயந்திரங்களையும் முடுக்கிவிட்டார். கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய ஓர் ஊர்வலத்தின் மீது போலிசார் தடியடி பிரயோகம் செய்தனர். 62 பேர் காயமடைந்தனர். எம். ஜி. மெண்டிஸும், மற்றும் பலரும் கைது செய்யப்பட்டு, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

1946 கடைசியில் கொழும்பு மாநகரசபைக்கு மற்றொரு தேர்தல் நடைபெற்றது. 1936க்குப் பின்னர்



இராஜாங்க சபைக்குப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படாததால், நாட்டில் அரசியல் போக்கு எப்படி வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைக் கண்டறிவதற்கான உரைகல்லாக இந்நகரசபைத் தேர்தல் கருதப்பட்டதால், இது விசேட முக்கியத்துவம் பெற்றது. இம்முறை கம்யூனிஸ்ட் கட்சி 10 அபேட்சகர்களைத் தேர்தலில் போட்டியிட நிறுத்தியது. ''கொழும்பு நகரம் மக்களுக்கே'' என்ற தலைப்பில் விசேட தேர்தல் அறிக்கையொன்றையும் கட்சி வெளியிட்டது.

இந்த அறிக்கையின்படி கம்யூனிஸ்ட் மாநகர சபைத் திட்டத்தில் முக்கிய ஸ்தானம் வீட்டுப் பிரச்சினைக்கு அளிக்கப்பட்டது. அறிக்கை கூறியதாவது:—

''மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் பெருமளவில் வீடு அமைக்கும் திட்டமொன்றை மாநகரசபை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கம்யூனிஸ்ட் மாநகரசபை அங்கத்தினர்கள் போராடுவார்கள். மாநகரசபையால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வீடுகளைப் பொறுத்த வரையில் அந்த வீடுகளை அவற்றை அமைப்பதற்குச் செலவான தொகைக்கு விலைக்கு வாங்கி அதன் மூலம் குடியிருப்பாளர் அவற்றைச் சொந்தமாக்கிக்கொள்வதற்கு உதவி செய்வதற்காகவும், மேற்கொண்டும் புதிய வீடுகளை அமைப்பதற்கு அந்தப் பணத்தைச் செலவு செய்வதற்காகவும் குடியிருப்பாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவும்படி கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்தும்.

வரி முறையொன்றினை ஏற்படுத்துவதற்குப் போராடுவதாகவும் அவர்கள் வாக்களித்தனர். அரசாங்க, வர்த்தக நிறுவனங்கள், தரிசு நிலங்கள், ரூ.100 அல்லது அதற்கு மேற்பட்ட மாதவாடகை பெறும் வீடுகள் உள்ள நிலங்கள் ஆகியவற்றின் மீதும், சேரிகளை ஒழிக்கும் வரை சேரிச் சொந்தக்காரர்களிடமிருந்தும் இந்த முறையின்படி அதிகமான வரி வசூலிக்க முடியும். இத்தேர்தலில் எம். ஜி. மெண்டிஸ் மட்டுமே வெற்றிபெற்றார். ஆயினும் தாங்கள் போட்டியிட்ட வட்டாரங்களில் முழு வாக்குகளில் மூன்றில் ஒரு

பகுதியைப் பத்து கம்யூனிஸ்ட் வேட்பாளர்களும் பெற்றனர். கம்யூனிஸ்டுகள் தலைநகரில் ஒரு பெரும் சக்தி என்பதை இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின.

1947 ஆரம்பத்தில் இராஜாங்க சபைக்கு மொரவக்கத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி, டாக்டர் விக்ரமசிங்காவை நிறுத்தியது. 23,823 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று அவர் வெற்றி பெற்ருர். இராஜாங்க சபையில் டாக்டர் விக்ரமசிங்கா எடுத்த முதல் நடவடிக்கைகளில் ஒன்று கீழ்க்காணும் தீர்மானங்களை சபையில் பிரேரித்தது தான். அதாவது:— "(1) ஒரு நாட்டில் வெளிநாட்டுத் துருப்புகள் நிறுத்தப்பட்டிருக்கும்போது சுதந்திரப் பேச்சு வார்த்தைகள் நடத்த முடியாது. ஆதலின் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ் செய்து கொள்ள வேண்டும். (2) இலங்கையின் ஆதிபத்திய சுதந்திரத்தை அங்கீகரித்து பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு பிரகடனம் வெளியிட வேண்டும். (3) இலங்கையின் எதிர்கால அரசியற் சட்டத்தையும், பின்னர் பிரிட்டனுடன் நமது உறவையும் நிர்ணயிப்பதற்காக சர்வஜன வாக்குரிமையைக் கொண்டு சுதந்திர, சுயேச்சையான ஓர் அரசியல் நிர்ணய சபையைத் தெரிவு செய்தல் வேண்டும்."

1947 மே மாதத்தில் புதிய வேலை நிறுத்தப் போராட்ட சூருவளியொன்று வீசியது. அது 1947 மே—ஜூன் பொது வேலை நிறுத்தமாகப் பொங்கியது. ரேலன்ட்ஸ் கராஜ்யில் ஏற்பட்ட ஒரு தொழிற் தகராறிலிருந்து ஆரம்பமான இந்த வேலை நிறுத்தத்தில் விரைவில் கொழும்பு மாநகர சபைத் தொழிலாளர்களும் தேயிலை, இரப்பர் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். காலி முகத்திடலில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக தங்களின் தொழிற் சங்கத் தலைவர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ததையொட்டி அரசாங்க குமஸ்தாக்களும் கனிஷ்ட ஊழியர்களும் மே 30ந்



திகதி வேலை நிறுத்தத்தில் சேர்ந்தனர். ஜூன் 3ந் திகதி அரசாங்க தினச்-சம்பள ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். அதற்கு அடுத்த நாள் கொழும்புத் துறைமுகத்தில் தொழிலாளர் அனைவரும் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

இந்தப் பொதுவேலை நிறுத்தம் அதுவரை இலங்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய வேலைநிறுத்தமாகும். அதன் உச்சக் கட்டத்தில் 50,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருந்தனர். அரசாங்கத் தொழிலாளர்களும், தனியார் துறைத் தொழிலாளர்களும் ஏககாலத்தில் ஒன்ருக வேலைநிறுத்தம் செய்தது இதுவே முதன் முறையாகும். 1940க்குப் பின்னர் கம்யூனிஸ்டுகளும், சமசமாஜிகளும் ஒன்ருகச் செயலாற்றிய முதற் தடையும் இதுவே—வேலைநிறுத்தத்தை நடத்தும் பொருட்டு இவ்விரு கட்சிகளும் சேர்ந்து மத்திய வேலைநிறுத்த கூட்டுச் செயற் கமிட்டியொன்றை நிறுவிக் கொண்டன.

ஆனுல் வேலைநிறுத்தத்தை நசுக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாயிருந்தது. இலங்கைப் பாதுகாப்புப் படைகள் செயலாற்ற அழைக்கப்பட்டன. பிரிட்டிஷ் ரேயல் கப்பற்படையினர் தொழிலாளர்களைப் பயமுறுத்துவதற்காக வீதிகளில் அணிவகுத்துச் சென்றனர். பொதுஜன பாதுகாப்புச் சட்டமும், போலிஸ் திருத்தற்சட்டமும் அவசர அவசரமாக இராஜாங்க சபையில் நிறைவேற்றப்பட்டன. இந்த அடக்குமுறைச் சட்டங்கள் இன்றும் அமுலில் இருக்கின்றன.

1947 ஜூன் 5ந் திகதி கொலன்னுவையில் ஒரு அமைதியான ஊர்வலத்தின் மீது போலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தைச் சேர்ந்த வி. கந்தசாமி கொல்லப்பட்டார். 18 பேர் காயமடைந்தனர். அடுத்தநாள் சுமார் ஒரு இலட்சம் மக்கள் கந்தசாமியின் பிரேத ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். இந்த 'ஊர்வலம் காலனி அதிகார வர்க்கத்திற்கும், மந்திரி சபைக்கும்

எதிரான பிரமாண்டமான மக்கள் ஆர்ப்பாட்டமாக மாறிவிட்டது. இதனால் இராணுவமும் பாதிக்கப்பட்டது. ஜூன் 7ந் திகதி கிருலப்பனையில் ரோயல் ராணுவ சேவை முகாமில் இராணுவம் கலகம் செய்தது.

இறுதியில் 1947ம் வருடத்திய பொது வேலைநிறுத்தம் முறியடிக்கப்பட்டு விட்டது. ஜூன் 19ந் திகதி வேலைநிறுத்தம் வாபஸ் செய்யப்பட்டது. ஆனால் இது இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திலே ஒரு முக்கிய பங்கை நிறைவேற்றியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களின் உள்நாட்டுக் கையாட்களுக்கும் பழைய முறையில் தொடர்ந்து இங்கு ஆட்சி செலுத்த முடியாதென்பதை இந்தப் பொது வேலை நிறுத்தம் உணர்த்தியது.

1947 ஜூன் மாதத்திலேயே ''பிரிட்டிஷ் காமன் வெல்த்தினுள் பூரண பொறுப்பாட்சி அந்தஸ்தைப்'' பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியது. உரிய காலத்தையும் கடந்து ஆறு ஆண்டுகள் மேலதிகமாக நீடித்திருந்தஇராஜாங்க சபை ஜூலை மாதத்தில் கலைத்து விடப்பட்டது.சோல்பரி அரசியற் சட்டத்தின் கீழ் 1947 ஆகஸ்டு—செப்டம்பரில் புதிய பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

ஓர் இணக்கமான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரே ஜாபிதாவைக் கொண்ட வேட்பாளர்களைப் பொதுத் தேர்தலில் நிறுத்துவதற்காக இடதுசாரி, முற்போக்கு சக்திகளை ஒன்று திரட்டுவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் மீண்டும் முயற்சி செய்தது.அதன் முயற்சிகள் பலனளிக்கவில்லை. அதன் விளைவாக இடது சாரி சக்திகளும், முற்போக்குச் சக்திகளும் பிளவுபட்ட நிலையில் 1947ம்வருடம் பொதுத்தேர்தலில் கலந்து கொண்டன. ஆனால் திரு. டி. எஸ். சேனநாயக்காவோ புதிதாக நிறுவப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியில் முதலாளித்துவ, பிரபுத்துவ அரசியற் கோஷ்டிகளை ஒன்று சேர்ப்பதில் வெற்றிபெற்றுவிட்டார்.



பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முழு பலமும் செல்வாக்கும், காலனி நிர்வாகத்தினதும், முதலாளிகளினதும் எல்லாச்சக்திகளும் பொதுத் தேர்தலில் யு. என். பிக்கு உதவின. ஆகஸ்டு 23ந் திகதி முதல் செப்டம்பர் 20ந் திகதிவரை ஒரு மாதமாக வாக்கெடுப்பு பல்வேறு தொகுதிகளில் வெவ்வேறு திகதிகளில் நடைபெற்றது. முதல் நாளன்றே தனது தேர்தலையும் தனது சகமந்திரிகள் அநேகரது தேர்தலையும் நடத்துவதற்குத் திரு. டி. எஸ். சேனநாயக்கா ஏற்பாடு செய்தார். இதனால் மாதத்தில் எஞ்சிய நாட்களில் நாடெங்கினும் சென்று தனது கட்சி அபேட்சகர்களுக்காக வேலை செய்வதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடைத்தது. பீட்டர் கெனமன் டாக்டர் என். எம். பெரேரா டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோரின் தேர்தல் கடைசி நாள் அன்று நடத்தப்பட்டது. இவ்வாறு அவர்கள் அநீதியான முறையில் தங்களின் தொகுதிகளிலே அடைத்து வைக்கப்பட்டதுடன், தங்களின் தொகுதிகளில் தேர்தல் வேலையை ஏற்கனவே முடித்துக்கொண்ட யு. என். பி. தலைவர்கள் அவர்களுக்கெதிராக தங்களின் முழு பலத்தையும் பிரயோகிக்க முடிந்தது.

ஆயினும், இந்த உபாயங்களையும்,இதர பல வெறுக்கத்தக்க தந்திரங்களையும் கையாண்டும் கூட யு.என்.பி. பூரண பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றத் தவறி விட்டது. யு. என். பியின் முக்கிய தேர்தல் தந்திரமான கம்யூனிஸப் பூச்சாண்டியைக் காட்டி வாக்காளர்களை மிரட்டுவதற்கு முயற்சி செய்யப்பட்டது. இடதுசாரிகள் ஆலயங்களுக்குத் தீவைப்பவர்கள் என்று பிரசாரம் செய்வதற்காக ஆலயங்கள் தீயிட்டிருப்பதைப் போன்ற படங்களைப் போட்டு சுவரொட்டி விளம்பரங்களை யு. என். பி. வெளியிட்டது.

''மார்க்ஸிய நெருப்பிலிருந்து மதத்தைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்'' என்னும் கோஷம் அந்த சுவரொட்டிகளில் பொறிக்கப்பட்டது. மூன்று இடதுசாரிகளும் (கம்யூனிஸ்ட் கட்சி, டாக்டர் என்.எம்.பெரேரா தலைமையிலிருந்த இலங்கை சமசமாஜக் கட்சி, டாக்டர்

கொல்வின் ஆர். டி. சில்வா. தலைமையிலிருந்த போல் ஷெவிக் லெனினிஸ்ட் கட்சி ஆகியவை) எதிர்க்கட்சியில் பலம் வாய்ந்த கட்சிகளாக விளங்கின. கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலில் ஐந்து ஸ்தானங்களைக் கைப்பற்றியது.

இந்த ஸ்திரமற்ற அரசியல் நிலைமையிலே திரு. டி. எஸ். சேனநாயக்கா சுயேட்சைப் பிரதிநிதிகளின் ஆதரவுடன் ஓர் அரசாங்கத்தை நிறுவி யு. என். பி யின் நிலையை உறுதிப்படுத்துவதைத் தடுப்பதற்காக, யு. என். பி.—விரோதி சக்திகளைத் திரட்டி ஒரு மாற்று அரசாங்கத்தை நிறுவ மூன்று இடதுசாரிக் கட்சிகளும் ஐக்கியமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி உடனடியாக வேண்டுகோள் விடுத்தது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்வதற்காக கட்சி ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தையும் நடத்தியது. துரதிர்ஷ்டவசமாக, காலஞ்சென்ற திரு. ஸ்ரீ நிஸ்ஸங்கா இல்லத்தில் மாற் அரசாங்கமொன்றினை நிறுவும் பொருட்டு நடைபெற்ற ''யமுனு'' மகாநாடு வெற்றி பெறவில்லை. ஆகவே, திரு. சேனநாயக்கா பாராளுமன்றத்தில் குறைந்த ஆசனங்களைப் பெற்றிருந்தும், தன்னைப் பிரதமராகக் கொண்ட ஓர் அரசாங்கத்தை நிறுவிக் கொள்ள முடிந்தது. இவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கும் அவர்களின் இழிவான வரவாற்றிலே வெறுக்கத்தக்க புதிய அத்தியாயமொன்று ஆரம்பமாயிற்று.



## 3வது அத்தியாயம்

# 2-வது காங்கிரஸ் முதல் 4-வது காங்கிரஸ் வரை

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது காங்கிரஸ் காலகட்டத்தில் கட்சி வேலைகள் பிரதானமாக கொழும்பு, மாத்தறை மாவட்டம், கண்டி, கேகாலை போன்ற ஒரு சில இடங்களில் மட்டும் நடைபெற்று வந்தன. இந்தக் காங்கிரசுக்குப் பிந்திய காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தனது செல்வாக்கை விஸ்தரித்ததுடன், பல புதிய பகுதிகளில் கட்சிக்கிளைகளை நிறுவத் தொடங்கியது.

எம். சி. சுப்பிரமணியம், ஆர். ஆர். பூபாலசிங்கம், எஸ். இராசையா போன்றத் தோழர்களின் உதவியுடன் காலஞ்சென்ற பி. கந்தையா தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்சிக் கிளைகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்றன. கண்டி மாவட்டத்தில் கே. ஜே. பார்னுந்து, காலஞ் சென்ற எஸ். ஏ. ராஜபக்ஷ, சி. குணசிங்கா, பி. குமாரசிரி, காலஞ்சென்ற பி. ஜி. பீரிஸ் முதலியோர் கட்சிக் கிளைகளை அமைத்தனர்.

வடமேற்கு, வடமத்திய மாகாணங்களிலும், (குறிப்பாக, குருநாகல், அனுராதபுரம், பொலநறுவ மாவட்டங்களில்) இங்கிரியா மாவட்டத்திலும் புதிய கட்சிக் கிளைகளை அமைத்ததின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி விவசாயிகளுடன் கொண்டிருந்த தொடர்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டது. டி. ஜயகொடி (அனகாரிக தர்மபிரிய) தலைமையில் இங்கிரியா பிரதேசத்தில் கட்சி வேலைகள் நடைபெற்றன. குருநாகல் மாவட்டத்தில் கட்சி வேலைகளுக்கு எஸ். ஜி. வணிகசேகர, டி. பி. அத்

தனகொட போன்ற தோழர்கள் தலைமை தாங்கினர். புதிய கம்யூனிஸ்ட் கிளைகள் மீது சர்.ஜோன் கொத்தலாவலையின் ஆதரவாளர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தினர். பலாத்காரம் பிரயோகித்தனர். இந்தத் தோழர்களில் ஒருவரான காலஞ் சென்ற டி. ஆர். செனவிரத்ன குருநாகலில் முதலாவது கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் செய்தது சம்பந்தமாகக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் காலகட்டத்தில் களுத்துறை, காலி மாவட்டங்களிலும், பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் பல இடங்களிலும் கட்சிக் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வலை பின்னப்பட்டதைப் போன்று கட்சிக் கிளைகளை உருவாக்குவதே அப்பொழுது இளங் கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான கட்சி அமைப்பு வேலையாக இருந்தது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் வெள்ளவத்தையில் சைவமங்கையர் கழக மண்டபத்தில் 1948 ஜனவரி முதலாந் திகதி கூடிய பொழுது, திரு. டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கம் நிறுவி மூன்று மாதங்களே கடந்து போய் இருந்தன.

இந்தக் காலகட்டத்தில், ஊசலாடிக் கொண்டிருந்த தனது அரசாங்கத்தை ஸ்திரமாக்குவதற்காகத் திரு. சேனநாயக்கா பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் புதிய ஒப்பந்தங்கள் செய்வதில் ஈடுபட்டிருந்தார். அவற்றில் முக்கிய ஒப்பந்தத்தின்படி இலங்கைக்கு 'டொமினியன் அந்தஸ்து'' வழங்கப்பட்டது. அதற்குப் பதிலாக, பிரிட்டிஷ் கடற்படை, விமானத்தளங்களைத் தொடர்ந்து இங்கு வைத்துக் கொள்ள அனுமதித்தும், இலங்கையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார,இராணுவாதிக்கம் அசையாமல் குலுங்காமல் நீடித்து நிலைத்து



நிற்க உத்தரவாதம் அளித்தும் திரு. சேனநாயக்காவின் அரசாங்கம் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டன,

1947ம் வருடப் பொதுவேலை நிறுத்தத் தோல்வியிலிருந்து இன்னும் தலைதூக்கிக்கொண்டிருந்த தொழிலாளர் வர்க்கத்தின் மீதும், அவர்களின் தொழிற்சங்கங்களின் மீதும் டி. எஸ். சேனநாயக்கா அரசாங்கம் கடுமையான தாக்குதலை நடத்தியது. 1947ம் வருடப் பொதுவேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட அரசாங்க சேவைத் தொழிற் சங்கங்களின் தலைவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அல்லது வேறு வழிகளில் பழிவாங்கப்பட்டனர். தொடர்ச்சியான அடக்குமுறைச் சட்டங்களால் தொழிற் சங்கங்களுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டன. அவை பிளவுபடுத்தப்பட்டன.

தொழிலாளர் வர்க்கம் உட்பட ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகளிடையே ஓரளவு குழப்ப நிலையையும் உறுதியின்மையையும் ஏற்படுத்துவதில் சேனநாயக்க அரசாங்கத்தின் அடக்குமுறை, வஞ்சித்தல் என்னும் இரட்டைக் கொள்கை வெற்றிபெற்றது. இதனுல், இது தொழிலாளர் வர்க்கம் பின்வாங்கவேண்டிய காலகட்டமென்றும், எனவே அவர்கள் முக்கியமாகத் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உபாயங்களைக் கையாளவேண்டுமென்றும் கூறும் சித்தாந்தங்கள் தலைதூக்கின.

இத்தோல்வி மனப்பான்மையைச் சமசமாஜக்கட்சியும் வேறுசில பகுதியினரும் தொழிலாளர் வர்க்க இயக்கத்துள் பிரசாரம் செய்துவந்தனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் இந்தத் தோல்வி மனப்பான்மையை நிராகரித்ததுடன்,செயலில் இறங்குமாறு அறைகூவல் விடுத்தது.

காங்கிரஸில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் தீர்மானம் முக்கியமான, தீர்க்கமான இரண்டிலொரு முடிவைச்

செய்ய வேண்டிய நிலையை நாடு எதிர்நோக்கியுள்ளது என்று கூறியது. அதாவது:-

(அ) ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினதும், சேனநாயக்கா மந்திரிசபையினதும் சதிகளை முறியடித்து பூரண சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும், முற்போக்கான ஒரு தேசியக் கொள்கையை உருவாக்குவதற்காகவும் நம்மிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, தற்போதுள்ள முயற்சியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்''

(ஆ) ''இல்லையேல், உலக ஆதிக்கத்தைப் பெறுவதற்காகவும், உலக முற்போக்குச் சக்திகளுக்கெதிராக மற்றொரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்காகவும் தீட்டப்பட்டுள்ள ; ஆங்கில—அமெரிக்கத் திட்டத்தின் பின்னல் நாட்டை இழுத்துச் செல்லும் பொருட்டும், தங்களின் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெருமுயற்சி செய்து கொண்டிருக்கும் இலங்கைப் பூர்ஷுவாக்களிடமும், ஏகாதிபத்தியத்திடமும் அந்த முயற்சியைச் சரணாகதி அடையச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.''

இத்தீர்மானம் மேலும் கூறியதாவது:—

''பாதுகாப்பு, வெளிவிவகாரம், அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் ஷரத்துக்கள், ''இலங்கை சுதந்திர மசோதாவின்'' மூலம் வழங்கப்பட்ட அரசியல் அதிகாரங்களை மிகக் கடுமையாகப் பாதிக்கின்றன. இந்த ஒப்பந்தங்கள் மூலம் சேனநாயக்கா மந்திரி சபை இந்நாட்டின் சுதந்திரத்தைக் காட்டிக் கொடுப்பதுடன், தென் கிழக்கு ஆசியாவில் முற்போக்கான மக்களிடமிருந்து நமது நாட்டைப் பிரித்து தனிமைப்படுத்துகிறது. இலங்கைக்குக் கணிசமான அளவு சலுகைகளை வழங்குமாறு அந்த மக்கள் தங்களின் போராட்டங்கள் மூலம் பிரிட்டனைக் கட்டாயப்படுத்தினர்.

''சேனநாயக்கா மந்திரி சபையைத் தோற்கடிப்பதற்காகவும், இலங்கையில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை



அடியோடு அகற்றி விடுவதற்காகவும், தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி மக்களின் உடனடி கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், உலக சமாதானத்தையும் சுதந்திரத்தையும், பாதுகாப்பதில் நமது பங்கைச் செய்வதற்காகவும் எல்லா முற்போக்கு, இடதுசாரி சக்திகளையும் நாட்டின் நலன்களை முன்னிட்டு ஐக்கியப்படுத்த வேண்டும். சோஷலிஸத்தின் இறுதி வெற்றியை நோக்கி நாடு மிகவேகமா முன்னேறிச் செல்லக் கூடிய பாதை இதுஒன்றே.

சர்வதேச நிலைமை சம்பந்தமாக இத்தீர்மானம் கூறுவதாவது;

''இரண்டாவது உலக யுத்தத்தின் விளைவாக உலக ஏகாதிபத்தியம் மரண அடி வாங்கியுள்ளது. ஜெர்மன், ஜப்பான், இத்தாலி சாம்ராஜ்யங்கள் மண்ணோடு மண்ணாகி விட்டன. இந்தோனேஷியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் பொங்கிய போராட்டங்கள் முன்னாள் டச், பிரெஞ்சு சாம்ராஜ்யங்களை ஆட்டி அசைத்துள்ளன. மிகப் பழமையானதும், பரந்து விரிந்ததுமான பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தற்பாதுகாப்பு நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் அமெரிக்க ஆதிக்கத்துக்கு உட்பட வேண்டிய ஆபத்தையும் எதிர்நோக்கியுள்ளது''

இத்தீர்மானம் தொடர்ந்து கூறியதாவது;—

''பொருளாதார, அரசியல் நெருக்கடியால் ஏகாதிபத்தியம் நிலைகுலைந்து நிற்கிறது. ஒவ்வொரு நாட்டின் மக்களும் ஏகாதிபத்திய தளைகளை அறுத்தெறிந்து வருகின்றனர். கிழக்கு ஐரோப்பாவில் சுமார் 10 கோடி மக்கள் வெளிநாட்டு ஏகாதிபத்திய பிடியிலிந்து தங்களைவிடுவித்துக்கொண்டு, பொருளாதார, சமுதாய புனர்வாழ்வை நோக்கி முன்னேறுகின்றனர். சீன விடுதலைச் சக்திகள் தங்களின் தாயகத்தை அமெரிக்க— ஆதிக்கத்திலுள்ள கூமிங்டாங் ஆட்சியிலிருந்து விடுதலை செய்வதற்காக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் அணி திரளுகின்றனர். இந்திய, பர்மா மற்றும் காலனி நாடுகளின் மக்கள்

தேசிய சுதந்திரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். உலகத் தொழிலாளர் வர்க்கமும், தொழிலாளர் இயக்கங்களும் இறுதி சமுதாய விடுதலையை நோக்கி விரைவாக முன்னேறுகின்றன.

கூடிய கீர்த்தியையும், உலகச் செல்வாக்கையும் பெற்றுள்ள சோவியத் நாடு யுத்த-கொதிப்புக்கு எதிராகவும், உலக சமாதானம், சுதந்திரம் ஆகியவைகளுக்காகவும், எல்லா முற்போக்கு மனிதவர்க்கத்தை ஒன்று திரட்டும் கேந்திர ஸ்தானமாகவும் அவர்களின் பாதுகாப்புக் கோட்டையாகவும் விளங்குகிறது.

இலங்கை நிலைமை பற்றி தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்ததாவது:-

''இலங்கையில் தற்போதைய நிலைமையின் முக்கிய அம்சங்களாவன:— (அ) இங்கு காலனிப் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து வருவது.

(ஆ) இந்த நெருக்கடியின் விளைவுகளை எதிர்த்து தொழிலாளர், மத்தியதர வகுப்பு மக்கள் நடத்தும் போராட்டங்கள்.

(இ) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இலங்கை பூர்ஷுவாக்களுக்குமிடையே ஒத்துழைப்பு அதிகரித்து வருவது.

தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:—

''எல்லாவித முன்னேற்றங்களையும் எதிர்த்து வருவதும், அரசாங்க நிர்வாகத்தில் இலஞ்சம், ஊழல்கள் குடிகொண்டிருப்பதற்கான முழுப்பொறுப்பை ஏற்க வேண்டியதும், மரணப்படுக்கையில் கிடக்கும் ஏகாதிபத்தியத்துடன் நமது எதிர்காலத்தைப் பிணைப்பதற்கு இப்பொழுது முயற்சி செய்து கொண்டிருப்பதுமான யு. என். பி. அரசாங்கத்துக்கெதிராக நடத்தும் நடவடிக்கை சரியானதும் அவசர அவசியமானதுமாகும்



என்பதையே மேற்கண்ட முக்கிய அம்சங்கள் வற்புறுத்துகின்றன.

''பூரண சுதந்திரம், ஜனநாயகம், சமுதாய முன்னேற்றம் ஆகியவைகளுக்காகப் போராடும், இடதுசாரி — முற்போக்குவாதிகள் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மக்கள் அரசாங்கத்தை யு. என். பி. அரசாங்கத்துக்குப் பதிலாக நிறுவ வேண்டிய அவசர அவசியத்தை அந்த அம்சங்கள் வற்புறுத்துகின்றன.

''மக்கள் அரசாங்கத்தை நிறுவும் பொருட்டு ஒரு ஜனநாயக முன்னணியை அமைப்பதற்காக பாராளுமன்றத்தில் உள்ளும் புறமும் போராடுவதற்கு ஒன்று திரளும்படி எல்லா இடதுசாரி, முற்போக்கு சக்திகளையும் இந்த இரண்டாவது காங்கிரஸ் அழைக்கிறது.

இலங்கையைப் பிணைத்திருக்கும் பிரிட்டிஷ் ஏகபோக தளையை அறுத்தெறிந்து, உலகில் இதர முற்போக்கு மக்களுடன் கைகோர்த்துக் கொண்டு இலங்கை மக்களுக்கும் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய ஒரு குறைந்த பட்ச வேலைத் திட்டத்தையும், அத்தகைய முற்போக்கு அரசாங்கத்தை நிறுவும் பொருட்டு, எல்லா இடதுசாரி, முற்போக்கு மக்களின் பரிசீலனைக்காக காங்கிரஸ் சமர்பித்தது.

''அத்தகைய மக்கள் அரசாங்கமொன்றினை உருவாக்கும் முக்கிய பொறுப்பு இடதுசாரி கூட்டு நடவடிக்கையின் மீதே தங்கியுள்ளது'' என்பதைச் சுட்டிக் காட்டிய அரசியற் தீர்மானம் இடதுசாரி இயக்கத்தை முழுவதாக எடுத்துக் கொண்டு அதனை எடை போட்டது.

தீர்மானம் கூறியதாவது:—

''இந்த நாட்டில் இடதுசாரி இயக்கம் 1930க்குப் பிந்திய பத்தாண்டுகளின் ஆரம்ப வருடங்களில் தொடங்கியது. 1935ல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை சமசமாஜக்

கட்சியே. அதன் முதலாவது ஸ்தாபன ரீதியான அமைப்பாகும். அது அரசாங்க நிர்வாகத்தின் ஊழல்களை அம்பலப்படுத்தி, மக்களின் ஏகாதிபத்திய— எதிர்ப்பு, தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது. ஆனுல் சுதந்திரம், ஜனநாயகம், சமுதாய முன்னேற்றம் ஆகியவைகளுக்காகப் போராடக்கூடியதும், சேனநாயக்கா நிர்வாகத்திற்குப் பதிலாக ஆட்சிபீடத்தில் அமரக்கூடியதுமான விரிவான அடிப்படையைக் கொண்ட ஓர் அரசாங்கத்தை உருவாக்கும் கடமையை அக்கட்சி மக்கள் முன்னிலையில் வைக்கவில்லை.

''அரசியல் ஆதிக்கம் பற்றிய இந்த கேந்திரமான பிரச்னையைத் தட்டிக் கழித்ததின் மூலம், வலதுசாரி தேசியத் தலைமை ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்துக்கொண்டு தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இந்த இயக்கம் அனுமதித்தது.

''1939ல் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேறி, பின்னர் 1943ல் இலங்கை கம்யூனிஸ்ட், கட்சியை நிறுவிய கம்யூனிஸ்ட் சக்திகள் கூட, அரசியல் ஆதிக்கம் ஏகாதிபத்திய—எதிர்ப்புப் போராட்டம் ஆகியவை பற்றிய இந்தக் கேந்திரமான பிரச்சினையை எழுப்பவில்லை.

''இந்நாட்டில் இடதுசாரி இயக்கம் வெறுமனே எதிர்ப்பைக் காட்டுவதும், ஆட்சியிலிருந்த அரசாங்க நிர்வாகத்தை அம்பலப்படுத்துவதுமே தங்களின் கடமை என்று கருதியதேயன்றி, ஏகாதிபத்தியத்திடம் இருந்து முழு ஆதிக்கத்தையும் கைப்பற்றுவதற்காக எல்லா தீவிர, முற்போக்குச் சக்திகளையும் அணி திரட்டுவதே தங்களின் கடமையென்று கருதவில்லை......

''கடந்த பொதுத் தேர்தலின்போது துலாம்பரமான வாழ்க்கை அபிவிருத்தி, சோஷலிஸ்ட் உணர்ச்சியின் வளர்ச்சி, மக்கற் தீவிரத்தன்மையைப் பெற்றது. ஆகியவை ஒரு கடுமையான பிரச்சினையை இடதுசாரி இயக்கத்தின் முன் வைத்தன.



''பயனற்ற எதிர்ப்பைக் காட்டிக் கொண்டு, அரசாங்கத்தின் ஊழல்களை வெறுமனே அம்பலப்படுத்திக் கொண்டு இருப்பதா? இல்லையேல் மக்கள் பெரும் பகுதியினரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு மக்கள் அரசாங்கத்தை நிறுவும் பொருட்டு இயக்கம் நடத்துவதற்காக கூட்டு முன்னணி அமைக்க முயற்சி செய்வதா? இவ்விரண்டிலொன்றை உண்மையான இடதுசாரி சக்திகள் அனைத்தும் இன்று தீர்மானிக்க வேண்டும் என்று இக்காங்கிரஸ் அறிவிக்கிறது.

''மக்களின் அன்ருட கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி, இடதுசாரி—முற்போக்கு ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மக்கள் அரசாங்கத்தை அமைப்பதற்காகவும் எல்லா இடதுசாரி சக்திகளும் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுக்கும்படி இக்காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கிறது.

''இன்று இடதுசாரிகளுக்கான சரியான பாதை இது ஒன்று மட்டுமே. வேறு எந்தப் பாதையும் யு. என். பியின் பாராட்டுதலைப் பெறுவதுடன், தற்போதைய சேனநாயக்கா மந்திரி சபையையும், ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கும் அதன் கொள்கையையும் உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.''

இரண்டாவது காங்கிரஸின் முடிவுகளுக்கமைய பல்வேறு தற்காலிகப் பிரச்னைகளில் இதர இடதுசாரி கட்சிகளுடன் சேர்ந்து ஐக்கிய நடவடிக்கை எடுப்பதில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்றது. ஆனுல் துரதிர்ஷ்டவசமாக அப்பொழுது இடதுசாரி ஐக்கியம் அதற்கு அப்பால் செல்லவில்லை.

மேலும், அந்தக்கட்டத்தில் சிற்சில குழப்ப நிலைகளிலிருந்தும், தவறுகளிலிருந்தும் விடுபட்டிருக்கவில்லை. இரண்டாவது காங்கிரஸில் தோல்வி மனப்போக்கு நிராகரிக்கப்பட்டதை யொட்டி, கொள்கையில் குரங்குப் பிடிவாதமும், இடதுசாரி—ஏகாந்தவாதப் போக்கும் கட்சியுள் வளர்ந்தன. இலங்கையில் வர்க்க உறவுகளின் யதார்த்த நிலைமைகளை தெளிவாக ஆழ்ந்து ஆரா

யாமல், சீனப் புரட்சியின் வெற்றிகளையும், அநேக கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் மக்கள் ஜனநாயக அரசுகள் அமைக்கப்பட்டதையும் கண்டு மேலிட்ட உற்சாகத்தின் அடிப்படையில் இலங்கை நிலைமையை எடைபோட்டதும் மேற்கண்ட மனப்போக்குகள் வளர்ந்ததற்கான காரணங்களிலொன்ருகும்.

இந்த இடதுசாரி—ஏகாந்தவாதப் போக்குகளின் வளர்ச்சி இரண்டாவது காங்கிரஸால் தெரிவு செய்யப் பட்ட மத்தியக் குழுவில் கடுமையான கருத்து வேற் றுமைகள் ஏற்பட ஏதுவாயிற்று. புரட்சி ஏற்படும் கட் டம், ஐக்கிய ஜனநாயக முன்னணி அமைக்குமாறு கட்சி விடுத்த வேண்டுகோளின் பொருள், தேசிய பூர்ஷுவாக்களின் கடமை, இதர இடதுசாரி கட்சிகளுடன் கூட்டு நடவடிக்கை, போராட்ட முறைகள் போன்ற பல பிரச்சினைகள் பற்றி கருத்து வேற்றுமைகள் தோன் றுவதாலேயே.

கருத்து வேற்றுமைகள் எவ்வளவு தூரம் கடுமை யாகிவிட்டதென்ருல், அந்தக் கருத்துக்கள் அடங்கிய தனித்தனி அறிக்கைகளை விநியோகித்து, அங்கத்தினர் கள் அனைவரும் அவற்றை விவாதித்த பின்னர், 1948 செப்டெம்பரில் ஒரு கட்சிக் காங்கிரஸ் நடத்தி முடிவு செய்வதென்று 1948 ஆகஸ்டு 14, 15ந் திகதிகளில் கூடிய மத்தியக்குழு தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

1948 செப்டம்பரில் அத்துரெலிய என்னுமிடத்தில் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்ரு வது காங்கிரஸில் இடதுசாரி ஏகாந்தவாதப் போக்கு வெற்றியீட்டியது. இடதுசாரி — ஏகாந்தவாதிகளின் அரசியல் நோக்கம் பின்வருமாறு:—

''புரட்சி நிலைமை வேகமாக உருவாகி வருகிறது. அது எழுச்சிபெறும் கட்டத்தை நெருங்கி விட்டது. எல்லா மக்கள் போராட்டங்களும்—அவை குறிப் பிட்ட சில நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டாலும் கூட — தற்போதைய அரசுடனும் சமுதாய அமைப்பு



டனும் பகிரங்கமாக மோதக் கூடியதாக வளர்க்கப்பட வேண்டும். கட்சியின் உடனடிக் கொள்கை ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் யு. என். பி. அரசாங் கத்தை வீழ்த்தி, சோல்பரி அரசாங்க இயந்திரத்தை நொறுக்கித்தள்ளி, ஒரு மக்கள் ஜனநாயக அரசை அமைப்பதே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத் துக்கு மாறும் ஒரே மார்க்கமாகும். அது ஒன்றே தேசிய சுதந்திரத்தையும், சோஷலிஸத்துக்கு துரிதமாக முன்னேறுவதையும் உறுதிபடுத்த முடியும். வேறு எந்தப்பாதையும் மார்க்ஸீய—விரோதமான, புரட்சி—எதிர்ப்பு வழியாகும்.''

இடதுசாரி — ஏகாந்தவாத வேலைத்திட்டம் மேலும் கூறியதாவது:—

''பூர்ஷுவாக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சிக் கட்டம் முடிந்து விட்டது. பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியின் கடமைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அதே சமயத் தில் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் மக்கள் ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். தொழிலாளரிடையே கொள்கை ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் செல்வாக்குப் பெற்றுள்ள இடதுசாரி கட்சிகளும் இதர கட்சிகளும் யு. என். பி. அரசாங் கத்தை வீழ்த்தும் போராட்டத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதால், அந்தக் கட்சிகளைத் தனிமைப் படுத்தி, பூரணமாகத் தோற்கடிப்பதற்காக கம்யூ னிஸ்ட்கட்சி ஓர் உறுதியான போராட்டத்தை நடத்த வேண்டும்.''

முந்திய மத்தியக் குழுவில் இடதுசாரி — ஏகாந்த வாதிகளுக்குத் தலைமை தாங்கிய அப்பொழுது மாத் தறைத் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதியான ஹெரி அபேகுணவர்தன மூன்ருவது காங்கிரஸுக்குப் பின்னர் பொதுக்காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த ஈராண்டுகளிலும் இடதுசாரி — ஏகாந்த வாதிகளின் கொள்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன்

தொழிற் சங்கங்களுக்கும் பெரும் சேதம் உண்டாக்கி
யது. உழைப்பாளி மக்களின் பிரதான நலன்களுக்
காகப் போராட்டங்கள் நடத்துவதற்கு அவர்களை ஸ்தா
பன ரீதியாக அணி திரட்டுவதற்குப் பதிலாக அதிதீவிர
—இடதுசாரி கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன்,
தனித்தனியாக ''புரட்சி''ச் செயல்களும் நடத்தப்பட்
டன. குறிப்பாக தோட்டப்பகுதிகளில் தொழிற் சங்கங்
கள் இந்தக் கொள்கையால் பெருமளவு பாதிக்கப்பட்
டன. அவை அதிலிருந்து தலைதூக்குவதற்குப்பல மாதங்
கள் தேவைப்பட்டன.

இடதுசாரி—ஏகாந்தவாதிகளுக்கு நிர்வாகத்துறை
யில் சில காலம் கட்சிக்குள் தங்களின் ஆதிக்கத்தைச்
செலுத்த முடிந்தது. இடதுசாரி— ஏகாந்தவாதிகளின்
முடிவுகளை எதிர்த்ததற்காக பீட்டர் கெனமன், எச்.
ஜி. எஸ். ரத்னவீர போன்ற மத்தியக்குழு உறுப்பினர்
கள் அநேகர் மத்தியக் குழு அங்கத்தினர் பதவியி
லிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டனர். அச்சந்தர்ப்
பத்தில் டாக்டர் விக்கிரமசிங்கா இலங்கையில் இல்லா
திருந்ததையும் இடதுசாரி—ஏகாந்தவாதிகள் பயன்
படுத்திக் கொண்டனர். அவர் இலங்கையின் பிரதிநிதி
யாக உலகத் தொழிற்சங்க சம்மேளனம் சம்பந்தப்
பட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

இடதுசாரி—ஏகாந்தப் போக்கு ஆதிக்கம் வகித்த
தெனினும் மூன்றுவது, நான்காவது காங்கிரஸ்களுக்கு
இடைப்பட்ட காலகட்டத்தில் கட்சி பயனுள்ள
செயல்களிலிருந்து பூரணமாக விடுபட்டிருக்கவில்லை.
''கம்யூனிஸ்ட்'' என்ற பெயரில் கட்சியின் ஒரு சிங்க
ளத் தினசரிப் பத்திரிகை 1949ல் ஆரம்பிக்கப்பட்டது.
இது அத்தகைய பயனுள்ள செயல்களிலொன்றுகும்.
''கம்யூனிஸ்ட்'' இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்
தின் முதலாவது தினசரியாகும். இப்பத்திரிகையைத்
தயாரித்தல், விநியோகம் ஆகிய பொறுப்புகளை மேற்
கொண்டிருந்த தோழர்களின் தியாகத்தாலும் விடா
முயற்சியாலும் அது ஒரு வருடத்துக்கு மேல்
தொடர்ந்து நடைபெற்றது.



அதிதீவிர—இடதுசாரிக் கொள்கைகளின் விளைவாக கட்சி ஸ்தாபனத்துக்கும் கட்சியின் செல்வாக்கிற்கும் எத்தகைய பெரிய சேதம் ஏற்படுத்தப்பட்டதென்பதையும், கட்சி எவ்வளவு தூரம் மக்களிடமிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டதென்பதையும் கட்சி அங்கத்தினர்கள் தெளிவாக உணர உணர, 1949ல் இடதுசாரி—ஏகாந்தவாதக் கொள்கைகளுக்கு கட்சியில் எதிர்ப்பு வளரத் தொடங்கியது: வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்காவும், பீட்டர் கெனமன், எம். ஜி. மெண்டிஸ் எச். ஜி. எஸ். ரத்னவீரா, என். சண்முகதாசன், பி. குமாரசிரி போன்ற மத்தியக்குழு உறுப்பினர்களும் இந்த எதிர்ப்புக்குத் தலைமை தாங்கினர். கட்சியை ஸ்தாபிப்பதற்கு உதவிய டப்ளியூ. ஆரியரத்ன, டி. பி. யசோதிஸ், எஸ். ஏ. பொடிசிங்கா போன்ற பழைய தொழிலாளர் வர்க்கத் தோழர்களும், மற்றவர்களும் இடதுசாரி— ஏகாந்தவாதிகளை எதிர்ப்பதிலும், அவர்களை அம்பலப்படுத்துவதிலும் பெரும்பணியாற்றினர். 1950 செப்டம்பரில் மாத்தறையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி நான்காவது காங்கிரஸில் இடதுசாரி — ஏகாந்தப் போக்கு துடைத்தெறியப்பட்டது.

இலங்கையில் புரட்சியின் அப்போதைய கட்டத்தைப்பற்றி கட்சி அங்கத்தினர்களிடையே நிலவிய குழப்ப நிலையைத் தெளிவுபடுத்துவதற்காகவும், இந்தப் புரட்சியின் கடமைகளையும் அதன் உண்மையான தன்மையையும் நிர்ணயிப்பதற்காகவும், புரட்சிக்கு எதிரான சமுதாய சக்திகளையும் புரட்சியில் பங்குபற்றக் கூடிய வர்க்கங்களையும் விமர்சிப்பதற்காகவும் நான்காவது காங்கிரஸ் கூட்டப்பட்டது.

இலங்கைப் புரட்சியின் கடமைகளை விளக்கியும், அதன் கட்டங்களை விளக்கியும் நான்காவது காங்கிஸில் நிறைவேற்றப்பட்ட அரசியற் தீர்மானம் கூறியதாவது;—

''மிக முக்கியமான கடமை ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்ளூர் அடிவருடிகளையும் தோற்கடித்து தேசிய

சுதந்திரம் பெறுவதும், அதே சமயத்தில் நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களைத் துடைத்தெறிவதுமாகும். வெளிநிலையைப் பொறுத்தவரையில் ஏகாதிபத்தியத்திற்கும் அதன் உள்ளூர் அடிவருடிகளுக்கும், எதிராகத் தேசியப் புரட்சி நடத்தப்பட வேண்டும். உள்ளூர் நிலையைப் பொறுத்தவரையில் பிரபுத்துவத்திற்கெதிராக ஒரு ஜனநாயகப் புரட்சி நடத்தப்பட வேண்டும். இவ்விரு கடமைகளும் ஒன்றோடொன்று ஒட்டியவைகளே; பரஸ்பரம் இணைந்தவைகளே''

புரட்சியின் எதிரிகள் பற்றி அரசியற் தீர்மானம் கூறியதாவது:-

''ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களின் அடிவருடிகளான ஒத்துழைப்புப் பூர்ஷ்வாக்களும், பிரபுக்களுமே புரட்சியின் விரோதிகள். ஆனால்புரட்சிக்கு எதிரான முக்கிய சக்தி ஏகாதிபத்தியமே''

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:-

''காலனியவாதிகளும், அரைகுறை—பிரபுத்துவவாதிகளும் அடிப்படையில் நமது எதிரிகளாக இருப்பதாலும், ஏகாதிபத்தியவாதிகள் அவர்களுடன் ஒத்துழைக்கும் பூர்ஷ்வாக்கள் நிலப்பிரபுகள் ஆகியோர் புரட்சியின் முக்கிய விரோதிகளாக இருப்பதாலும் ஏகாதிபத்தியத்தையும், பிரபுத்துவத்தையும் வீழ்த்துவது நம்முன்னுள்ள கடமையாக இருப்பதாலும், புரட்சியின் தற்போதைய கட்டம் சோஷலிஸ்ட் தன்மையைப் பெறாது. ஆனால் அது அடிப்படையில் பூர்ஷுவா ஜனநாயகத் தன்மையைப் பெற்றிருக்கும்.

'நம்முன்னுள்ள புரட்சி அடிப்படையில் பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியின் தன்மையைப் பெற்றிருப்பதாலும் இது பிரிட்டன், பிரான்ஸ் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற பழைய ரக பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியிலும் வித்தியாசமானதாகும், அந்தப்புரட்சிகளைப் பூர்ஷுவாக்கள் தலைமைதாங்கி நடத்திபூர்ஷுவா வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தினர்.



சோஷலிஸ்ட் அரசு இல்லாத ஒரு காலகட்டத்திலே அப்புரட்சிகள் நிகழ்ந்தன.

''புதிய ரக பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சி மாறுபட்ட நிலைமையில் ஏற்படுகிறது. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் எல்லா தேசிய விடுதலைப் புரட்சிகளும் உலக சோஷலிஸ்ட் புரட்சியின் பகுதியாகியுள்ளன. இது புரட்சியின் சரித்திர ரீதியானவழிகாட்டுதலில் மாற்றத்தைக் கொண்டு வருகிறது. மேலும், இந்தப் புரட்சிக்குத் தலைமைதாங்குபவர்கள் தொழிலாளர் வர்க்கமே அன்றி, அந்தப் புரட்சிகளைப் போன்று பூர்ஷுவாக்கள் அல்ல. இந்தப் புரட்சியால் ஏற்படுவது தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் உள்ள பல புரட்சிகர வர்க்கங்களின் சர்வாதிகாரமேயன்றி, பூர்ஷுவா வர்க்கத்தின் சர்வாதிகாரமன்று.

''அது தேசிய பூர்ஷுவா ஜனநாயகத் தன்மையை கொண்டது என்று நாம் குறிப்பிட்டுள்ளோம். வேறு சொற்களில் கூறின், அது தேசிய ஜனநாயகப் புரட்சி ஆகும். தேசிய சுதந்திரம் பெறுவதற்காக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடத்தப்படுவதால் இது தேசியப்புரட்சியாகும்.''

தேசிய ஜனநாயகப் புரட்சி பொருளாதாரத் துறையில் பெறக்கூடிய சாதனைகள் பற்றி அரசியற் தீர்மானம் குறிப்பிட்டதாவது:-

ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் உள்ளூர் அடிவருடிகளுக்கும் சொந்தமானதோட்டங்கள்வங்கிகள் தொழில் வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் நஷ்டயீடு வழங்காமல் பறிமுதல் செய்யப்படும். போக்கு வரத்துச் சேவை நஷ்டயீடு வழங்காமல் தேசியமாயமக்கப்படும். ஏகாதிபத்தியவாதிகளினதும் அவர்களின் உள்ளூர்அடிவருடிகளினதும் கையிலுள்ளவர்த்தகம் கைப்பற்றப்படும். எல்லா ஆதாரத்தொழில்களும் தேசியச்செல்வமும் அரசாங்கத்திற்கு சொந்தமாக்கப்படும். திட்டமிட்டுத் தொழில்மயமாக்கும் கொள்கையும் இயந்திரமய விவசாயக்கொள்கையும் அமுல் நடத்தப்படும். பெரிய தோட்

டங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்படும். நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படும்’’

புரட்சியின் சக்திகள் சம்பந்தமாக அரசியற் தீர்மானம் கூறியதாவது:- ‘‘புரட்சியின் மிக நம்பிக்கையான சக்தியும், அதன் தலைவனும் தொழிலாளர் வர்க்கமே. தற்போதைய சமுதாயத்திலுள்ள எல்லா வர்க்கங்களிலும் அது மிகவும் புரட்சிகரமானதாகும். இந்தக் காரணத்தால் அது என்றுமே புரட்சியைக் கைவிட்டு ஓடாது. எனவே அது புரட்சிக்குத் தலைமை தாங்கத் தகுதியானதாகும்.

‘‘வரப்போகும் புரட்சியிலே விவசாய மக்களின் எல்லாப் பகுதியினரும் தொழிலாளர் வர்க்கத்தின் உறுதியான பங்குதாரர்களாக இருப்பார்கள். உண்மையில், கிராமந்தரப் பகுதியில் நிலப் பிரபுக்களும், பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகளுடன் பகிரங்கமாகக் கூட்டுச் சேர்ந்துள்ளவர்களும் தவிர ஏனைய எல்லா சக்திகளும் தொழிலாளர் வர்க்கத்தின் கூட்டாளிகளே. தொழிலாளர் வர்க்கத்தையும் விவசாயிகளையும் கொண்ட உறுதியான கூட்டணி புரட்சியின் பிரதான சக்தியாக விளங்கும்.

‘‘ அடுத்து, பல்வேறு வகைகளைச் சேர்ந்த குட்டி பூர்ஷுவாக்கள் இருக்கின்றனர். அறிவாளிகள், குமாஸ்தா போன்ற சிப்பந்திகள், உத்தியோகஸ்தர்கள் சிறு வியாபாரிகள், கைப்பணியாளர்கள் முதலியோர் இந்த வகையைச் சேர்ந்தவர்களாவர். இத்தகைய குட்டிபூர்ஷுவா ரகங்களைச் சேர்ந்தவர்களும் விவசாயிகளும் ஏகாதிபத்தியத்தாலும், பிரபுத்துவத்தாலும் சுரண்டப்பட்டு, மென்மேலும் வங்கரோத்து நிலையை அடைந்து அழிவை எதிர்நோக்கியுள்ளனர். ஆகவே அவர்கள் புரட்சிச் சக்திகளின் ஒரு பகுதியாவர்.’’

இலங்கையின் பூர்ஷுவாக்களின் செயல்முறைகளை விமர்சித்ததின் மூலம், நான்காவது காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்குப் புதிய பாதையைத் திறந்துவிட்டது. இதுபற்றி அரசியற் தீர்மானம் கூறியதாவது:-



‘‘தேசிய விடுதலைப் புரட்சியில் பூர்ஷுவாக்களின் செயல்முறைகளைப்பற்றி தற்போதுள்ள குழப்பநிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். காலனி நாடுகளிலும், அரை-குறை காலனி நாடுகளிலும் பூர்ஷுவா வர்க்கம் இரு வெவ்வேறு கோஷ்டிகளாகப் பிரிந்திருக்கிறது என்று மார்க்சிஸம்-லெனினிஸம் போதிக்கிறது. ஒரு பகுதி மேல்தட்டிலுள்ள பூர்ஷுவாக்களாவர். அவர்களை ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள பூர்ஷுவாக்கள் என்று நாம் கூறுகின்றோம். இப்பகுதி, தேசிய இயக்கத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துவிடும். இரண்டாவது உலக யுத்தகாலத்திலிருந்து இது தெளிவாகத் தெரிந்தது. அந்தச் சமயத்தில் காலனிகளில் விடுதலை இயக்கம் பெருமளவு வளர்ந்தோங்கியதால், தேசிய இயக்கமும் தொழிலாளர் வர்க்கமும் வெள்ளம்போல பொங்கிவருவதைக் கண்டு பீதியடைந்த பூர்ஷுவாக்களின் இந்தப்பகுதியினர் ஏகாதிபத்தியத்துடன் பகிரங்கமாகவும் வெட்கமின்றியும் கூட்டுச் சேர்வதற்காக பூரணமாக அவர்கள் பக்கம் சென்றுவிட்டார்கள். மக்கள் இயக்கங்களை அடக்கி வைத்துக்கொள்ள இவர்களின் உதவி ஏகாதிபத்தியத்திற்குத் தேவைப்பட்டது. எல்லா காலனி நாடுகளிலும் இது நடைபெறுவதை நாம் பார்த்துள்ளோம். யு. என். பி. தான் பூர்ஷுவாக்களின் இந்தப் பகுதிப் பிரதிநிதித்துவம் தாங்குகிறது. இன்று யு. என். பி., ஏகாதிபத்தியத்தின் பகிரங்க அடிவருடியாகியுள்ளது. ஆகவே அது மக்களின் விரோதியாகும்.

பூர்ஷுவா வர்க்கத்தின் மற்றப்பகுதி ஏகாதிபத்திய-எதிர்ப்புள்ள ஜனநாயகக் கோஷ்டியாகும். இக்கோஷ்டி எவ்வளவுதான் ஊசலாடும் போக்கைக் கொண்டிருந்தாலும், எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுப்பதிலேயே ஈடுபட்டிருக்கும். இந்தப் பகுதி இருவித தன்மைகளைக் கொண்டதாகும். ஒரு பக்கத்தில் இது ஏகாதிபத்தியத்தாலும், அத்துடன் கூட்டிச் சேர்ந்துள்ள பூர்ஷுவாக்களாலும் அடக்கி ஒடுக்கப்படுகிறது. உலகப் பொருளாதார நெருக்கடி அதிகரிக்க, அமெரிக்கப்

பொருளாதாரப்பிடி இறுக, இறுக! இந்த அடக்கி ஒடுக்குதலும் அதிகரிக்கிறது. ஆகவே இந்தக் கோஷ்டி ஏகாதிபத்தியத்துடன் மோதவேண்டிய நிர்ப்பந்தத் திற்கு தள்ளப்படுகிறது. மற்ருெரு பக்கத்தில் இப்பகுதி அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலவீனமானதாகும். இது இன்னும் ஏகாதிபத்தியத்து டனும், ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள முதலாளித்துவத்துடனும் தனக்குள்ள பிணைப்புக்களை இன்னும் துண்டித்துக் கொள்ளவில்லை. ஆகவே, இது தேசிய இயக்கத்தில் பங்குபற்றுவதில் ஊசலாடும் போக் கைக் கொண்டுள்ளது.

''ஆயினும் தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்தியத் துக்கெதிராக பூர்ஷுவாக்களில் இந்தப் பகுதிகளுடன் ஓர் உடன் பாடு (இந்த உடன்பாடு தற்காலிகமாக மாக இருந்தாலும் சரி, ஓரளவு தூரத்துக்கு மட்டும் செல்லக் கூடியதாக இருந்தாலும் சரி) செய்து கொள் ளவேண்டும் என்ற கருத்தை மார்க்ஸியவாதிகள் எப் பொழுதும் கொண்டுள்ளனர்''

ஏகாதிபத்தியத்திற்கெதிரான ஐக்கிய முன்னணியில் யு.என்.பியும் பங்குபற்ற முடியும் என்று கருதி புதிதாக நிறுவப்பட்ட யு. என். பி. யின் தன்மை பற்றி தவருக மதிப்பிடப்பட்டதின் மூலம் 1947 ஆரம்பத்தில் கம்யூ னிஸ்ட் கட்சி வலதுசாரிசந்தப்பவாத தவற்றை இழை த்தது. ஒரு சில மாதங்களில் கம்யூனிஸ்ட் கட்சி இந்த தவற்றைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, அதனைத் திருத்திக் கொண்டது. இதனையொட்டி, இரண்டாவது காங்கிரஸுக்கு—குறிப்பாகமூன்ருவது காங்கிரஸுக்குப் பிறகு இடதுகாரி — ஏகாந்தவாதம் வளர்ந்தது.

நான்காவது காங்கிரஸ் இரு தவறுகளையும் திருத்தி யது. அதன் முடிவுகள் அடுத்து வந்த வருடங்களில் கட்சி யின் பொதுவான கொள்கைக்கு சித்தாந்த ரீதியான அரசியல் அடிப்படையாக அமைந்தன. ஆதலின் நான் காவது காங்கிரஸ் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வர லாற்றில் மட்டுமின்றி, இலங்கையில் முழு ஏகாதிபத் திய—எதிர்ப்பு முற்போக்கு இயக்கத்திலேயே ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது.



### நான்காவது அத்தியாயம்

# யு. என். பியின் தோல்வி

நான்காவது காங்கிரஸில் தெரிவு செய்யப்பட்ட கட்சி மத்திய குழு டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா வைப் பொதுக் காரியதரிசியாகவும், பீட்டர் கெனமனை யும், எம். ஜி. மெண்டிஸையும் உதவிக் காரியதரிசி களாகவும் தெரிவு செய்தது.

கட்சி அங்கத்தினர்களை மீண்டும் பதிவு செய்வதற் கும், கட்சியையும் அதன் தலைமையிலுள்ள தொழிற் சங்கங்களையும் திருத்தியமைக்கவும், இடதுசாரி— ஏகாந்தவாதிகளின் தலைமை இருந்தசமயத்தில் ஏற்பட்ட சேதங்களைச் சீராக்கவும் நான்காவது காங்கிரஸ் முடி வடைந்ததும் கட்சி நடவடிக்கை எடுத்தது. யு. என். பி அரசாங்கம் ஆங்கிலோ — அமெரிக்க ஏகாதிபத்தியத் துக்கு மென்மேலும் அடிவருடியாவதையும். கொரிய யுத்தத்தால் சிறிது காலம் மட்டும் கிடைத்த வர்த்தக இலாபத்தை நிரந்தரமான ஒரு சுபீட்சம் என்று கூறி வந்த யு. என். பி. அரசாங்கத்தின் போலிக் கூற்றை யும், வளர்ந்து வந்த பொருளாதார நெருக்கடியின் உண்மை நிலையையும், யு. என். பி. அரசாங்கத்துள் வளர்ந்து கொண்டிருந்த அரசியல் நெருக்கடியும் அம் பலப்படுத்துவதற்காகக் கட்சி பல பிரசார இயக்கங்களை நடத்தியது.

1940ல் இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட அபாய கரமான பிளவை ஒரு சரியான கொள்கையின் அடிப் படையிலே சீராக்குவதின் மூலம் யு. என். பி—எதிர்ப்பு இயக்கத்தின் ஏனைய பகுதியினருக்குப் பலனுள்ள தலை மையை அளிக்க முடியுமென்றும், ஏகாதிபத்தியத்துக் கும், யு. என். பிக்கும் இறுதி தாக்குதலைக் கொடுப்ப

மக்களையும் தட்டியெழுப்ப
தற்காக எல்லாப் பகுதி
முடியுமென்றும் கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுதுமே
நம்பி வந்துள்ளது. இந்த நோக்கத்தைக் கருத்திற்
கொண்டுதான் கட்சி திரு. பிலிப் குணவர்தனு தலைமை
யிலிருந்த இலங்கை சமசமாஜக் கட்சியுடன் ஐக்கிய
முன்னணி பற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்தி, 1951
ஏப்ரலில் அக்கட்சியுடன் வேலைத்திட்டத்துடன் கூடிய
ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது.

கம்யூனிஸ்ட் கட்சி—சமசமாஜக் கட்சி உடன்
படிக்கை விரிவானதாகும். பாராளுமன்றத்துக்கு வெளி
யில் மக்களின் போராட்டம், தொழிற்சங்க இயக்
கத்தை இணைத்தல், தேர்தல் உடன்பாடு, பிரதிநிதித்
துவ ஸ்தாபனங்களில் கூட்டாகச் செயலாற்றுதல், அர
சாங்க நிர்வாக வேலைத்திட்டம் முதலிய எல்லா அம்
சங்களையும் இந்த உடன்படிக்கை கொண்டிருந்தது.
உண்மையான சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும்,
சோஷலிஸத்தை உருவாக்கும் கடமைகளை நிறைவேற்று
வதற்காகவும் ஏனைய எல்லா ஏகாதிபத்திய — எதிர்ப்பு
யு. என். பி—எதிர்ப்பு சக்திகளை இடதுசாரி இயக்கம்
ஒன்று திரட்டி தலைமை தாங்குவதற்கான ஒரு செயல்
திட்டத்தையும் இந்த உடன்படிக்கை முன்வைத்தது.

கம்யூனிஸ்ட் கட்சி—சமசமாஜக் கட்சி ஐக்கிய முன்
னணி இடதுசாரி ஐக்கியத்தை உருவாக்குவதற்காக
எடுக்கப்பட்ட ஒரு மாபெரும் நடவடிக்கையாகும்.
1940ம் ஆண்டு பிளவுக்குப் பின்னர், முழு இடதுசாரி
இயக்கத்தையும் ஐக்கியப்படுத்துவதற்காக எடுக்கப்
பட்ட முதலாவது செயல் பூர்வமான நடவடிக்கை
இதுதான். டாக்டர் என். எம். பெரேரா தலைமையில்
இருந்தஇலங்கை சமசமாஜக் கட்சியையும் ஐக்கிய முன்
னணியிற் சேர்ப்பதற்காக அப்பொழுது கம்யூனிஸ்ட்
கட்சி செய்த எல்லா முயற்சிகளும் துரதிர்ஷ்டவச
மாகப் பயனற்றுப் போயின.

யு. என். பியினுள் இலங்கை பூர்ஷுவாக்களின்
ஐக்கியம் விரைவில் சிதறுண்டு போய் ஏகாதிபத்தியத்



துடன் கூட்டுச் சேர்ந்துள்ள பகுதியும், தேசிய பகுதியும்
வெவ்வேறு பாதையிற் செல்லுமென்று நான்காவது
காங்கிரஸ் கொடுத்த விளக்கம் முற்றுகச் சரி என்பது
1951 ஜுலையில் திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்
டாரநாயக்காவும் அவரது ஆதரவாளர்களும் யு. என்.
பியை விட்டு விலகியதிலிருந்து நிரூபணமாகியது.
திரு. பண்டாரநாயக்காவும், அவரது ஆதரவாளர்களும்
பல ஏகாதிபத்திய— எதிர்ப்புக் கொள்கைகள் அடங்
கிய ஒரு வேலைத் திட்டத்தைக் கொண்டு ஸ்ரீலங்கா
சுதந்திரக் கட்சியை அமைத்த பொழுது, இந்த முன்
னேற்றத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றதுடன்
யு. என். பிக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான
போராட்டத்திலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன்
ஒத்துழைக்கத் தயாரென்றும் அறிவித்தது.

எதிர்காலத்திற்கான கம்யூனிஸ்ட்கட்சியின் வேலைத்
திட்டத்தையும், கொள்கையையும், நடவடிக்கையை
யும் நாட்டு மக்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதற்காக
1952 மார்ச் 9ந் திகதி கம்யூனிஸ்ட் கட்சி ஒரு விசேட
தேசிய மகாநாட்டைக் கொழும்பு நகரமண்டபத்தில்
நடத்தியது. கட்சிப் பிரதிநிதிகள் மட்டுமின்றி, இதர
கட்சிகளினதும், பொது ஸ்தாபனங்களினதும் சகோ
தரப் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும், பத்திரி
கையாளர்களும், பொது மக்களும் இந்த மகாநாட்டில்
கலந்து கொண்டனர். 5660

இந்த மகாநாட்டின் அறிக்கையைப் பீட்டர் கென
மன் சமர்ப்பித்தார். நான்காவது காங்கிரஸுக்குப் பின்
னர் நடைபெற்ற கட்சி வேலைகளை விளக்கி கூறிய
அந்த அறிக்கை அடுத்து வந்த பொதுத் தேர்தலில்
ஒன்று சேர்ந்து போட்டியிடுவதற்காக யு. என். பி—
எதிர்ப்புக் கட்சிகளிடையே ஒரு தேர்தல் உடன்படிக்கை
செய்து கொள்ள வேண்டுமென்று யோசனை கூறியது.
அறிக்கை மேலும் கூறியதாவது:—

"இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுவது
நமது நாட்டினதும், மக்களினதும் பொது முன்னேற்

131542 

துக்காக எல்லா முற்போக்கு சக்திகளினதும் ஆதரவைத் திரட்டி அவற்றை ஐக்கியப்படுத்தக் கூடிய ஒரு பொது வேலைத்திட்டமும் செயல் பூர்வமான கொள்கையுமேயன்றி, ஒவ்வொரு கட்சியும் தத்தமது இறுதி இலட்சியங்களையும் கொள்கைகளையும் பிரதிநிதித்துவப் படுத்துவதன்று.

''யு. என். பி. அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் கையாளென்றும், அது இலங்கை மக்கள் அனைவரதும் தேசிய நலன்களைக் காட்டிக் கொடுக்கும் கட்சியென்றும் கம்யூனிஸ்ட் கட்சி கூறி வந்த விளக்கத்தின் உண்மையைக் கடந்த 18 மாதங்களுள் நிகழ்ந்த சம்பவங்களைக் கொண்டு நமது மக்களில் இன்னும் பெரும் பகுதியினர் உணர்ந்துள்ளனர்.

''யு. என். பியின் ஏகாதிபத்திய எஜமானர்களிடையே நெருக்கடியும், அதன் சொந்தக் கொள்கையின் வங்கரோத்துத்தனமும் யு. என். பியினுள்ளேயே ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளன. 1951 ஜூலை மாதத்தில் திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் அவரது ஆதரவாளர்களும் யு. என். பியிலிருந்து ராஜிநாமா செய்தபொழுது, இந்த நெருக்கடி மிகத் தெளிவாகத் தெரிந்தது.....

''இந்தப் பகுதியினர் யு. என். பியிலிருந்து வெளியேறி யு. என். பிக் கொள்கைகளை எதிர்க்கத் தீர்மானித்ததைக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அவர்களின் வெளியேற்றம் யு. என். பியைத் தோற்கடிக்கும் கடமையை நிறைவேற்றுவதற்கு மேலும் உதவியாக இருக்கிறதென்று கட்சி கருதுகிறது.

''ஏகாதிபத்திய—எதிர்ப்பு, யு. என். பி—எதிர்ப்பு இயக்கத்திலே இந்தப் பகுதியினர் பெரும் பங்கெடுக்க முடியுமென்று கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. ஏகாதிபத்தியத்தையும், யு. என். பியையும் தோற்கடிக்கும் பொதுக் கடமையிலும், நமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் அவர்களுடன் ஒத்துழைப்பதற்குத் தயாராயிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கின்றோம்.



இலங்கை ''மக்களில் எந்தப் பகுதியாவது அல்லது வர்க்கமாவது ஏகாதிபத்திய—எதிர்ப்பு, யு. என். பி. எதிர்ப்பு அடிப்படையிலே தங்களை ஸ்தாபன ரீதியாக அமைத்துக்கொள்ள முன் வந்தால் அதனை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கும். அத்தகைய எல்லா ஸ்தாபனங்களுடனும் சகோதர ஒத்துழைப்பையே நாங்கள் விரும்புகின்றோம். நம்மிடையே எத்தகைய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், யு. என். பியைத் தோற்கடிக்கும் பொது நலனை முன்னிட்டு அவற்றைத் தீர்த்துக் கொள்ள முடியுமென்பதே எமது கருத்து.''

இடதுசாரி ஒத்துழைப்பின்றி, தனியாக நின்று யு. என். பியைத் தோற்கடிப்பதற்கு எண்ணம் கொண்டுள்ள புதிதாக நிறுவப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருக்கும் சிலரை இந்த அறிக்கை எச்சரித்தது. அது கூறியதாவது.—''

''அந்தப் போராட்டத்திலே தொழிலாளரினதும், விவசாயிகளினதும் தலைமையும் பங்குபற்றுதலுமின்றி யு. என். பியைத் தோற்கடித்து, சுதந்திரம் பெற முடியுமென்று நினைப்பது கேலிக்கூத்தாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் இயக்கத்தின் அரசியல் அங்கமே இடதுசாரி இயக்கம். யு. என். பி. எதிர்ப்பிலும், ஏகாதிபத்திய—எதிர்ப்பிலும் கொண்டுள்ள அதன் நேர்மை அனைவருக்கும் தெரிந்ததே. அதற்கு 20 ஆண்டு தீரமுள்ள போராட்ட அனுபவமும் வரலாறும் உண்டு. ஆகவே இடதுசாரி இயக்கத்தின் நெருங்கிய ஒத்துழைப்பின்றி ஏகாதிபத்தியத்தையும், யு. என். பியையும் தோற்கடிப்பதுபற்றி ஆழ்ந்த முறையில் பேச முடியுமா?

''அத்தகைய ஒத்துழைப்பு சாத்தியமா? யு. என். பி. யைத் தோற்கடிப்பதற்காக மட்டுமல்ல, ஆட்சி புரிவதற்கும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் இந்த ஐக்கியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் இடதுசாரியினரும், இடதுசாரியல்லாத யு. என். பி. எதிர்ப்பாளரும் ஒன்றுசேர்ந்து பணியாற்றுவது சாத்

தியமா? இந்தக் கேள்விக்குக் கம்யூனிஸ்டுக் கட்சியின்
ஆணித்தரமான பதில் ''ஆம்'' என்பதே. பிற்காலத்
தில் சர் ஜோன் கொத்தலாவலையால் தெளிவாக
விளக்கப்பட்ட ''பிரதமர் போராட்டம்'' என்னும்
பரஸ்பர கழுத்தறுப்புக்குப் பிறகும், தனது தந்தையின்
மரணத்துக்குப் பிறகும் பிரதமர் பதவியை ஏற்ற திரு.
டட்லி சேனநாயக்கா மேற்கண்ட மகாநாட்டுக்குப்
பின்னர் திடீரென்று பாராளுமன்றத்தைக் கலைத்து
விட்டார். தங்களிடையே இருந்த உள்தகராறுகள்
வளருமுன்பு, அமெரிக்க ஆதிக்கம் பெற்ற உலக வங்கி
யால் சிபார்சு செய்த அரிசி மான்யத்தை ரத்துச் செய்
வது போன்ற ஜன விரோத நடவடிக்கைகளை எடுக்கு
முன்பு, தனது தந்தையின் மரணத்தைப் பயன்படுத்தி
மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடலாமென்று திரு. சேன
நாயக்காவும் அவரது கட்சியும் எதிர்பார்த்தார்கள்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடனே, பொதுத்
தேர்தலில் ஒன்றுபட்டு போட்டியிடும் பொருட்டு யு.
என். பி—எதிர்ப்புக்கட்சிகளிடையே ஒரு தேர்தல் ஒப்
பந்தம் செய்து கொள்வதற்காக—அத்தகைய ஒப்பந்
தம் சாத்தியமில்லையேல், குறைந்த பட்சம் போட்டித்
தவிர்ப்பு உடன்படிக்கையாவது செய்துகொள்வதற்
காக—கம்யூனிஸ்டுக் கட்சி பகீரத முயற்சிகளைச் செய்
தது. ஆனல் துரதிர்ஷ்டவசமாக, ஸ்ரீலங்கா சுதந்தி
ரக் கட்சியோ, இலங்கை சமசமாஜக் கட்சியோ இந்த
முயற்சிகளுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. அதன் விளை
வாக, குறிப்பாக யு. என். . பி. எதிர்ப்புக் கட்சிகள்
ஒன்றுசேராத காரணத்தால், யு. என். பி. புதிய பாரா
ளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மையான ஆசனங்
களைப் பெற்று வெற்றியீட்டியது.

டட்லி சேனநாயக்கா அரசாங்கம் ஆட்சிக்கு வந்
ததையொட்டி, இலங்கையில் ஒரு பெரியபொருளாதார
நெருக்கடி தோன்றியது. ரப்பரின் ஏற்றுமதி விலை
வீழ்ச்சியுற்றது. பல சிறிய, மத்திய ரப்பர் தோட்டங்
களை மூடவேண்டியதாயிற்று. ஆயிரக்கணக்கானத்
தோட்டத் தொழிலாளர்களும் கொழும்பில் ரப்பரைச்



சிப்பங்களாகக் கட்டும் தொழிற்சாலைத் தொழிலாளர்
களும் வேலை இழந்தனர். யு. என். பி. அரசாங்கம் அரி
சிப் பங்கீட்டைச் சரிபாதியாகக் குறைத்து, சீனி
விலையை உயர்த்தியபொழுது 1952ம் வரவு-செலவுத்
திட்டம் சிரமத்தின்மீதே அங்கீகரிக்கப்பட்டது.

சோஷலிஸ்ட் நாடுகளுடன் பரஸ்பர வர்த்தக ஒப்
பந்தங்கள் செய்து கொள்வதின் மூலம் இலங்கையின்
வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையை மாற்றும்படி
கோரி ஓர் இயக்கத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தக்
கட்டத்தில் ஆரம்பித்தது. கட்சி முன்வைத்த முக்கிய
கோரிக்கைகளிலொன்று சீன மக்கள் குடியரசுடன்
அரிசி-ரப்பர் ஒப்பந்தமொன்றினைச் செய்துகொள்ள
வேண்டுமென்பதே.

இத்தகைய பயனுள்ள ஓர் ஒப்பந்தத்தைச் செய்வ
தற்குப் பதிலாக, யு. என். பி. அரசாங்கம் தங்களை இந்
தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றும்படி தங்களின் அமெ
ரிக்கப் போஷகர்களிடம் மன்றாடுவதற்காக சர் ஒலிவர்
குணதிலகா தலைமையில் ஒரு தூதுகோஷ்டியை வாஷிங்
டனுக்கு அனுப்பிவைத்தது. ஆனல் அமெரிக்கர்கள்
அவர்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை.
இந்த நெருக்கடியான கட்டத்திற்றான் சீனவுடன் பேச்சு
வார்த்தைகள் நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்
கத்துக்கு ஏற்பட்டது. சீன நமக்கு அரிசி கொடுக்கக்
கூடியதாகவும், நமது ரப்பருக்கு உறுதியான ஒரு சந்
தையை அளிக்கக் கூடியதாகவும் இருந்தது.

இலங்கையிலிருந்து ஒரு வர்த்தகத் தூதுகோஷ்டி
சீனவுக்கு அனுப்பப்பட்டு, ரப்பரை விற்பதற்கும்,
அரிசியை விலைக்கு வாங்குவதற்குமான ஒரு ஒப்பந்தம்
வெற்றிகரமாக கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்
பந்தம் பற்றி முதன் முதலாக மகிழ்ச்சியைத் தெரிவித்
தது கம்யூனிஸ்டுக் கட்சியே. இது சம்பந்தமாக 1952
அக்டோபர் 8த் திகதி ஓர் அறிக்கையில் கட்சி கூறிய
தாவது:-

''பரஸ்பரம் நன்மை பயக்கும் வர்த்தக ஒப்பந்த
மொன்றினை சீனத்துடன் செய்துகொள்ள வேண்டிய

அவசியத்தை முதன் முதலாக மக்கள் முன் சமர்ப்பித்தது கம்யூனிஸ்டுக் கட்சியே. இந்த ஒப்பந்தம் பற்றி கம்யூனிஸ்டுக்கட்சி ஏனைய பொது ஸ்தாபனங்களுடனும், பத்திரிகைகள் ஒரு பகுதியுடனும் சேர்ந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆனல், இந்த ஒப்பந்தத்தை நாசமாக்குவதற்காகவும், இலங்கை மக்கள் தங்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் அரிசியையும் மற்றும் பொருட்களையும் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதற்காகவும் அமெரிக்கத் தூதராலயத்தின் தூண்டுதலின் மீதும் உத்தரவின் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று இலங்கை மக்களைக் கட்சி எச்சரிக்கிறது. இலங்கை மக்கள் இப்பொழுது ஒன்று சேர்ந்து தலையிட்டு, இந்த அமெரிக்கப் பொம்மைகளின் முயற்சிகளை முறியடிக்க வேண்டும். ஒரு மாபெரும் ஆசிய நாடொன்றுடன் சம அடிப்படையில் ஒப்பந்தம் செய்வதைப் பார்க்கிலும் தங்களின் மக்கள் பட்டினியால் வாடி வதங்குவதைப் பார்ப்பதற்கு இந்த அமெரிக்கப் பொம்மைகள் பெரிதும் விரும்புவார்கள்.''

சரியான சந்தர்ப்பத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஒப்பந்தம்பற்றி அறிவிக்கப்பட்டதும், மந்திரிசபையிலிருந்த கம்யூனிஸ்ட்-எதிர்ப்பாளர்கள் உட்பட பிற்போக்குவாதிகள் சீனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வதை எதிர்த்து கிளர்ச்சி செய்தார்கள். ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்யும்படி அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்துவதற்காக கம்யூனிஸ்டுக் கட்சியும், இதர எதிர்க்கட்சிகளும் நாடெங்கினும் பொதுக் கூட்டங்களை நடத்தி ஒரு பிரமாண்டமான இயக்கத்தை நடத்த வேண்டியதாயிற்று.

ஒப்பந்தம் அங்கீகரிக்கப் பட்டபின்னர், அது 1953 ஜனவரி 20ந் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப் பட்டது. ஒப்பந்தத்திற்குத் தனது முந்திய எதிர்ப்பை கைவிட்டு, சீன மக்கள் குடியரசுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டதாக அரசாங்கத்தை பீட்டர்



கெனமன் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பாராட்டிப் பேசினர்.

அவர் கூறியதாவது:-

''சபாநாயகர் அவர்களே, இலங்கை - சீன ஒப்பந்தம்போல் இலங்கைக்குச் சாதகமான வேறு எந்த ஓர் ஒப்பந்தமும் இலங்கையின் சமீபகால வரலாற்றில் செய்யப்படவில்லை என்பதே என் கருத்து''

இந்த ஒப்பந்தத்திலிருந்து இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய பல்வேறு உடனடிப் பிரயோசனங்களை அடுக்கடுக்காக எடுத்துக் கூறிய பீட்டர் கெனமன் தொடர்ந்து கூறியதாவது:-

''நமது வர்த்தகக் கொள்கையை எவ்வளவு தூரம் மாற்றி அமைக்க வேண்டுமென்பதுபற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புது வித வர்த்தக முறையை நாம்கையாளவேண்டும். ஒரு முகாமைச் சேர்ந்த நாடுகளுடன் மட்டுமின்றி, நமக்குப் பலன் கிடைக்கக் கூடிய முறையில் நம்முடன் வர்த்தக உடன்பாடுகள் காண விழையும் எல்லா நாடுகளுடனும் நாம் வர்த்தகம் செய்யவேண்டும்.''

இதுவரை நாம் வர்த்தகம் செய்ய முன்வராத வட்டாரங்களுடன் வர்த்தகம் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்கும்படியும், சோவியத் யூனியனுக்கும், கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக அரசாங்கங்களுக்கும் வர்த்தகத் தூது கோஷ்டிகளை அனுப்பி, அந்த நாடுகளுடன் இலாபகரமாக வர்த்தகம் நடத்தக் கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்க்கும் படியும் அவர் பிரதம மந்திரியை கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்:-

''எல்லா நாடுகளுடனும், அவற்றின் பொருளாதார சமுதாய முறை எதுவாக இருப்பினும், நாம் வர்த்தகம் நடத்த வேண்டும். உலகில் எல்லா நாடுகளுடனும்

அவற்றின் சமுதாய முறைபற்றி கவலைப்படாமல் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்து கொள்வதும், 2வது உலக யுத்தத்திற்குப் பின்னர் அமெரிக்கக் கொள்கையால் சீர்குலைக்கப்பட்ட உலக வர்த்தகத்துக்குப் புத்துயிரளிப்பதும் சர்வதேச உறவுகளைச் சுலபமாக்குவதற்கும் கணிசமான அளவு உதவியாக இருக்கும்.''

ஆனால் சேனநாயக்க அரசாங்கமோ, தங்களை எதிர் நோக்கிய உடனடிப் பொருளாதார நெருக்கடியினின்று தங்களைப் பாதுகாத்த சீன ஒப்பந்தத்துக்கு அப்பால் செல்லத் தயாராக இருக்கவில்லை. சோவியத் யூனியன், இதர சோஷலிஸ்ட் நாடுகள் உட்பட எல்லா நாடுகளுடனும் பரஸ்பரம் நன்மை பயக்கக் கூடிய வர்த்தகம் நடத்தப்பட வேண்டும் என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கையை அமுல் நடத்துவதற்கு திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசாங்கத்தை ஆட்சி பீடமேற்றிய பொதுத்தேர்தல் வரும் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

இடதுசாரிகளிடையே ஒருவிரிவான அரசியல் உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிஆராய்வதற்காக கம்யூனிஸ்ட்—புரட்சிவாதசமசமாஜக் கட்சி ஐக்கிய முன்னணி இலங்கை சமசமாஜ கட்சியுடன் 1953 ஜுன் மாதம் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் புதிய ஜனநாயக அரசாங்கம் ஒன்றினை நிறுவும் பொருட்டு, ஏகாதிபத்தியத்திற்கும் யு. என். பி. க்கும் எதிரான எல்லா சக்திகளினதும் ஓர் ஐக்கிய இயக்கத்தைத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் அதனை இதயமாகக் கொண்டு கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் பற்றி இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது பரஸ்பரம் உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் ''சோவியத் யூனியனும் புதிய சீனாவும் தலைமைதாங்கும் சோஷலிஸ சுதந்திர சமாதான முகாமுக்கு நிபந்தனை அற்ற முழு ஆதரவையும் அளித்தல்'' என்ற பிரச்சினையின் மீது இந்தப் பேச்சுவார்த்தைகள் முறிந்து விட்டன.

யு. என். பி. அரசாங்கம் அமெரிக்க ஆதிக்கத்தின் கீழுள்ள உலக வங்கியிடம் கடன் கோரியதால், அது



பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உலக வங்கித் தூது கோஷ்டியொன்று 1952ல் இலங்கைக்கு வந்தது. அத்தகைய கடனைப் பெறுமுன்பு நிறைவேற்றப்படவேண்டிய நிபந்தனைகளை இக்கோஷ்டியின் அறிக்கை விதித்தது. 1953 ஜுலையில் யு. என். பி. அரசாங்கம் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தொடங்கியது. ஆகவே உத்தேச தொழிலபிவிருத்தித் திட்டங்கள் பல கைவிடப் பட்டன. காணி குடியேற்றக் கொள்கையில் பாரதூரமான மாற்றங்கள் செய்யப்பட்டன. குடியேற்ற வாசிகளுக்கு வழங்கிய காணிகளும், பண உதவிகளும் குறைக்கப்பட்டன. காணி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிலமில்லாத விவசாயிகளுக்கும், மத்தியதர வகுப்பு மக்களுக்கும் மட்டும் காணி வழங்கவேண்டுமென்ற முந்திய கொள்கை, அந்நிய முதலாளிகள் உட்பட பெரியமுதலாளித்துவக் கம்பெனிகளுக்குப் பெரிய காணிகள் குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாக மாற்றப் பட்டது. இலங்கையில் வெளிநாட்டு மூலதனத்தை முதலீடு செய்வதற்கு இடையூறாக எஞ்சியிருந்த எல்லாத்தடைகளும் அகற்றப்பட்டு விட்டன.

அரிசி மான்யத்தை ரத்து செய்யும்படியும், சமூக சேவைச் செலவுகளைக் குறைக்கும் படியும், புகையிரதக் கட்டணம், மின்சாரக் கட்டண விகிதம், அரசாங்கம் வழங்கும் இதர சேவைகளை உபயோகிக்கும் கட்டணங்கள் ஆகியவற்றை கூட்டும்படியும் உலக வங்கித் தூது கோஷ்டி கட்டளையிட்டது. இந்த எல்லா அமெரிக்க கட்டளைகளையும் டட்லி சேனநாயக்கா அரசாங்கம் விசுவாசத்துடன் நிறைவேற்றியது. அதன் விளைவாக 1953 ஆகஸ்ட் 12த்திகதி வரலாற்றுப் புகழ் பெற்ற ஹர்த்தால் நடந்தது.

அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளைப் பற்றி விவாதிப்பதற்காக 1953 ஜுலை 20ந்திகதி தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்றைக்கூட்டுவதற்குக் கம்யூனிஸ்டுகள் தலைமையிலுள்ள தொழிற்சங்கங்களின் சம்மேளனம் முதல் நடவடிக்கை எடுத்தது. இதன் விளைவாக, ''ஒரு—நாள் பொதுவேலை நிறுத்தத்திற்குத்

தயாராகும்படியும், அதனை வெற்றிகரமாக நடத்த எல்லா வேலைத்தலங்களிலும் முக்கிய செயற்குழுக்களை நிறுவும்படியும் தொழிற் சங்கங்களுக்கும், ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படாத தொழிலாளர்களுக்கும் எம். ஜி. மென்டிஸும், இலங்கைத் தொளிலாளர் சம்மேளனம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சேர்ந்து வேண்டுகோள் விடுத்தனர்.

(அ) அரிசிப்பங்கீட்டு மானியத்தை ரத்துசெய்யவும், பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச மத்தியான உணவு வழங்குவதை நிறுத்தவும், புகையிரத தபால் கட்டணங்களை உயர்த்தவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மீது வேறு தாக்குதல்களைத் தொடுக்கவும் அரசாங்கம் செய்துள்ள முடிவை எதிர்த்தும், (ஆ) பெருமளவில் வேலையில்லாத் திண்டாட்டம், சம்பள வெட்டு தொழிலாளர்களைப் பழிவாங்குதல் ஆகியவற்றை எதிர்த்தும், (இ) ஊர்வலங்கள் கூட்டங்கள் நடத்துதல், ஒலிபெருக்கி உபயோகித்தல் ஆகியவற்றைத் தடைசெய்தல் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மென்மேலும் தீவிரமாகக்கட்டுப்படுத்துவதை எதிர்த்தும், ஆகஸ்ட் 12ந் திகதியைத் தேசிய ஆட்சேபனைத் தினமாக அனுஷ்டிக்கும்படி மக்களைக் கேட்டுக் கொண்டு பின்னர் ஓர் அறிக்கை விடப்பட்டது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிசார்பில் அதன் பொதுக் காரியதரிசியான டாக்டர் எஸ். ஏ, விக்கிரமசிங்கா இரு சமசமாஜ கட்சிகளின் சார்பில் அவற்றின் பொதுக்காரியதரிசிகளான திரு. பிலிப் குனவர்த்தன, திரு. லெஸ்லி குணவர்த்தன, தொழிற்சங்க சம்மேளனங்களின் தலைவர்களான பீட்டர் கெனமன், டாக்டர் என். எம். பெரேரா, சி. ஹிக்கடுவ, இலங்கை லேபர் யூனியன் சார்பில் திரு. ஏ. ஈ, குணசிங்கா (ஜுனியர்) இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் சார்பில் திரு. பி. பி. தம்பு ஆகியோர் சேர்ந்து இந்த அறிக்கையை விடுத்தனர்.

''தத்தம் நிறுவனங்களை மூடியும், பாடசாலைகளுக்கும், வேலைத்தலங்களுக்கும் செல்லாமலும், ஆட்சேப



னைக் கூட்டங்களை நடத்தியும், கறுப்புக்கொடிகளை உயர்த்தியும் இந்த ஆட்சேபனை தெரிவிக்கும் போராட்டத்தில் கலந்து கொள்ளும்படி மக்களின் எல்லாப்பகுதிகளுக்கும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கிடையே, மக்களை அதைரியப்படுத்தி, பயமுறுத்தி ஹர்த்தாலில் பங்குபற்றுவதைத் தடுப்பதற்காக அரசாங்கமும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் தங்கள் வசமுள்ள சகல சக்திகளையும் பிரயோகித்தன, அரசாங்கம் தனது சிப்பந்திகளை மிரட்டியது மட்டுமின்றி வேலைநீக்கம் செய்யப்படுவார்களென்று அரசாங்க சிப்பந்திகளல்லாத தொழிலாளர்களையும் பயமுறுத்தும்படி ஸ்தல ஸ்தாபன சேவை ஆணைக்குழுவையும் தனியார் துறை முதலாளிமார் சம்மேளனங்களையும் கேட்டுக் கொண்டது. மக்களைப் பயமுறுத்திப் பணிய வைப்பதற்காக முப்படைகளும் அழைக்கப்பட்டன. தங்களின் பண்டகசாலைகளை மூடினல் லைசன்சுகளை ரத்துசெய்து விடுவதாக பண்டகசாலைச் சொந்தக்காரர்களை உணவுக் கமிஷனரைக் கொண்டு பயமுறுத்தினர். கிராம மக்களை பயமுறுத்துவதற்காக அரசாங்க அதிபர்களும் காரியாதிகாரிகளும், கிராமவிதானைகளும் பயன்படுத்தப் பட்டனர்.

ஆயினும், இலங்கை மக்கள் 1953ம் ஆண்டு 12ந் திகதி ஒரு—நாள் ஹர்த்தால் நடாத்தி, அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக தேசிய ஆட்சேபனையைத் தெரிவித்தனர். ஹர்த்தாலில் அரசாங்கம் முற்றாக ஸ்தம்பித்து விட்டது. அரசாங்கத்தின் அரசியல் வங்குரோத்தையும் மக்களிடமிருந்து அது விலகிச் சென்று விட்டதென்பதையும் ஹர்த்தால் அம்பலப்படுத்தியது.

கொழும்பில் வேலைநிறுத்தம் 11—12ந் திகதி நள்ளிரவில் ரெயில்வே ரன்னிங் செட் தொழிலாளர்கள் வேலைசெய்ய மறுத்ததில் இருத்து ஆரம்பமாயிற்று. 12ந் திகதி காலையில் கொழும்பிலும், கொழும்புச்சுற்றுப் புறத்திலும் சுமார் 75,0000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

(1) அரசாங்க நாள்—சம்பளத் தொழிலாளர்கள் அனைவரும்;

(2) துறைமுகத்தில் தனியார்துறை கம்பெனித் தொழிலாளர்கள் அனைவரும்;

(3) பெரிய இஞ்ஜினீயரிங் தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் அனைவரும்;

(4) கொழும்பு மாநகரசபைத் தொழிலாளர்கள் அனைவரும்;

(5) போக்குவரத்து தொழிலாளர்களும்; (டிராம், டிரொலி பஸ், சவுத்வெஸ்டர்ன் பஸ்கம்பெனி)

(6) காஸ் கம்பெனித் தொழிலாளர்களும், வெள்ள வத்தை பஞ்சாலை நெசவாலைத் தொழிலாளர் களும்;

(7) பல தனிப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர் கள், புகையிலைக் கம்பெனிகளின் தொழிலாளர் கள், சாப்புச் சிப்பந்திகள், அச்சுத் தொழிலா ளர்கள், பீடித்தொழிலாளர்கள் முதலியோரும் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

முதல் நாளிரவு வேலைக்குச் சென்ற தொழிலாளர் களும் காலையில் வேலை நிறுத்தத்தில் குதிப்பதென்று முடிவு செய்ததால் காலை 11 மணியாகும்பொழுது கொழும்பில் வேலைநிறுத்தம் அநேகமாக சம்பூரணமாகி விட்டது.

வெளியூர்களிலும், கிராமாந்தரப் பகுதிகளிலும் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு கிடைத்தது. இலங்கை மக்களில் 60 சத விகிதத்துக்கு மேல் வசிக்கும் மேற்கு, தென், வடமாகாணங்களில் குறிப்பாக ஹர்த்தால் முழு ஆதரவையும் பெற்றது. மேற்கு, தெற்கு கரையோரப் பகுதிகளிலும், அவற்றையொட்டிய உட்பிரதேசங்களி லும் மக்கள் மிக உற்சாகத்துடன் ஹர்த்தாலில் கலந்து கொண்டனர்.



காலி, கண்டி, நீர்கொழும்பு ஆகிய நகரங்களிலி ருந்து கொழும்புக்குச் செல்லும் பிரதான வீதிகள் இரு மருங்கிலும், அவிஸ்ஸாவெலையிலிருந்து கொழும்புசெல் லும் ஹைலெவல், லோலெவல் ரஸ்தாக்கள் நெடுகிலு முள்ள கடைகள் சாப்புகள், வர்த்தக நிறுவனங்கள் பெரும்பாலும் அன்று மூடப்பட்டுவிட்டன. மேற்கு மாகாணத்தில் கடற்கரை பிரதேசங்களில் மொரட்டுவ, பாணந்துறை, களுத்துறை, நீர்கொழும்பு ஆகிய இடங் களிலிருந்தும் அவற்றை யொட்டிய பிரதேசங்களிலிருந் தும் ஹர்த்தாலுக்குப் பிரமாண்டமான முறையில் ஆத ரவு திரண்டது. இரத்தினபுரியில் சாப்புகடைகள் 70 சத விகிதம் அடைக்கப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய இடங்களில் நகர சுத்தித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். தென்மாகாணமெங்கும் ஊர்வலங்களும், பொதுக்கூட் டங்களும் நடைபெற்றன. அம்பலாங்கொடை, பலப் பிட்டி, தொடந்துவ, ரத்கம, ஊருகஹ ஆகிய இடங்களி லும்; எல்பிட்டியாவிலிருந்து, பத்தேகமவரை உட்பிர தேசங்களிலும்; மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை, அக்குரஸ்ஸ, கிரிந்த, ஹக்மன முதலிய முக்கிய பிராந்தி யங்களிலும் ஹர்த்தால் முழு வெற்றியீட்டியது.

கொழும்பு மாநகரசபையும், மொரட்டுவ நகரசபை யும் உத்தியோக பூர்வமாக ஹர்த்தாலை ஆதரித்தன. அந்த நகரசபைகள் மீதும், மற்றும் பல ஸ்தலஸ்தாபனக் கட்டிடங்கள் மீதும் கறுப்புக் கொடிகள் பறந்தன.

ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றதால் பீதி யடைந்த அரசாங்கம், அவசரகாலச் சட்டத்தைப் பிர கடனப்படுத்தியதுடன், ஊரடங்குச் சட்டத்தையும் அமுல்நடத்தியது. 1915ல் பிரிட்டிஷ் அரசாங்கம் ஊர டங்குச் சட்டத்தை அமுல் நடத்திய அந்த ''இருண்ட நாட்களுக்குப்'' பின்னர் முதற்தடவையாக இப்பொழு துதான் ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுல்நடத்தப் பட்டது. பல்வேறு அவசரகாலச் சட்டங்களில் மறைந்து கொண்டு பொலீஸ், இராணுவ அட்டூழியங்களின் ஆதர வைப் பெற்று திரு டட்லி சேனநாயகாவின் அரசாங்கம்

ஒன்பது பேர்களைச் சுட்டுக் கொன்றது. நூற்றுக் கணக்கான மக்களைக் காயப்படுத்தியது. சுமார் 150 பேரைக் கைது செய்தது. கம்யூனிஸ்ட் கட்சி, இதர எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் காரியாலயங்களை நொறுக்கியது. எதிர்க்கட்சி அச்சகங்களை மூடி முத்திரையிட்டது. கொழும்பு மாநகர சபையைத் தற்காலிகமாகத் தடைசெய்தது. மொரட்டுவ நகரசபையைக் கலைத்துவிட்டது. கூட்டங்களையும் ஊர்வலங்களையும் தடைசெய்தது. ஜனங்களை அடித்து வதைத்து அட்டூழியம் புரிந்தது. இறந்தவர்களை அடக்கம்செய்வதற்கு கூட பொலிஸ் அனுமதிப்பத்திரம் வாங்க வேண்டிய நிலைக்கு மக்களைத் தள்ளியது.

மிருகத்தனமான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டதின் விளைவாக பாராளுமன்றத்திற்கு வெளியே எதிர்க்கட்சிகளின் வாய் அடைக்கப்பட்டு, யு. என். பி.—எதிர்ப்புச் சக்திகள் தற்காலிகமாக வாபஸாகிய பொழுதுதான், பீட்டர் கெனமன் அப்பொழுது எஞ்சியிருந்த ஒரு மேடையான பாரளுமன்றத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பயன்படுத்தி ஹர்த்தாலின் நியாயத்தை எடுத்துக்கூறியதுடன், யு. என். பி. அடக்குமுறையையும் பயங்கரவாதச் செயல்களையும் அம்பலப்படுத்தினர்.

அவர் தனது முழக்கத்தில்:-

''சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக அல்ல—மக்களைச் சுட்டுத்தள்ளுவதற்காக சட்டபூர்வமான அங்கிகாரத்தை இராணுவப் படைகளுக்கு வழங்கியதன் மூலம் தங்களின் வங்குரோத்தையும், பீதியையும் மறைத்துக்கொள்ள அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியிருப்பதாக நான் குற்றஞ்சாட்டுகிறேன்......

''ஆத்திரமூட்டும் செயல்களைத் தூண்டிவிட்டு ஆகஸ்ட் 12ந் திகதி பீதியடைந்த நிலையில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல் நடத்துவதற்கு நியாயம் கற்பிப்பதற்காக ஆகஸ்ட் 13ம் திகதியிலிருந்து முயற்சி செய்து வருகிறதென அர



சாங்கத்தையும், பொலிசையும் நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

''சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்காக அல்ல— அரசாங்க கட்சிக்கு எதிரான எல்லா எதிர்ப்புகளையும் நசுக்குவதற்காகவே அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து, அடக்குமுறைச் சட்டங்களை அமுல் செய்வதாக இந்த அரசாங்கத்தை நான் குற்றம் சாட்டுகிறேன்.''

தங்களின் அடக்குமுறையை நியாயப்படுத்துவதற்காக கம்யூனிஸ்ட் கட்சிக் கண்டிக் கிளைக்காரியாலயத்திலிருந்து கண்டெடுத்ததாகக் கூறப்பட்ட ''மத்திய மாகாண விடுதலைப்படை'' பற்றிய சோடனை செய்யப்பட்ட ஒரு போலி தஸ்தாவேஜுவைத் திரு டட்லி சேனநாயக்கா சமர்ப்பித்தார். கெனமன் இந்த மோசடியைப் படுபொய்யென அம்பலப்படுத்தியதுடன் ''புகழ் பெற்ற ஸினோவீவின் கடிதம் போன்று இது யு.என்.பி. யால் தயாரிக்கப்பட்டதாகும்'' குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியை இது குற்றம் சுமத்தும் கட்சியாக மாற்றியுள்ளது.'' என்று வர்ணித்தார்.

அரசாங்கத்தை ''குற்றக் கூண்டிலேற்றி'' தொடர்ந்து கெனமன் சாடியதாவது:-

''அரசாங்கம் இந்த தஸ்தாவேஜுவை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரட்டும். இது பொலிசாரல் வேண்டுமென்றே தயாரிக்கப்பட்ட மூடத்தனமான, சிறுபிள்ளைத்தனமான ஒரு மோசடித் தஸ்தாவேஜு என்பதை எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி நாங்கள் நிரூபிக்க முடியும்''

கெனமன் தனது பேச்சை முடித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இந்த அரசாங்கம் பறைசாற்றும் ஜனநாயகம் இராணுவத்தின் துப்பாக்கி உதவியைக் கொண்டு நடத்தும் ஒரு பொலிஸ் ராஜ்யமே என்பதை நாடு இன்று காண

கிறது. 1915ல் 'மார்ஷல் லோ' (இராணுவச்சட்டம்) காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த அட்டூழியங்களே இந்நாட்டில் அரசியல் சீர்திருத்த இயக்கம் ஆரம்பமாவதற்கு காரணமாக இருந்தன என்பதை அரசாங்கம் மறந்துவிட்டதா? 1915 ''மார்ஷல்லோ', நாட்களில் நடைபெற்ற அட்டூழியங்களை மிஞ்சிவிடக் கூடியதாக ''அவசரகாலச் சட்டம்'' என்ற பெயரில் இன்று நடத்தும் அட்டூழியங்கள் எத்தகைய இயக்கத்தைத் தோற்றுவிக்கும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கட்டும்.''

ஹர்த்தாலுக்குச் சிறிதுகாலத்துக்குப் பின்னர் யு.என்.பி. அரசாங்கத்துள் ஒரு நெருக்கடி உருவாகி வந்தது. திரு. டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்தார். இது 1953ம் ஆண்டு ஹர்த்தாலின் மிகப்பெரிய வெற்றியாகும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற்குழு இந்த வெற்றிக்கான முக்கிய காரணங்களை விளக்கி ஓர் அறிக்கை விடுத்தது. அந்தக் காரணங்களாவன:—

1. ஏகாதிபத்திய சார்பு அரசாங்கத்தின் தாக்குதலைஎதிர்த்துதங்களின்வாழ்க்கைத்தரத்தைப்பாதுகாத்துக் கொள்வதற்கு உறுதிகொண்டுள்ள மக்கள் அரசாங்கத்தின் வங்குரோத்தையும்—துரோகத்தையும் தெளிவாக உணர்ந்து கொண்டிருப்பது,

2. அரசாங்கம், பொலிஸ், இராணுவம் ஆகியவற்றின் பயங்கரச் செயல்களுக்கும் மிரட்டல்களுக்கும் அடிபணியாது தங்களின் ஆட்சேபனையை எடுத்துக்காட்டுவதற்கான துணிச்சலையும்—நம்பிக்கையையும் மக்களுக்கு அளித்த ஹர்த்தாலை நடத்துமாறு முக்கிய தொழிலாளர் வர்க்கக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்தது.

3. ஆகஸ்டு 12ந் திகதி போராட்டத்திற்குத் தலைமைதாங்கிய தொழிலாளர் வர்க்கத்தின்—குறிப்பாக கொழும்புத் தொழிலாளர் வர்க்கத்தின்—வேலை



நிறுத்தம் ஹர்த்தாலின் முக்கிய அச்சாணியாக விளங்கியது.

4. தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் போராட்டத்தில் துணிச்சலுடன் பங்குபற்றிய கிராம மக்கள், வாலிபர்கள், மாணவர்கள், சாப்புச் சிப்பந்திகள் முதலியோரைக் கொண்ட மக்கள் பகுதியினருடன் தொழிலாளர் வர்க்கம் தோழமை பூண்டிருந்தது. முதலியன.

திரு. டட்லி சேனநாயக்காவுக்குப் பின்னர் சர் ஜோன் கொத்தலாவலை பிரதம மந்திரியாகப் பதவியேற்றார். அவர் தனது முதலாவது வானொலிப் பேச்சிலும், முதலாவது மேடைப் பிரசங்கத்திலும் இலங்கையிலிருந்து கம்யூனிஸத்தைத் துடைத்தெறிவதாகபிரதிக்ஞை செய்தார். இந்த நோக்கத்தை அடைவதற்காக, சோஷலிஸ்ட் பிரசுரங்களின் இறக்குமதியைத் தடைசெய்தல், கம்யூனிஸ்ட் ஊழியர்களினதும், அனுதாபிகளினதும் மனைவிமாரை நாடுகடத்துதல் போன்ற சில கம்யூனிஸ்ட்—எதிர்ப்பு நடவடிக்கைகளில் அவர் விரைவில் ஈடுபட்டார்.

தொழிலாளர் வர்க்க, முற்போக்கு இயக்கத்தை நசுக்க கம்யூனிஸ்ட்—எதிர்ப்பைக் கருவியாகப் பயன்படுத்துவதற்கும், இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் பாதையிலே இலங்கையை இழுத்துச் செல்வதற்கும் கொத்தலாவலை அரசாங்கம் செய்த முயற்சிகளை எதிர்த்து கம்யூனிஸ்டுக் கட்சி தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தது. அரசாங்கத்தின் தாக்குதலை கட்சி எவ்வளவு துணிச்சலுடன் எதிர்த்து நின்றதென்றால், பிரதமர்கொத்தலாவலை வேறுவித ராகத்தில்பாடவேண்டியதாயிற்று. இலங்கையிலுள்ள எல்லா அரசியற்கட்சிகளையும்விட கம்யூனிஸ்டுக் கட்சியிடமே தனக்கு அதிகம் பயம் உண்டு என்று அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் ஒப்புக்கொண்டார். கம்யூனிஸ்டுக் கட்சியின் போராட்டத் தன்மையை எடுத்துக்காட்டும் அத்தாட்சிகளில் இதுவும் ஒன்று.

1955 மே மாதத்தில் கிருன்ட்பாஸில் நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் ஐந்தாவது காங்கிரஸ் கொத்தலாவலை அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்திலே கட்சியின் அனுபவங்களைத் திரட்டித் தொகுத்தது. அத்துடன் அடுத்த ஆண்டிலே அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக கூடியளவு விரிவான முறையில் மக்களைத் திரட்டுவதற்கான போர்த் தந்திரங்களையும் காங்கிரஸ் உருவாக்கியது.

இந்தக் காங்கிரஸில் 203 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்களிடையே 64 தொழிலாளர்களும், 11 விவசாயிகளும், 26 ஆசிரியர்களும், 22 குமாஸ்தாக்களும், 36 கட்சி முழுநேர ஊழியர்களும் இருந்தனர். கம்யூனிஸ்டு கட்சி—சமசமாஜக்கட்சி ஐக்கிய முன்னணியில் சேருவதற்காக 1953ல் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேறிய 200க்கு மேற்பட்ட அங்கத்தினர்களின் பிரதிநிதிகளான முன்னாள் சமசமாஜிகள் பெருந்தொகையானோர் இக்காங்கிரஸில் கலந்து கொண்டது காங்கிரஸின் முக்கிய அம்சமாக விளங்கியது. 1955ல் பிலிப் குணவர்தன இந்த ஐக்கிய முன்னணியை நாசமாக்கிய பொழுது அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேருவதற்காக அவரைக் கைவிட்டனர். அவர்களிடையே கே. பி. சில்வா, வி. ஏ. சமரவிக்கிரமா எல். டப்ளியூ. பண்டிதா, கே. ஏ. ஈ. பிறிட்டோ ஆகியோரும் மற்றவர்களும் இருந்தனர். இவர்கள் பின்னர் இலங்கை கம்யூனிஸ்டுத் கட்சியின் தலைமை ஸ்தான நிலைக்கு உயர்ந்தனர்.

ஐந்தாவது காங்கிரஸில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் தீர்மானம் கூறியதாவது:- இலங்கையின் பின்தங்கிய காலனிப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பொது நெருக்கடியின் மிக வளர்ந்துள்ள ஆழமான கட்டந்தான் தற்போதைய நெருக்கடி. நிலைமையை இதுவரை மறைத்துக் கொண்டிருந்த தற்காலிகத் தடைகள் அகன்றுவிட்டதால் அந்த நெருக்கடியின் கொடிய தன்மை வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஜனத்தொகை அதிகரிப்பதைத் தாங்கக்கூடிய சக்தி பின்தங்கிய காலனிப் பொருளாதாரத்துக்கு இல்லாதிருப்பது தற்போதைய நெருக்கடியின் ஆணிவேராகும்.''

அரசியற் தீர்மானம் மேலும் கூறியதாவது:-

''அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதின் மூலம், இலங்கை முதலாளி வர்க்கத்தில் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்துள்ள சார்புப் பகுதியை மென்மேலும் வளர்ப்பதற்கு யு. என். பி. அரசாங்கம் 1948ல் பெருமளவில் பெற்ற தங்களின் அதிகாரங்களைப் பயன்படுத்தியது. இந்தச் சார்பு முதலாளிகளும், ஏனைய இலங்கை முதலீட்டுக்காரர்களும் தோட்டத் தொழிற்துறையில் மென்மேலும் ஊடுருவிச் சென்றனர். ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சொந்தமான தேயிலை, ரப்பர் தோட்டங்களில் சுமார் 30 சதவிகிதத்தை அவர்கள் மிக உயர்ந்த விலைக்கு வாங்கி, தோட்டப் பொருளாதாரத்தைத் தொடர்ந்து நடத்துவதில் தங்களின் முதலாளித்துவ நலன்களைப் பெற்றுக் கொண்டனர். இதே நிலை காப்புறுதித் தொழிற்துறையிலும் மற்றும் பல ஏகாதிபத்தியத்துக்குச் சொந்த நிறுவனங்களிலும் ஏற்பட்டது.''

முன்னேறிச் செல்வதற்குள்ள ஒரே பாதையைச் சுட்டிக்காட்டிய இத் தீர்மானம், தோட்டப் பொருளாதாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும், காங்கிரசையொட்டி வெளியான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் ''நம்முன்னுள்ள வழி'' என்னும் நூலில் கண்டுள்ள சிபார்சுகளின் அடிப்படையில் நீர்ப்பாசனத்தில் விஞ்ஞானரீதியான கொள்கையைக் கையாள்வதின் மூலம் விவசாயத்தை அபிவிருத்திசெய்து அதனைத் துரிதமாக இயந்திர மயமாக்க வேண்டுமென்றும் கோரியது.

கொத்தலாவலை அரசாங்கம் கம்யூனிஸத்தை எதிர்க்கும் போர்வையில் யுத்தக் கொதியர்களான ஆங்கிலோ-அமெரிக்க முகாமுடன் இணைந்து கொள்வதற்கு மென்மேலும் முயற்சிசெய்து கொண்டிருப்பதுடன்

''கொழும்பு வல்லரசு'' கோஷ்டியினுள் ஆங்கிலோ-
அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஓர் ஏஜன்ஸியாகவும்
செயலாற்றுகிறது என்று அரசியற் தீர்மானம் மக்களை
எச்சரித்தது. ''சீட்டோவை'' (அத்துடன் கொத்தலா
வலை அப்பொழுது உறவாடிக்கொண்டிருந்தார்) திட்ட
வட்டமாக நிராகரிக்கும்படியும், இலங்கையிலிருந்த
அந்நிய தளங்களை வாபஸ் வாங்கும்படியும், பஞ்சசீலக்
கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆசிய நாடு
களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதின் மூலம், ஆசி
யாவில் சமாதானத்தை உருவாக்கும் கொள்கையுடன்
இலங்கை தன்னைப் பிணைத்துக்கொள்ளும்படியும்,
கோரும் ஒரு பரந்த தேசிய இயக்கத்தைத் தொடங்கு
மாறு அரசியற் தீர்மானம் வேண்டுகோள் விடுத்தது.

கொத்தலாவலை அரசாங்கம் மென்மேலும் இராணு
வத்தையும் பொலிசையும் கொண்டு பலாத்காரச்செயல்
களில் ஈடுபடுவது, மக்களின் ஜனநாயக உரிமைகள் மீது
தொடர்ந்து தாக்குதல் நடத்துவது, அதிக பாஸிஸத்
தன்மையுள்ள ஆட்சிமுறையைப் படிப்படியாக அமுலுக்
குக் கொண்டுவருவது, குறுகிய இனவாதக் கொள்கைக்
குப் பகிரங்கமாக ஊக்கமளிப்பது, (இவை அனைத்தும்
''கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுதல்'' என்னும்
வங்கரோத்துக் கோஷத்தின் மறைவில் செய்யப்பட்
டன) ஆகியவைபற்றி அரசியற் தீர்மானம் கூறிய
தாவது:- ''கம்யூனிஸத்துக்கெதிராக அரசாங்கம் நடத்
தும் ''புனிதப் போர்'', பொதுவாக மக்களின் ஜன
நாயக உரிமைகளைக் காலடியில் போட்டு மிதித்து துச்சப்
படுத்தும் அதன் இயக்கத்தின் முதலாவது நடவடிக்கை
யாகும் என்று இக்காங்கிரஸ் மக்களை எச்சரிக்கிறது.
அது முதலாவது தாக்குதலைத் தொடுக்க கம்யூனிஸ்டுக்
கட்சியைத் தெரிவுசெய்து கொண்டுள்ளது. ஏனெனில்,
கம்யூனிஸ்டுகள்தான் சமாதானத்துக்காகவும், நாட்
டின் சுதந்திரத்துக்காகவும்,மக்களின் ஜனநாயகஉரிமை
களுக்காகவும் அயராது போராடுகின்றனர்; கம்யூனிஸ்
டுக் கட்சிதான் அரசாங்கத்தின் துரோகக்கொள்கைக்கு
எதிராக எல்லா ஜனநாயக மக்கள் பகுதிகளையும் ஐக்கி
யப்படுத்த முயற்சி செய்கிறது; கம்யூனிஸ்டுகளே ஊழல்



களில் சிக்காதவர்கள், விலைக்கு வாங்கப்பட முடியாத
வர்கள், பயமுறுத்தலுக்குப் பணியாதவர்கள்.

''மக்களின் இதர ஜனநாயகப் பகுதிகளிலிருந்தும்
கம்யூனிஸ்டுகளைத் தனியாகப் பிரிப்பதற்கும், மக்கள்
போராட்டங்களின் முன்னணியை நாசமாக்குவதற்கும்,
இவ்வாறு மக்களின் வாழ்க்கைத்தரம், ஜனநாயக உரி
மைகள் ஆகியவற்றின் மீது பொதுத்தாக்குதல் நடத்து
வதை இலகுவாக்கிக் கொள்வதற்கும் யு. என். பி. அர
சாங்கம் தனது கம்யூனிஸ்ட்—எதிர்ப்பு இயக்கத்தின்
மூலம் முயற்சி செய்தது.''

கொத்தலாவலை அரசாங்கத்தின் நிலைமைபற்றி தீர்
மானம் கூறியதாவது:- ''அந்நிய ஏகாதிபத்தியத்திற்
குக் காட்டிக்கொடுக்கும் அரசாங்கத்தின் கொள்கை,
இலங்கை மக்கள் பெரும்பகுதியினரின் பொருளாதார
நலன்களுடனும், தேசிய அபிலாஷைகளுடனும் அதிக
மாக மோதிக் கொள்வதால், அரசாங்கத்தின் கையாலா
காத்தன்மை நீடிப்பதுடன், மென்மேலும் வளர்ந்து
கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு எதிர்ப்புக் காட்டு
வதும்இவ்வெதிர்ப்புக்கொள்கைகள்;தொழிலாளர் வர்க்
கத்துக்கும் இடதுசாரி இயக்கத்துக்கு மட்டும் உரித்தான
தாக இல்லையென்பதையும், அவை கிராம மக்கள்,
ஆசிரியர்கள் வர்த்தகர்கள், சிப்பந்திகள், தொழில்
நுட்ப வேலையாட்கள், கலைஞர்கள், உற்பத்தியாளர்கள்
முதலிய மக்களில்பெரும்பகுதியினரிடையேயும்பரவிவிட்
டன என்பதையும் ஹர்த்தாலுக்குப்பின்னர் நடை
பெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டிவிட்டன.

''இயக்கத்தின் பொது அளவில் அதிகமாக சமமற்ற
நிலைமை நிலவுகிறது. அதன் அதிகமான வளர்ச்சி, முக்
கிய யு. என். பி—எதிர்ப்புக் கட்சிகளிடையே ஒற்று
மையின்மை தொடர்ந்து நீடிப்பதால், கடுமையாகத்
தடைப்பட்டிருக்கிறது------- நெருக்கடி தீவிரமடையும்
போது, அரசாங்கத்தின் அடக்குமுறையும் மக்களின்
வாழ்க்கைத் தரத்தின் மீது அரசாங்கம் நடத்தும் தாக்கு
தலும் மோசமான நிலையை அடையும். வேலை, சம்ப்ள

உயர்வு, வீட்டு வாடகைக் குறைவு, அதிகமான வீட்டு வசதிகள், சாமான் விலைவாசிகளின் குறைவு, காணி நீர்ப்பாசன வசதிகள், சிவில் சுதந்திரம், ஜனநாயகவுரிமைகள் முதலிய அன்றாடக் கோரிக்கைகளுக்கான போராட்டம் சமாதானத்துக்கும், சுதந்திரத்துக்குமான போராட்டத்துடன் மென் மேலும் இணைக்கப்படுவதுடன், அது தற்போதைய அரசாங்கத்துக்குப் பதிலாக யு. என். பி — எதிர்ப்பு, ஏகாதிபத்திய — எதிர்ப்புச் சக்திகளின் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜனநாயக அரசாங்கத்தை நிறுவுவதற்கான ஒரு பொதுப் போராட்டமாகவும் வளர்ச்சி பெறும்.''

வளர்ந்து வந்த சுயபாஷை இயக்கத்தைப் பற்றி அரசியற் தீர்மானம் கூறியதாவது:—

''சுயபாஷை இயக்கத்திற்கு நீடித்த ஆதரவு அளிக்குமாறு இக்காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது. இந்த இயக்கம் மக்களின் தேசிய அபிலாஷைகளை பிரதிபலிப்பது மட்டுமின்றி, அதில் ஒரு சக்தி வாய்ந்த பொருளாதார உயர்ச்சிக்கான விழிப்பும் அடங்கியிருந்தது. அரசாங்க நிர்வாகத்திலும், செகண்டரி கல்வியிலும், உயர்தரக்கல்வியிலும் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் கொள்கையால் உயர்தர உத்தியோகங்கள் சுயபாஷைக் கல்வி கற்றவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. சுயபாஷை இயக்கம் மத்தியதர வகுப்பின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுவதாலும், அதில் தனக்குரிய தலைமையைத் தொழிலாளர் வர்க்கம் பெறாததாலும் சில சந்தர்ப்பவாதிகள், திடீர் புகழ் விரும்பிகள், சிற்சில குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் ஆகியோரின் சுரண்டலுக்கு இயக்கத்தில் இடமேற்பட்டுள்ளது.

ஆகவே இந்த இயக்கத்தில் தொழிலாளர்கள் மிகத் தீவிரமாக ஈடுபடும்படியும் இயக்கத்தைப் பிளவுபடுத்த முயற்சி செய்யும் இயக்கத்திலுள்ள குறுகிய கொள்கையுள்ளவர்களுக்கெதிராக உறுதியான போராட்டம் நடத்தும்படியும் இக்காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கிறது.



''ஏகாதிபத்தியத்தையும் யு. என். பி. அரசாங்கத்தையும் தோற்கடிப்பதற்காக மக்கள் இயக்கமொன்றினை வெற்றிகரமாக உருவாக்கும் உயிர்நாடி, இடதுசாரி ஐக்கியத்தையும் ஏகாதிபத்திய—எதிர்ப்பு, யு. என். பி—எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய-ஜனநாயக முன்னணியையும் உருவாக்கிக் கொள்வதிற்றான் தங்கியுள்ளது'' என்று அரசியற் தீர்மானம் பிரகடனம் செய்தது. ''இதர இடதுசாரிக் கட்சிகளுடன் செய்து கொள்ளும் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடதுசாரி இயக்கத்தில் ஐக்கியத்தை உருவாக்கவும், ஏகாதிபத்தியத்துக்கும், யு. என். பிக்கும் எதிரான எல்லா சக்திகளையும் கொண்ட ஓர் ஐக்கிய இயக்கத்தைக் கட்டியெழுப்பவும் கம்யூனிஸ்ட் கட்சி தயாராக இருக்கிறது'' என்று தீர்மானம் அறிவித்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலைப் பற்றி தீர்மானம் கூறியதாவது;—

''எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமையின்மை தொடர்ந்திருப்பது, யு. என். பியை எதிர்க்கும் மக்களிடையே அதைரியத்தையும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தியிருப்பதுடன், யு. என். பி. அரசாங்கத்தைத் தோற்கடிப்பதில் அவர்களின் திறமையின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் குறைத்து விட்டது. யு. என். பி - எதிர்ப்பு இயக்கத்தின் பொது நலன்களைப் பலியிட்டு தங்களின் குறுகிய கோஷ்டி நலனைப் பாதுகாத்து வருவதும், ஏகாதிபத்திய - யு. என். பி. ஒன்றுபட்ட பலத்தைத் தாங்கள் தனியாகவே நின்று முறியடித்து விட முடியுமென்ற தவறான கருத்தைப் பிரசாரம் செய்து வருவதுமான அந்த யு. என். பி - எதிர்ப்புக் கட்சிகளின் கொள்கைதான் இந்த ஒற்றுமையின்மைக்கு முக்கிய காரணமாகும்.''

தீர்மானம் மேலும் குறிப்பிட்டதாவது:—

''ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சிகளிடையே ஓர் ஒப்பந்தம் செய்து

கொள்ளும்படி கோரும் இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டிய அவசியத்தையும், ஓர் ஐக்கியப் போராட்டத்தின் மூலம் தேர்தலில் யு. என். பியைத் தோற்கடித்து ஒரு ஜனநாயக அரசாங்கத்தை நிறுவ வேண்டிய அவசியத்தையும் விரைவாக அண்மி வரும் அடுத்த பொதுத்தேர்தல் ஏற்படுத்தியுள்ளது.''

ஐந்தாவது காங்கிரஸுக்குப் பின்னர் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா கட்சித் தலைவராகவும், பீட்டர் கெனமன் பொதுக்காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

1955 ஆகஸ்டு 12ந் திகதி, ஹர்த்தால் இரண்டாவது ஆண்டு விழாத் தினத்தன்று, ''ஹர்த்தால் தியாகிகளின் பெயரால் ஒன்றுபடுக!'' என்ற கோஷத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சிகளை ஐக்கியப்படுத்தும் மற்றோர் இயக்கத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்தது. அடுத்த பொதுத் தேர்தலில் ஒவ்வொரு தொகுதிக்கும் பரஸ்பர உதவியுடன் ஒரே ஒரு அபேட்சகரை மட்டும் நிறுத்துவதற்கு யு. என். பி-எதிர்ப்புக் கட்சிகளிடையே ஒப்பந்தம் செய்து கொள்வதையும், யு. என். பி-எதிர்ப்புச் சக்திகளின் ஐக்கியத்தின் அடிப்படையில் ஒரு ஜனநாயக அரசாங்கத்தை நிறுவக் கூடிய சாத்தியக்கூறுகளை மக்கள் முன் சமர்ப்பிப்பதையும் இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

1955 ஆகஸ்டு 12ந் திகதி கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்துடன் இந்த இயக்கம் ஆரம்பமாயிற்று. இக்கூட்டம் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்டது. எதிர்க்கட்சி எம். பி. கள் அநேகர் இக் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். இக் கூட்டம் விடுத்த வேண்டுகோளில் குறிப்பிட்டதாவது:—

''அடுத்த பொதுத் தேர்தலில் இந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டுமானால், யு. என். பி. அரசாங்கத்தை எதிர்க்கும் எல்லா சக்திகளினதும் ஐக்கியம் அத்தியாவசியமாகும்.



''1953 ஹர்த்தாலின் போது நடைபெற்றது போல - எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கும் போதெல்லாம்அவர்கள் அரசாங்கத்திலும் பார்க்க பலம் வாய்ந்தவர்களாக விளங்கினர்கள் என்பதை அனுபவம் எடுத்துக்காட்டியுள்ளது. 1947, 1952 பொதுத் தேர்தல்களின்போது நடந்ததுபோல அவர்கள் பிளவுபட்டு ஒருவரை ஒருவர் எதிர்த்து நின்றபொழுது, இந்த ஒற்றுமையின்மையிலிருந்து யு. என். பி. பயனடைந்தது.

''ஆகவே அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்பு யு. என். பி. எதிர்ப்பு - சக்திகளை ஐக்கியப்படுத்தும் ஒரு மக்கள் இயக்கத்தை ஆரம்பிக்கும்படி நாங்கள் வேண்டுகின்றோம்.

''எதிர்க்கட்சிகள் ஒன்றுடன் ஒன்று மோதாமலிருப்பதற்காக யு. என். பி - எதிர்ப்பு அபேட்சகர்களின் ஜாபிதா வொன்று தயாரிக்கப்படவேண்டும்.

''யு. என். பி. அரசாங்கத்துக்குப் பதிலாக ஓர் அரசாங்கத்தை நிறுவ யு. என். பி - எதிர்ப்புச் சக்திகள் இணங்கவேண்டும்.

''அத்தகைய ஒற்றுமை ஏற்படுவதால், ஒற்றுமையின்மையால் மக்களிடையே தோன்றிய ஏமாற்றம் அகன்றுவிடும். அத்துடன், யு. என். பியின் பயமுறுத்தலை எதிர்த்து நின்று, அதனைத் தோற்கடிப்பதற்காக பயமின்றியும் தீவிரமாகவும் போராடுவதற்கான உணர்ச்சி மக்களிடம் தோன்றும்.

''யு. என். பி. யை எதிர்க்கும் எல்லா ஸ்தாபனங்களும் கட்சிகளும் ஐக்கியத்தின் அவசியத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும், அவை தங்களிடையே உடன்பாடு காண முயற்சி செய்ய வேண்டுமென்றும் நாம் வலியுறுத்துகின்றோம்''

கொழும்புக் கூட்டத்திற்குப் பின்னர் ஓர் ''ஐக்கிய மகஜருக்கு'' கையொப்பம் வாங்கும் மக்கள் இயக்கமொன்று ஆரம்பமாயிற்று. ஒற்றுமை இயக்கத்தை

ஆதரித்து நாடெங்கினும் கட்சி நடத்திய பொதுக் கூட்டங்களில் இந்த மகஜரில் பதினையிரக்கணக்கான கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த இயக்கம் பயனளித்தது. 1955 அக்டோபர் முதலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், லங்கா சமசமாஜக் கட்சிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அடுத்து சுதந்திரக்கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இம் மூன்று எதிர்க் கட்சிகளிடையே போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமொன்று செய்துகொள்வதற்கான இறுதி ஏற்பாடுகள் அநேகமாகப் பூர்த்தியாகிவிட்டன.

இந்தக் கட்டத்திற்றான், அடுத்துவரும் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு யு. என். பி. க்கு உதவி செய்யும் பொருட்டு எதிர்க் கட்சிகளின் ஐக்கியத்தை நசுக்கி பிளவுபடுத்துவதற்காக, ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவைப் பெற்ற ''திரி சிங்கள பெரமுன'' என்னும் குறுகிய சத்தர்ப்பவாத நோக்குள்ள காளான் ஸ்தாபனம் தூண்டிவிட்ட வகுப்புவாத உணர்ச்சியைப் பயன்படுத்துவதற்கு சில பிற்போக்கு வலதுசாரிகள் லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் ஆதரவுடன் முயற்சி செய்தனர்

அவர்களின் தந்திரோபாயம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. முதலாவது கட்டத்தின் போது ''சிங்களம் மட்டும்'' என்னும் ஆயுதத்தை உபயோகித்து இடதுசாரி ஐக்கியத்தைத்தாக்கிதனிமைப்படுத்த முயற்சி செய்தனர். இரண்டாவது கட்டம் இடதுசாரி கட்சிகளுக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே உருவான போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தை உடைத்தெறிவதாகும், இறுதியாக, எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்திய பின்னர், யு. என். பி. கட்சியின் கொள்கையை ''சிங்களம் மட்டும்'' கொள்கையாக மாற்றுவதன் மூலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கையிலுள்ள ஆயுதத்தைப் பறித்தெடுத்து ஒரு திடீர் பொதுத் தேர்தலை நடத்தி யு. என். பி. யை வெற்றி வாகை சூடவைப்பதே மூன்ருவது கட்டம்.



இடதுசாரிக் கட்சிகளைத் தாக்கி தனிமைப்படுத்துவதில் இக்குறுகிய நோக்குள்ள சந்தர்ப்பவாதிகள் ஓரளவு வெற்றியும் பெற்றனர். சிங்களத்தை அரசாங்க மொழியாக்க வேண்டுமென்ற இயக்கத்தைச் சரியாக மதிப்பிடவும், அதன் முற்போக்கு, பிற்போக்கு அம்சங்களிடையேயுள்ள வித்தியாசங்களைத் தெளிவாக உணரவும், அந்த இயக்கத்தை முற்போக்குப் பாதையில் வழி நடத்திச் செல்லவும் கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக்ட்சியும் தவறிவிட்டதால் சந்தர்ப்பவாதிகளின் இயக்கத்திற்கு ஓரளவு ஊக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக இவ்விரு இடதுசாரிக் கட்சிகளும் மக்கள் இயக்கத்திலிருந்து தற்காலிகமாக ஒதுக்கப்பட்டதுடன் முதல் முயற்சி எடுப்பதும் அவர்களின் கையிலிருந்து நழுவிவிட்டது.

ஆயினும், மூன்று எதிர்க்கட்சிகளிடையே ஏற்பட்ட போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முற்ருக உடைத்தெறிய வலதுசாரி சந்தர்ப்பவாதிகளால் முடியவில்லை. யு. என். பி. ''சிங்களம் மட்டும்'' கொள்கையைத் திடீரென ஏற்றுக்கொண்டதால் சிங்களமக்கள் ஏமாந்துவிடவில்லை.

1956 பொதுத் தேர்தலில் பொங்கிய பொதுஜன எழுச்சி யு. என். பி. யை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றிவிட்டது. பல ஏகாதிபத்திய—எதிர்ப்புக் கோரிக்கைகள் அடங்கிய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையிலே திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையில் புதிய அரசாங்கம் பதவியேற்றது. ''கம்யூனிஸ்டுகளை வேட்டையாடுவேன்'' என்று மிரட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த ''வலுவுள்ள மனிதன்'' என்று கூறப்பட்ட கொத்தலாவலை இலங்கையை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் நரிவேட்டையாடுவதுடன் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

பருத்தித்துறை தொகுதியில் பி. கந்தையா தமிழரசுக் கட்சியையும், தமிழ் காங்கிரஸ்ஸையும் தோற்கடித்து கம்யூனிஸ்ட் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்டது 1956ம் வருட பொதுத் தேர்தலில் ஒரு விசேஷ அம்சமாகும். இவ்வாறு, 1931ல் டாக்டர் விக்கிரமசிங்கா இராஜாங்க சபைக்குத் தெரிவு செய்யப் பட்டதின் மூலம் சிங்களப்பகுதிகளில் பூர்ஷுவாக்களின் அரசியல் ஏகபோகத்தை முறியடித்து கம்யூனிஸ்ட் கட்சி 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் பகுதிகளில் இந்த ஏகபோகத்தை முறியடித்தது குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது.



## ஐந்தாவது அத்தியாயம்

# பண்டாரநாயக்கா கொள்கைக்கு ஆதரவு

1956 பொதுத் தேர்தலுக்குப் பின்னர், யு. என். பி. தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதை வரவேற்று கம்யூனிஸ்டுக் கட்சி ஓர் அறிக்கை விடுத்தது. ஏகாதிபத்தியத்தினதும் முதலாளித்துவத்தினதும் பிரதான ஏஜன்ஸிக்கு மக்கள் ஒரு பலத்த அடிகொடுத்து, தீவிர ஜனநாயக வளர்ச்சிக்குத் தடையாக இருந்த முக்கிய முட்டுக்கட்டையையும் அகற்றிவிட்டனர் என்று கட்சி அந்த அறிக்கையில் குறிப்பிட்டது.

அறிக்கை மேலும் கூறியதாவது:- திரு. பண்டாரநாயக்கா தலைமையில் புதிய அரசாங்கம் ஸ்தாபிக்கப் பட்டதால் உடனடி வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் நிறைந்த ஒரு நிலைமை உருவாகியது. யு. என். பி— எதிர்ப்பு இயக்கத்துக்குப் பொதுவானதும், இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தைப் பூர்த்திசெய்யக்கூடியதும், ஜனநாயகத்தைப் பலப்படுத்தக் கூடியதும், மக்களின் சுமையைக் குறைக்கக் கூடியதுமான பல திட்டங்கள் எம். ஈ. பி. தேர்தல் அறிக்கையில் அடங்கியிருக்கின்றன.''

எல்லா முற்போக்கு நடவடிக்கைகளிலும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பதாகக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதி கூறியது. மக்களுக்கு அவர்கள் பெற்ற வெற்றி

யின் பலனை அளிப்பதற்காக அரசாங்கக் கட்சியின் உள்ளும் புறமுமிருக்கும் இடதுசாரி, முற்போக்குச் சக்திகள் ஒன்றுசேர வேண்டுமென்று கட்சி வேண்டுகோள் விடுத்தது.

அதன் பின்னர், கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் அதன் பொதுக்காரியதரிசி பீட்டர் கெனமன் விடுத்த மற்றோர் அறிக்கையில் கூறியதாவது:- ''திரு. பண்டாரநாயக்கா அரசாங்கம் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்துக்குப் பதிலாக நிறுவப்பட்ட மற்றொரு முதலாளித்துவ அரசாங்கமாகும் என்ற கருத்தை எமது கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் சிலர் கூறுவதைப்போல எம். ஈ. பி. யின் வெற்றி சோஷலிஸத்தைக் கொண்டுவந்து விட்டதென்ற கூற்றையும் நாம் நம்பவில்லை.

''யு. என். பியைத் தேர்தலில் தோற்கடித்து புதிய அரசாங்கம் நிறுவப்பட்டது, பல்வேறு சக்திகளின் நிறையிலே ஒரு முக்கிய மாற்றத்தையே பிரதிபலிக்கிறதென்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்றுக்கொள்கிறது. இந்த மாற்றம் ஏகாதிபத்திய—எதிர்ப்புச் சக்திகளுக்குச் சாதகமானதும், ஏகாதிபத்தியத்தினதும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருப்பவர்களினதும் நலன்களுக்கு எதிரானதுமாகும். சகல ஏகாதிபத்திய—எதிர்ப்பு, யு. என். பி—எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டும் கொள்கையை—இதுதான் கம்யூனிஸ்டுக் கட்சி நீண்டகாலமாக வற்புறுத்தி வந்த கொள்கை—கணிசமான அளவு ஏற்றுக்கொண்டதினாற்றான், இந்த அரசியல் வெற்றி சாத்தியமாயிற்று.

ஏகாதிபத்தியமோ, யு. என். பியோ இறந்துவிட்டது என்று நம்புவது தவறு என்பதையும், இராணுவத்திலும், அரசாங்க நிர்வாக இயந்திரத்திலும், பொருளாதாரத்திலும், ஏன் புதிய அரசாங்கத்திலுமே முதலாளிகளின் பிரதிநிதிகள் சக்திவாய்ந்த ஸ்தானங்களை இன்னும் பிடித்துக் கொண்டிருக்கிறார்களென்பதையும் சுட்டிக்காட்டிய பீட்டர் கெனமன், மேலும் முன்னேறுவதற்குச் சாதகமான இந்த வாய்ப்புகளை ஏகாதிபத்திய—



எதிர்ப்புச் சக்திகள் நன்கு பயனபடுத்திக் கொள்ளவேண்டுமென்று கூறினர்.

குறிப்பாக, இடதுசாரிக் கட்சிகள் புதிய அரசாங்கத்தின்பால் ஒரு சிநேகபூர்வமான போக்கைக் கையாள வேண்டும். பொதுத்தேர்தலின்போது மக்கள் அங்கீகரித்த சகல முற்போக்குத் திட்டங்களையும் துரிதமாக அமுல்நடத்துவதற்கான ஒரு மக்கள் இயக்கத்தை அவர்கள் நடத்தவேண்டும்.—குடியரசு ஸ்தாபித்தல், பிரிட்டிஷ் இராணுவத் தளங்களை அகற்றுதல், ஒரு சுதந்திர சமாதான வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தல், சோஷலிஸ நாடுகளுடனும் இராஜதந்திர, வர்த்தக உறவுகளை ஸ்தாபித்தல்; அந்நிய ஏகபோக நிறுவனங்களையும், முதலாளித்துவ சொத்துக்களையும் தேசியமயமாக்குதல், பொருளாதாரத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்தல், அரசாங்க நிர்வாக இயந்திரத்தையும் ஆயுதப்படைகளையும், அரசியல் சமூக வாழ்க்கையையும் ஜனநாயக மயமாக்குதல் முதலியவைகளே அந்தத்திட்டங்கள்.

இந்த இயக்கத்திலே—ஏகாதிபத்தியத்தியத்துக்கும் இலங்கைப் பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிரான ஒரு பொது முன்னணியில்—இடதுசாரி கட்சிகள் அரசாங்கத்திலிருக்கும் முற்போக்குச் சக்திகளுடன் கைகோர்த்துக்கொள்ள முயற்சிசெய்ய வேண்டும் என்று கெனமன் கூறினர். இவ்வாறு செய்வதின் மூலமே அரசாங்கத்துள்ளிருக்கும் முதலாளித்துவ சக்திகளைஅடக்கி, முற்போக்கு இலட்சியங்களை அடைய முடியும். முற்போக்கு இலட்சியங்களுக்காகவே மக்கள் வாக்களித்தனர்.

1956ல் இத்தகைய கொள்கையைக் கையாண்ட ஒரே இடதுசாரிக் கட்சிகம்யூனிஸ்டுக் கட்சியே. 1960க்குப் பிறகுதான் இடதுசாரி இயக்கத்தின் எஞ்சிய பகுதிகள் இதே கொள்கையைக் கையாண்டன.

இந்தக் கொள்கையைக் கையாளுவதில் சுதந்திரமாகச் செயல்படும் பொருட்டு, உத்தியோக பூர்வமான எதிர்க்கட்சியிலிருந்து வாபஸாகும்படி கம்யூனிஸ்டுக்

கட்சி தனது பாராளுமன்றக் குழுவுக்கு 1956ல் கட்டளையிட்டது.

இந்த நடவடிக்கையை விளக்கி கம்யூனிஸ்டுக் கட்சி விடுத்த ஓர் அறிக்கை கூறியதாவது:- ''மீண்டும் அதிகாரத்தைப் பெறுவதற்காக,மறுபடியும் தலையைத்தூக்குவதற்கு முயற்சி செய்யும் யு.என்.பியுடன் சேர்ந்து விவாதத்திற் பங்குபற்ற கம்யூனிஸ்டுக்கட்சி தயாரில்லை. எம்.ஈ.பி. அரசாங்கத்துடன் எமக்கு எத்தகைய கருத்து வேற்றுமைகள் இருப்பினும், யு. என். பி. மீண்டும் அதிகாரத்தைப் பெறுவதற்காகச் செய்யும் முயற்சியில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உதவி செய்ய நாம் தயாரில்லை......யு. என். பி கலந்துகொள்ளும் எதிர்க்கட்சியின் பொதுநடவடிக்கைபற்றிய எந்த விவாதத்திலும் கலந்துகொள்ளும் உத்தேசம் எமக்குக் கிடையாது.''

கட்சிக்குள் பூரண விவாதம் நடத்திய பின்னர், சிங்களத்தை இலங்கையின் அரசகருமமொழியாக்கும் இயக்கம் சம்பந்தமாக கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்கனவே செய்த சில தவறுகளைக் கட்சி திருத்திக்கொண்டது. ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, இந்தத் தவறுகள் தேசிய இயக்கத்துக்கும் தொழிலாளர் வர்க்க இயக்கத்துக்குமிடையே தற்காலிகமாக ஒரு பிளவை உண்டாக்கின. இதனைப் பயன்படுத்திக்கொண்ட ஏகாதிபத்திய—எதிர்ப்பு இயக்கத்திலிருந்த வலதுசாரிகள், இடதுசாரிக் கட்சிகளை ஒதுக்கிவிட்டனர்.

1956ம் ஆண்டிலிருந்து, மக்கள் வாக்களித்த முற்போக்குத் திட்டங்களை அமுல் நடத்தும் பொருட்டு கம்யூனிஸ்டுக்கட்சி பல இயக்கங்களை நடத்தியது. புதிய தொரு வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தல், பல சோஷலிஸ நாடுகளுடன் இராஜதந்திர மற்றும் உறவுகளை ஸ்தாபித்தல், கொழும்புத் துறைமுகத் தேசியமயம், பஸ்சேவை தேசியமயம்,பிரிட்டிஷ் இராணுவத் தளங்களை அகற்றுதல், நெற்காணிச் சட்டம் இயற்றுதல், தேசிய கலாசார மறுமலர்ச்சி ஏற்படுத்துதல், தேசியப் பொருளாதாரத்தில் பொதுத்துறையை விஸ்தரித்தல், பெருமளவு சமூக சமத்துவம் ஏற்படுத்துதல், ஜனநாயக விஸ்தரிப்பு, தொழிற்சங்க உரிமைகளைஅதிகமாக வழங்குதல் ஆகியவை முற்போக்குச் சக்திகள் கூட்டாக எடுத்த முயற்சிகளின் விளைவாக நிறைவேறின. பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் சட்டமாக்கப்பட்ட சில முற்போக்கு நடவடிக்கைகளைச்செயல்படுத்துவதற்கான முயற்சிகளைக் கம்யூனிஸ்டுக் கட்சியே எடுத்தது. தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெறுவதற்கான குறைந்தபட்ச வயதை 21 லிருந்து 18 ஆகக் குறைத்தது. அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதற்காக கம்யூனிஸ்டுக்கட்சி 1948 முதல் கிளர்ச்சி செய்து வந்தது. அன்று இதுபற்றிய தீர்மானமொன்றினைப் பீட்டர் கெனமன் பாராளுமன்றத்தில் பிரேரித்தார். ஆனால் அது நிறைவேறவில்லை. 1955ல் தேர்தற் சட்டத்தைத் திருத்துவதற்கான பாராளுமன்றச் செலக்ட் கமிட்டியில் அவர் மீண்டும் இந்த விஷயத்தை எழுப்பினார். அவருடைய தீர்மானம் மறுபடியும் தோற்கடிக்கப்பட்டது. திரு. பண்டாரநாயக்காவும் டாக்டர் என்.எம். பெரேராவும் தீர்மானத்தை ஆதரித்தனர். ஆனால் 1956க்குப் பின்னர், திரு. பண்டாரநாயக்கா புதிய செலக்ட் கமிட்டியைக் கொண்டு இத்தீர்மானத்தை அங்கீகரிக்கச் செய்து, 1959ம் வருடத் தேர்தற் சட்டத் திருத்தத்தின்போது அதனையும் சட்டமாக்கிவிட்டார்.

ஏகாதிபத்திய - எதிர்ப்பு, ஜனநாயக சீர்திருத்தங்களைச் செய்வதற்காக அரசாங்கத்துள் இருந்த முற்போக்குப் பகுதிகளை ஒன்று திரட்டும்போதே, தொழிலாளர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகவும் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து போராடியது. அத்தகைய போராட்டங்கள் மிக முக்கியமானது 1958 ஏப்பிரல் 23ந் திகதி முதல் 28ந் திகதி வரை கம்யூனிஸ்டுகள் நடத்திய மாபெரும் வேலை நிறுத்தமே. இதன் விளைவாக தனியார்துறை தொழிலாளர்களுக்கும் அரசாங்க விகிதத்தில் பஞ்சப்படி கிடைத்தது. இது பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் அனைவருக்கும் பெரிய தொரு சம்பள உயர்வை வென்றெடுத்த ஒரு வெற்றியாகும்.

முற்போக்குச் சக்திகளைப் பிளவுபடுத்துவதற்காக
வும், சமுதாய முன்னேற்றத்தைத் தடுப்பதற்காகவும்
கம்யூனிஸ — எதிர்ப்பை உபயோகிப்பதற்கு ஸ்ரீ லங்கா
சுதந்திரக் கட்சியிலுள்ள வலதுசாரிகள் செய்யும்
முயற்சிபற்றி கம்யூனிஸ்ட் கட்சி 1956க்கும் 1959க்கு
மிடையே மீண்டும் மீண்டும் எச்சரித்து வந்தது.
ஸ்டான்லி டி சொய்ஸா, ஜிம் முனசிங்கா, புத்தரகித்த,
மரைக்கார் முதலியோரை கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து
அம்பலப்படுத்தியது சரியே என்பதை ஸ்ரீ லங்கா சுதந்தி
ரக் கட்சியில் பெரும்பகுதியினர் உட்பட முற்போக்கு
இயக்கத்தின் மக்கள், பின்னர் ஏற்றுக் கொண்டனர்.

1959 மே மாதத்தில் திரு. பண்டாரநாயக்காவின்
அரசாங்கத்திலிருந்த வலதுசாரி — மந்திரிகள், 1956ம்
வருட முற்போக்கு வேலைத்திட்டத்தைக் கைவிடும்படி
அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக ஒரு மந்திரிசபை
வேலை நிறுத்தத்தை நடத்தினர். அப்பொழுது, "வலது
சாரி மந்திரிகளை பதவி நீக்கம் செய்க! 1956ம் வருட
வேலைத்திட்டத்தை அமுல் நடத்துக!" என்ற கோஷத்
தின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் கூட்டங்களை
நடத்தி ஒரு பெரிய இயக்கத்தை ஆரம்பித்தது.

பிற்போக்கு வலதுசாரி மந்திரிகள் உருவாக்கிய மந்
திரிசபை நெருக்கடி அரசாங்கம் சம்பந்தப்பட்ட சிறிய
விஷயமல்ல என்றும், மக்கள் இயக்கத்தின் முன்னேற்
றத்திற்கு எதிராக ஏகாதிபத்தியமும் பிற்போக்கும்
தொடுத்த எதிர்த்தாக்குதலுடன் இந்த மந்திரி சபை
நெருக்கடி மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருப்ப
தால், இது முற்போக்கு இயக்கம் முழுவதையும் பாதிக்
கிறதென்றும் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்டியது.
பிரதம மந்திரி, முட்டுக்கட்டைபோடும் வலதுசாரி மந்
திரிகளைப் பதவி நீக்கம் செய்து 1956ம் வருட முற்
போக்குத் திட்டத்துக்குத் திரும்பிச் சென்றால், அரசாங்
கத்தை ஆதரிப்பதாக கம்யூனிஸ்ட் கட்சி வாக்குறுதி
அளித்தது.

இதே கொள்கையை இதர இடதுசாரிக் கட்சி
களும் கையாண்டிருந்தால் 1959 வெளிநாட்டு உள்
நாட்டு முதலாளிகள் தொடுத்த எதிர்த்தாக்குதலை



முறியடித்திருக்க முடியும். சரித்திரத்தில் ஒரு புதிய
திருப்பமும் ஏற்பட்டிருக்கும். துரதிர்ஷ்டவசமாக, கம்
யூனிஸ்ட் கட்சி மட்டுமே பிற்போக்குவாதிகளின் தாக்
குதலை எதிர்ப்பதற்கு முற்போக்கு சக்திகளை ஒன்று
திரட்டுவதில் அப்பொழுது தீவிரமாகப் போராடிக்
கொண்டிருந்தது. ஆகவே வலதுசாரி சக்திகள் தற்
காலிகமாக ஒரு வெற்றியைப் பெற்றதுடன் 1956ம்
வருட வேலைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டு
மென்று கோரிய சக்திகளை அரசாங்கத்திலிருந்து நீக்குவ
திலும் வெற்றிபெற்றன. 1956ம் ஆண்டு மக்கள் ஆட்சி
பீடத்திலேற்றிய எம். ஈ. பி. கூட்டணி இவ்வாறு
உடைந்து போயிற்று.

1959 மே மாதம் 31ந் திகதி நடைபெற்ற கம்யூ
னிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு நிலைமையை விளக்கி ஒரு
தீர்மானம் நிறைவேற்றியது.

அத்தீர்மானம் கூறியதாவது:—

"முற்போக்குக் கொள்கைகளைக் கடந்த காலத்தில்
செயலாலும், சொல்லாலும் தீவிரமாக எதிர்த்து வந்த
வலதுசாரி மந்திரிகள் ஆதிக்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்
திரக் கட்சி அரசாங்கத்தால் தாங்கள் வாக்களித்த முற்
போக்கு இலட்சியங்களை நிறைவேற்ற முடியுமென்ற
நம்பிக்கை மக்களுக்கு இருக்க முடியாது.

"இப்பொழுது வலதுசாரிகள் அரசாங்கத்தில்
ஆதிக்கம் வகிப்பதாலும், 1956ம் வருட முற்போக்குக்
கொள்கைகளை நிராகரிக்கும் போக்கில் நடவடிக்கை
எடுத்து வருவதாலும், இத்தகைய ஓர் அரசாங்கத்துக்கு
கம்யூனிஸ்ட் கட்சி கடந்த காலத்தில் எம். ஈ. பி. அர
சாங்கத்துக்குக் கொடுத்து வந்த ஆதரவை அளிக்காது.

"தற்போதைய அவசரத் தேவை தொழிலாளர்
வர்க்கம் தலைமையில் சகல முற்போக்கு சக்திகளின் ஐக்
கிய முன்னணியொன்றினைக் கட்டியெழுப்புவதுதான்.
1956ல் மக்கள் வாக்களித்த முற்போக்குக் கொள்கை
களை நேர்மையாக அமுல் நடத்தக் கூடியதும், அதே

இயக்கத்தை சோஷலிஸ சமுதாயம் நிறுவுவதை நோக்கி முன்னெடுத்துச் செல்லக் கூடியதுமான ஓர் அரசாங்கத்தை இம் முன்னணி அமைக்கும்.

''அத்தகைய முன்னணி அமைப்பதற்கான போராட்டம், முற்போக்கு இயக்கத்துள்ளிருக்கும் ஏகாந்தவாத மனப்போக்குகளை எதிர்த்து கொள்கை ரீதியானதும், செயல் ரீதியானதுமான ஒரு போராட்டத்தை உள்ளடக்கியதாகும். குறிப்பாக, ''தனியாகவே செல்வோம்'' என்ற கொள்கைகளை எதிர்த்துப் போராட வேண்டியது அவசியமாகும். இக்கொள்கைதான் எப்பொழுதும் முற்போக்கு இயக்கத்தைப் பிளவுபடுத்தி பிற்போக்குவாதிகளுக்கும், வலதுசாரிகளுக்கும் உதவி வந்துள்ளன. முற்போக்கு இயக்கத்தைப்பிளவுப்படுத்தி, பலவீனப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கம்யூனிஸ்ட் பூச்சாண்டி பற்றிய பயம், கம்யூனிஸ்ட்— எதிர்ப்பு வங்கரோத்துக் கொள்கை ஆகியவற்றை எதிர்த்துப்போராட வேண்டியது அவசியமாகும்''

எம். ஈ. பி. அரசாங்கம் உடைந்தது, முற்போக்குக் கொள்கைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் அரசாங்கத்திலிருந்து ராஜினாமா செய்தது ஆகிய சம்பவங்கள் அரசாங்கத்தை வலது பக்கம் தள்ளிய முதற் நடவடிக்கையாகும். ஆனால் திரு. பண்டாரநாயக்கா இன்னும் ஒரு மத்தியஸ்த சக்தியாக விளங்கி வந்ததால், வலதுசாரி சக்திகள் தாங்கள் விரும்பிய அளவுக்கு வலது பக்கம் அரசாங்கத்தைத் தள்ளிவிட முடியவில்லை. அவர்களைத் திருப்பித் தாக்குவதற்கு அவர் முயற்கி செய்த பொழுது 1959 செப்டம்பரில் அவர் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டார்.

திரு. பண்டாரநாயக்கா இறந்த அதே தினத்தன்று கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவின் அரசியற் குழு கூடி, இந்த கிறிமினல் பலாத்காரத்தைக் கண்டித்தும், இந்தக் கோழைத்தனமான படுகொலைக்குப் பின்னுள்ள சக்திகளையும் காரணங்களையும் கண்டு பிடிப்பதற்காகப் பூரணமான முழு விசாரணை நடத்தப்பட



வேண்டுமென்று கோரியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. டாக்டர் விக்ரமசிங்கா பாராளுமன்றத்தில் கட்சியின் சார்பில் அவரது நினைவுக்கு அஞ்சலி செலுத்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''நாம் அவரது நினைவுக்கு உண்மையிலேயே அஞ்சலி செலுத்த விரும்பினால், அவரது முற்போக்கு இலட்சியங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று விரும்பினால், அவரது மரணத்துக்குப் பின்னாலுள்ள சகல சக்திகளையும் கண்டு பிடித்து, அம்பலப்படுத்தி, தண்டனைக்குள்ளாக்கவேண்டும்.

''அண்மைக் காலத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த விடுதலை இயக்கங்களின் தலைவர்களை நாசமாக்குவதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச ஏகாதிபத்திய சதிகளுக்கும் இந்தப் படுகொலைக்குமிடையிலுள்ள தொடர்பை அம்பலப்படுத்துவது நமது தேசபக்தக் கடமையாகும்.

திரு. பண்டாரநாயக்காவின் கொலையில் வலதுசாரிகளின் பங்கு என்ன என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி அம்பலப்படுத்தியது. தஹநாயக்கா அரசாங்கத்தின் சுயரூபத்தைத் தோலுரித்துக் காட்டியது; அரசாங்கத்தின் பின்னால் தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு வலதுசாரி பிற்போக்குவாதிகள் செய்யும் முயற்சியை எதிர்த்துப் போராடியது. கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் கடுமையாகத் தாக்கிப் பேசிய பீட்டர் கெனமன் தஹநாயக்காவைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''திரு. பண்டாரநாயக்காவுக்குப் போட்டியாக வலதுசாரிக் கோஷ்டியால் உருவாக்கப்பட்ட மனிதரே இந்த தஹநாயக்கா!'' என்று கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

''1959 மே மாதம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகாநாட்டுக்கு முன்பு என்ன நடந்தது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. வலதுசாரிகளின் கோரிக்

கைகளுக்குத் திரு. பண்டாரநாயக்கா இணங்காவிட்டால் அவர் ஸ்ரீ. ல. சுதந்திரக்கட்சியின் தலைவராக இருக்க மாட்டாரென்றும், அவருக்குப் பதிலாக திரு. தஹநாயக்கா தலைவராவாரென்றும், விரைவில் திரு. தஹநாயக்கா இந்நாட்டின் பிரதம மந்திரியாகிவிடுவாரென்றும் அவரிடம் எப்படி கண்டிப்புடன் கூறப்பட்டது என்பது நமக்குத் தெரியும்.

''திரு. பண்டாரநாயக்கா அரசாங்கத்திலும் அவரது கட்சியிலும் வகித்த தலைமை ஸ்தானத்திலிருந்து அவரை அகற்றுவதற்காக பாடுபட்டவர்கள், இப்பொழுது தாங்களே அவரது அரசியல் வாரிசுகளென்றும், அவருக்குப் பின்னர் பதவி வகிக்க உரியவர்களென்றும் உரிமை கொண்டாடுகிறார்கள். அவர்கள் இப்பொழுது அவரை ''போதிசத்துவ'' என்று அழைக்கிறார்கள். ஆனால் அவர் உயிருடன் இருக்கும்போது, அவர்கள் அவரை முதுகெலும்பு இல்லாதவரென்றும், பலவீனமான மனிதரென்றும் இடதுசாரிகளைத் திருப்திபடுத்துகிறவரென்றும் கூறினர். அந்த மனிதர்கள் பண்டாரநாயக்காவின் அரசியல் வாரிசுகள் அல்ல. தங்களுக்குத் தகுதியற்ற அதிகார அந்தஸ்தை அவரது பிரேதத்தின் மேலாற் சென்று பெற்றுக் கொண்ட மனிதர்கள் தான் அவர்கள்.''

கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஏனைய எதிர்க் கட்சி சக்திகளும் சேர்ந்து தொடர்ந்து அம்பலப்படுத்தியதன் விளைவு எவ்வளவு தூரம் கடுமையாக இருந்ததென்றால், ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சிக்குள்ளேயே தஹநாயகாவுக்கெதிராகக் கலகம் தலைதூக்கியது. பிரதமர் தஹநாயக்கா தனது மந்திரிகளில் பாதிப்பேரை பதவி நீக்கம் செய்து, 1959 டிசம்பரில் பாராளுமன்றத்தைக் கலைத்து, 1960 மார்ச்சில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டியதாயிற்று.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும், யு. என். பி. யையும், அதன் பின்னல் நிற்கும் பிற்போக்கு அந்நிய சக்திகளையும் அடுத்துவரும் பொதுத்தேர்தலில் தோற்கடிப்பதற்காக மக்களுக்குத் தலைமைதாங்குவதற்கு



இடதுசாரி முற்போக்குச் சக்திகள் உடனடியாக ஐக்கியப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுசேரும்படி மட்டும் வேண்டுகோள் விடுக்கவில்லை. ஐக்கியத்துக்கு அடிப்படையாக அமையக்கூடிய ஒரு நகல் வேலைத்திட்டத்தையும் சமர்ப்பித்து. யு. என். பி. — எதிர்ப்புச் சக்திகள் ஒன்றுபடத் தவறும் பட்சத்தில், அதனால் யு. என். பி. மீண்டும் அதிகாரத்துக்கு வருவது மட்டுமின்றி, முழு ஜனநாயக, இடதுசாரி இயக்கத்திற்கும் பெரும் ஆபத்து ஏற்படுவதுடன், அண்மைக்காலத்தில் மக்கள் மிகக் கஷ்டத்துடன் பெற்ற முன்னேற்றமும் தடைப்படும் என்று கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக் கூறியது.

ஆனால், யு. என். பி. க்கும் பிரதமர் தஹநாயக்காவின் லங்கா பிரஜா தந்திரக் கட்சிக்கும் எதிராக எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை. ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, எம். ஈ. பி., கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை அனேகமாக எல்லாத் தொகுதிகளிலும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிட்டன ஆகவே யு. என். பி. 58 ஆசனங்களைப் பெற்றதுடன், திரு. டட்லி சேனநாயகாவுக்கு பெரும்பான்மையற்ற ஓர் யு. என். பி. அரசாங்கத்தையும் நிறுவ முடிந்தது.

ஆனால் அவரது அரசாங்கம் குறுகிய ஆயுள் கொண்டதாக இருந்தது. பாராளுமன்றத்தில் அதன் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது நடந்த விவாதத்தில் எடுக்கப்பட்ட முதலாவது வாக்கெடுப்பிலேயே அது தோற்கடிக்கப்பட்டது. ஓர் அரசாங்கத்தை அமைக்கும்படி மகாதேசாதிபதி ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சித் தலைவியைக் கேட்டுக்கொண்டால், ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினை ஆதரிப்பதற்கு தாங்கள் தயாராயிருப்பதாக கம்யூனிஸ்ட் கட்சியும் இதர எதிர்க் கட்சிகளும் அறிவித்தன. இதனைச் செய்வதற்குப்பதிலாக, மகாதேசாதிபதி மீண்டும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, 1960 ஜூலையில் புதிய தேர்தல் நடைபெறுமென்று அறிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி நீண்டகாலமாகக் கடுமையாகப்
போராடிவந்த முற்போக்கு ஐக்கியம் பற்றியகொள்கை
சரியானதே என்பதை 1960 மார்ச் தேர்தலின் அனுப
வங்கள் ஏனைய யூ. என். பி. எதிர்ப்புக்கட்சிகளுக்கும்
உணர்த்திவிட்டன.

யு. என். பி. யின் தோல்வியை நிச்சயப்படுத்வது
தற்காக மற்ற யு. என். பி. எதிர்ப்புச் சக்திகளுடன்
ஒன்றுசேருவதென்று ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியினதும்,
சமசமாஜக் கட்சியினதும் விசேட மகாநாடுகளில் முடிவு
செய்யப்பட்டது. இதன் விளைவாக ஸ்ரீ. ல. சுதந்திரக்
கட்சி, சமசாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைக
ளிடையே ஒரு தேர்தல் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தங்கள் மூன்று கட்சிகளி
டையே போட்டியைத் தவிர்ப்பதை மட்டும் நோக்கமா
கக் கொண்டிருந்தாலும், தேர்தல் பிரச்சாரத்தின்
போது பரஸ்பரம் உதவிகளைச் செய்யுமளவிற்கு வளர்ந்
தன. இந்த ஐக்கியம் யு.என்.பி. க்கு எதிரான பொதுப்
போராட்டத்திலே முற்போக்கு இயக்கத்தின் எல்லாப்
பகுதிகளையும் ஒன்று திரட்டியதுடன் பிற்போக்குச் சக்
திகளின் தீர்க்கமான இயக்கத்தை முறியடிப்பதற்கும்
வழிவகுத்தது. இதன் விளைவாக ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி
சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை 127
தொகுதிகளில் போட்டியிட்டு, 93 தொகுதிகளிலே
வெற்றிபெற்றன. யு. என். பி. 50 ஆசனங்களிலிருந்து
30 ஆசனங்களாகக் குறைந்தது. திருமதி ஸ்ரீமாவோ
பண்டாரநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட ஸ்ரீ. ல.
சுதந்திரக் கட்சி அரசாங்கம் நிறுவப்பெற்றது.

1960 டிசம்பரில் கொழும்பில் கூடிய கம்யூனிஸ்ட்
கட்சியின் ஆறுவது காங்கிரஸ், 1956 தொட்டு முற்
போக்குக்கும் பிற்போக்குக்குமிடையே நடைபெற்று
வந்த சிக்கலான போராட்டங்களில் கட்சிபெற்ற அனுப
வங்களைத் தொகுத்து விளக்கியது. இலங்கைப் புரட்சியி
னது ஏகாதிபத்திய — எதிர்ப்புக் கட்டத்தின் கடமைக
ளைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதற்காகவும், சோஷ



லிஸத்தை நோக்கி முன்னேறுவதற்கான அடிப்படையை அமைத்தற்காகவும் இடதுசாரி, ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குச் சாதகமான புதிய நிலைமைகளை காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் தீர்மானம் விமர்சித்தது.

அது மேலும் கூறியதாவது:

''1960 ஜுலை 20ந் திகதி கிடைத்த தேர்தல் வெற்றியை அடைவதற்கான நிலைமைகளும், ஏகாதிபத்தியத்திற்கும் அத்துடன் கூட்டுச் சேர்ந்திருப்பவர்களுக்கும் எதிரான தேசிய ஐக்கிய முன்னணியை நிறுவுவதற்கும் அதிக சாதகமான அடிப்படையை உருவாக்கின. இத்தகைய முன்னணியை அமைக்குமாறு கம்யூனிஸ்ட் கட்சியின் நான்காவது காங்கிரஸ் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தது.

''இலங்கைப் புரட்சியின் ஏகாதிபத்திய—எதிர்ப்பு ஜனநாயகக் கட்டத்தைப் பூர்த்தி செய்வதையும் கடமைகளை 1956 ஏப்ரல் மாதத்தில் இருந்ததைப் போலவே இன்றும் மக்கள் எதிர்நோக்கி இருந்தனர். ஆனல் ஜுலை 20ந் திகதி பெற்ற தேர்தல் வெற்றியை ஒட்டி உருவான நிலைமை 1956 ஏப்ரலில் இருந்த நிலையிலும் சில முக்கிய அம்சங்களில் வேறுபட்டதாகும்.

1956ல் எம். ஈ. பி. யின் வெற்றிக்கு குறுகிய தேசியவாதமும், கம்யூனிஸ— எதிர்ப்பும் உதவின. ஆயினும் 1960 ஜுலை 20ந் திகதி தேர்தல் வெற்றி குறுகிய தேசியவாதத்தையும், கம்யூனிஸ—எதிர்ப்பையும் எதிர்த்து நடத்திய போராட்டத்திலே வென்றெடுக்கப்பட்டதாகும். குறுகிய தேசியவாதமும், கம்யூனிஸ—எதிர்ப்புமே யு. என். பி. யினதும், பிற்போக்கு கூட்டுச் சக்திகளினதும் பிரதான ஆயுதங்களாக இருந்தன. யு .என். பி. யும், அந்நிய பிற்போக்குவாதிகளும் தூண்டிவிடும் இனபேதத்தையும், சோவியத் எதிர்ப்பையும், இடதுசாரி—எதிர்ப்பையும் எதிர்த்து ஒன்று

சேர்ந்து போராடுவதற்கு மத்தியதர சக்திகளும் இடதுசாரிகளும் கற்றுக்கொண்டிருந்தனர்.

‘‘புதிய அரசாங்கத்தினதும் மக்களினதும் கடமைகள் கடுமையானவை. ஆனுல் யு. என். பி.—எதிர்ப்புப் போராட்டத்திலே கட்டி எழுப்பப்பட்ட இடதுசாரி மத்தியதர சக்திகளின் ஐக்கியத்தை மென்மேலும் வளர்த்து உறுதியுடன் செயலாற்றுவதின் மூலம் அக்கடினமான கடமைகளை நிறைவேற்ற முடியும்.’’

ஜூலை 20ந் திகதி தேர்தல் வெற்றியை நிலைநிறுத்துவதற்காகவும் முன்னெடுத்துச் செல்வதற்காகவும், முற்போக்கு இயக்கத்தின் பெரும் பகுதியினது உணர்ச்சி, அனுபவம், தற்போதைய நிலைமையின் தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இடைக்கால கோரிக்கைகளைக் கொண்ட உடனடித் திட்டமொன்றினை அமுல் நடத்தும்படி முற்போக்கு இயக்கத்தையும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தையும் அரசியற் தீர்மானம் கேட்டுக்கொண்டது.

கீழ்க்காண்பவைகளும் இந்த வேலைத்திட்டத்தில் அடங்கியிருந்தன:-

‘‘இலாபப்பங்கு, இலாபம், மூலதனம் ஆகியவை இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுவதை உடனடியாகத் தடைசெய்தல், வங்கிகளையும், காப்புறுதித் தொழிலையும் தேசியமயமாக்குதல், அத்தியாவசியப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதியைப் படிப்படியாக அரசாங்கம் மேற்கொள்ளுதல், சோவியத் யூனியன் உட்பட சோஷலிஸ்ட் நாடுகளின் உதவித் திட்டத்தின்கீழ் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த ஆரம்பித்தல், போலிஸ், இராணுவம், அரசாங்க நிர்வாகம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், ராஜதந்திர சேவை ஆகியவற்றின் முக்கிய பதவிகளிலிருந்து பிற்போக்கு வாதிகளையும், யு. என். பி. கையாட்களையும், முதலாளித்துவப் பிரதிநிதிகளையும் அகற்றுதல், ஆசியா பவுண்டேஷன், வோயிஸ் ஒப் அமெரிக்கா மற்றும் இலங்கையிலுள்ள



நாசவேலைகளிலீடுபட்டுள்ள ஏகாதிபத்திய ஏஜன்ஸிகள் ஆகியவற்றைக் கலைத்துவிடுதல் முதலியவைகளாகும்.

அரசியற் தீர்மானம் தொடர்ந்து கூறியதாவது:-

‘‘காலஞ்சென்ற திரு. பண்டாரநாயககாவின் 1956ம் வருட வேலைத் திட்டத்திலுள்ள முற்போக்குக் கொள்கைகளை அமுல் நடத்துவதற்காக, கம்யூனிஸ்ட் கட்சி தனது இதயபூர்வமான முழு ஒத்துழைப்பையும் திருமதி பண்டாரநாயக்காவின் புதிய அரசாங்கத்திற்கு அளிக்கும். அந்தக் கொள்கைக்குச் சாதகமாக கட்சி மக்களைத்திரட்டும். அதேசமயத்தில் அந்தக் கொள்கையிலிருந்து விலகிச்செல்வதையும் ஊசலாடும் போக்கையும் எதிர்த்து கட்சி போராடும்.

தொழிலாளர் வர்க்கத்திற்கும் மத்தியதர சக்திகளுக்குமிடையே பிளவு உண்டாக்குவதற்காக பிற்போக்காளர் அவிழ்த்துவிடும் கம்யூனிஸ்ட் — எதிர்ப்பு புளுகுகளை அம்பலப்படுத்த வேண்டிய அவசியத்தையும் அரசியற் தீர்மானம் வற்புறுத்தியது.

கம்யூனிஸ்டுகள் ஜனநாயகத்திற்கும் பாராளுமன்ற அரசாங்கத்திற்கும் எதிரானவர்கள் என்ற பிற்போக்கான அவதூறுகளைப் பற்றி குறிப்பிட்டு தீர்மானம் கூறியதாது:

‘‘கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றத்தை மாற்றி அமைக்க விரும்புகிறதே தவிர, அதனை அழித்துவிட முயற்சிசெய்யவில்லை. பாரளுமன்றத்தை மக்கள் சருத்தின் உண்மையான கருவியாக மற்றவே கம்யூனிஸ்ட் கட்சி முயற்சி செய்கிறது. இலங்கையில் முதலாளித்துவ அரசு முழுக்க முழுக்க இராணுவ மயமாக்கப்படாதிருப்பதாலும், ஜனநாயக உரிமைகள் பெருமளவில் இன்னும் நீடித்திருப்பதாலும், மக்களிடையே ஜனநாயக பாரம்பரியங்கள் சக்தி வாய்ந்தவைகளாக இருப்பதாலும் தற்போதைய நிலைமையில் பாராளுமன்றத்தை சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்கான மக்களின் உண்மையான கருவியாக மாற்றி அமைப்பது கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சாத்தியமே.

''இலங்கையில் முழுஜனநாயகத்தையும், சோஷலிஸத்தையும் அமைதியான முறைகள் மூலம் அமைப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி முயற்சி செய்கிறது.

''மக்களின் இயக்கத்தை வளர்ப்பது மூலமும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதின் மூலமும், மக்கள் இயக்கங்களைக்கொண்டு இந்தப் பெரும்பான்மைக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் தொழிலாளர் வர்க்கமும் அதன் நேச சக்திகளும் சேர்ந்து பிற்போக்குவாதிகளின் எதிர்ப்பை முறியடித்து, பொருளாதார சமுதாய அரசாங்க அமைப்பில் அடிப்படை மாறுதலை ஏற்படுத்துவதற்காகப் பாராளுமன்றத்தை மக்கள் கருத்தின் கருவியாக மாற்றியமைக்கமுடியுமென்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

''முழுஜனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் நோக்கி முன்னேறுதல் அமைதியாக நடைபெறுமா? இன்றேல் பலாத்காரமாக நடைபெறுமா? என்ற பிரச்சனை தங்கியிருப்பது கம்யூனீஸ்டு—விரோதிகள் மீதேயன்றி, கம்யூனிஸ்டுகள் மீதன்று. முழுஜனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் நோக்கி அமைதியான முறையில் முன்னேறுவதையே கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. அதற்காகவே பாடுபடுகிறது. ஆனால் இந்த முன்னேற்றத்தைத் தடைசெய்வதற்காகப் பிற்போக்குவாதிகள் பலாத்காரவழிகளைக் கையாளுவார்களென்று கம்யூனிஸ்ட் கட்சி மக்களைத்தொடர்ந்து எச்சரித்து, அதற்கு அவர்கள் தயார் செய்யாவிட்டால், அது தனது புரட்சிகரக் கடமைகளிலிருந்து தவறியதாகிவிடும். அத்தகைய சந்தர்ப்பங்களில், பிற்போக்கின் பலாத்காரத்தை நசுக்குவதற்காகத் தங்களின் சக்தியைப் பிரயோகிப்பதற்கு மக்கள் எப்பொழுதும் தயாராயிருத்தல் வேண்டும்.''

அமெரிக்கா-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், யு.என்.பி. கத்தோலிக்க ஆக்கிரமிப்பு ஸ்தாபனம், மற்றும் பிற்போக்கு ஸ்தாபனங்கள் ஆகியவை 1960 ஜூலையில் பெற்ற மக்கள்வெற்றியின் மீது அவைகளின் முதலாவது தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தபோதுதான்



ஆறாவது காங்கிரஸ் கூடியது. ஆகவே முற்போக்கு, பிற்போக்குச் சக்திகளிடையே கடுமையான போராட்டம் நடைபெறும் ஒரு காலகட்டத்தை மக்கள் எதிர்நோக்கி இருப்பதாக எச்சரித்து ஆறாவது காங்கிரஸ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது.

இவ்வேண்டுகோள் கூறியதாவது:

''1960ல் பெற்ற வெற்றியைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதற்காக இந்த நெருக்கடியானவேளையில் ஒன்றுசேர்ந்து நிற்கும்படி அந்த வெற்றிக்காகப் பாடுபட்ட சகல முற்போக்குக் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது. 1960 ஜூலையில் ஐக்கியம் பிற்போக்கை வென்றது அது மீண்டும் அதைச் செய்ய முடியும். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இப்பொழுது ஒன்று சேர்ந்து, பிற்போக்குவாதிகள் அரசாங்கத்தின் மீதும், ஜூலை வெற்றியின் மீதும் தொடுத்துள்ள தாக்குதலை கூட்டாகத் திருப்பித்தாக்கி முறியடிக்கட்டும்.''

''பிற்போக்குச் சக்திகளை ஒடுக்குவதற்கு முழுக்க முழுக்க ஆயுதப்படைகளையும், போலிசையும் நம்பியிருப்பது தவறாகும். சில படைத்தலைவர்களும் போலிஸ் தலைவர்களும் மக்களின் இலட்சியங்கள்மீது அனுதாபமற்றவர்கள் என்பதை நிரூபித்துவிட்டார்கள்'' என்று அந்த வேண்டுகோள் எச்சரித்தது.''

வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:-

''மக்கள் தங்களின் கடமையை நிறைவேற்ற வேண்டும்......பிற்போக்குவாதிகளின் தாக்குதலை முறியடிக்கும் அவர்களின் சங்கற்பத்தை அவர்கள் உறுதியுடன் எடுத்துக்காட்டவேண்டும்.

''ஜூலை வெற்றியைச் சாத்தியமாக்கிய ஐக்கியத்தை எந்த அளவுக்கு நாம் விஸ்தரித்து நிலை நிறுத்த முடியுமோ அந்த அளவுக்கு அந்த வெற்றியைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்ல முடியும். ஸ்ரீ. ல. சுதந்திரக்கட்

131542

சிக்கும், ச. ச. கட்சிக்கும், கம்யூனிஸ்டுக் கட்சிக்குமிடையே நட்பு உறவுகளையும் ஒத்துழைப்பையும் ஐக்கியத்தையும் மேலும் வளர்த்து ஒரு உறுதிமிக்க ஐக்கிய தேசிய முன்னணியாக மாற்ற வேண்டும்.''

மாஸ்கோவில் நடைபெற்ற 81 கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மகாநாட்டுக்குப் பின்னர், ஆறுவது காங்கிரஸ் நடைபெற்றது. இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சியின் தூதுகோஷ்டியொன்று டாக்டர் விக்கிரமசிங்கா தலைமையில் மாஸ்கோ மகாநாட்டில்கலந்துகொண்டது. மகாநாட்டை மகிழ்ச்சியுடன் வரவேற்றும், ''அவ்வாறு கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதும், அனுபவங்களை மதிப்பீடு செய்வதும் முழு சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தையும் பலப்படுத்தும்'' என்ற நம்பிக்கையைத்தெரிவித்தும் காங்கிரஸ் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது மாஸ்கோ மகாநாடு வெளியிட்ட தஸ்தாவேஜூ, ''வரலாற்று மதிப்பு மிகுந்த தென்றும், மார்க்ஸிய-லெனினிஸ்ட் இயக்கத்தின் அசைக்க முடியாத ஐக்கியத்தை மீண்டும் அது எடுத்துக்காட்டுகிறதென்றும், மார்க்ஸிய-லெனினிஸ்ட் சித்தாந்தத்தை அது பெருமளவு வளமாக்கிறதென்றும், நமது கட்சி உட்பட எல்லா மார்க்ஸிய-லெனினிஸ்ட் கட்சிகளுக்கு அது அளவற்ற மதிப்புள்ள ஓர் ஆயுதமென்றும்'' கருத்து தெரிவித்த காங்கிரஸ் அத் தஸ்தாவேஜூவை உற்சாகத்துடன் வரவேற்றது.

மகத்தான சித்தாந்த முக்கியத்துவமுள்ள ஒரு புதிய கொள்கையை மாஸ்கோ மகாநாடு வகுத்தது—அது தான் சுதந்திர தேசிய ஜனநாயகம் என்னும்கொள்கை. தேசிய ஜனநாயக அரசு ஒரு பூர்ஷூவா அரசே. ஆனால் உண்மையான பூர்ஷூவா அரசு முறையிலும் இது வித்தியாசமானது. தொழிலாளர் வர்க்கமும் அடங்கிய—ஆனால் தொழிலாளர் வர்க்கம் பிரதான சக்தியாக விளங்காத—பல்வேறு சக்திகளின் கூட்டணியின் தலைமையில் தங்களின் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட மக்கள் நிறுவக்கூடிய அரசே இந்த தேசிய ஜனநாயகம்.

மார்க்ஸிய—லெனினிய சித்தாந்தத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய மதிப்புமிக்க வளர்ச்சி பற்றியும், இலங்கைக்கு அதனால் பெறக்கூடிய பெறுபேறுகள் பற்றியும் திட்டவட்டமாகவும் முற்றாகவும் ஆராய்வதென்று ஆறுவது காங்கிரஸ் தீர்மானித்தது.



### ஆறுவது அத்தியாயம்

# பிற்போக்கின் எதிர்த்தாக்குதலை எதிர்த்துப் போராட்டம்

1960 டிசம்பரில் நடைபெற்ற ஆறுவது காங்கிரஸ் இலங்கை மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டிருந்ததுபோல, 1961ல் முற்போக்கு, பிற்போக்குச் சக்திகளிடையே கடுமையான போராட்டங்கள் நடைபெற்றன. 1960 ஜூலையில் மக்கள் வெற்றிபெற்று 6 மாதங்கள் பூர்த்தியாகுமுன்பே அந்நிய ஏகாதிபத்தியமும், உள்ளூர் பிற்போக்குச் சக்திகளும் சேர்ந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் மீதும் முற்போக்கு இயக்கத்தின்மீதும் ஒரு கூட்டு எதிர்த்தாக்குதலை நடத்தினர்.

இலங்கைப் பொருளாதாரத்தின்மீது தங்களின் பிடிப்பைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்த அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகபோக எண்ணெய்க் கம்பெனிகள் அரசாங்கத்தை மிரட்டி, பெட்ரோலியம் மசோதா சட்டமாவதைத் தடைசெய்வதற்கு முயற்சி செய்தது.

அந்நிய வங்கிகளும், காப்புறுதிக் கம்பெனிகளும் மக்களின் சேமிப்பு பணத்தின்மீது தாங்கள் பெற்றிருந்த ஆதிக்கம் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தாலும், மக்கள் வங்கியாலும் பறிக்கப்படுவதைத் தடுக்கும் முயற்சியிலே எண்ணெய்க் கம்பெனிகளுடன் சேர்ந்துகொண்டன.

புதிய தொழிற்சாலைகள் நிறுவுவதற்காகவும், ஆற்று நீரைக் கொண்டு மின் சக்தி உற்பத்தி செய்வதற்காக வும் சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகள் வழங்கும் உதவியைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற் காக இலங்கை அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த அமெ ரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் தங்களின் அதிகாரங் களைப் பயன்படுத்தின.

சமய ஸ்தாபனங்கள் நடத்திய உதவிபெற்ற—பாட சாலைகளை அரசாங்கம் மேற்கொண்டதை எதிர்த்துப் போராடிய கத்தோலிக்க ஆக்கிரமிப்பு நிறுவனம் பாரா ளுமன்றம் இயற்றிய சட்டத்தையும் மீறி அந்தப் பாட சாலைகளைப் பலவந்தமாகக் கைப்பற்றின.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு தனி நிர்வா கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழரசுவாதிகள் சத்தியாக்கிரக இயக்கம் என்று கூறப்பட்ட இயக்கத்தை நடத்தினர். பத்திரிகைகளை ஜனநாயகமாக்குவதை எதிர்த்தும், தங்களின் ஏகபோகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் போராடிய பத்திரிகை ஏகபோக முதலாளி கள் மக்களைக் குழப்பத்திலாழ்த்தவும், அந்நிய ஏகாதி பத்தினதும் உள்நாட்டுப் பிற்போக்கினதும், நோக்கங்க ளைப் பலப்படுத்தவும் முழு முயற்சி செய்தனர்.

1960ம் வருடப் பொதுத்தேர்தலில் யு. என். பி. க் காக வேலைசெய்த அந்நிய ஏகாதிபத்தியவாதிகள், எண் ணெய்க் கம்பெனிகள், கத்தோலிக்க ஆக்கிரமிப்பு நிறு வனம், பத்திரிகை முதலாளிகள் ஆகியோரின் உரிமைக ளைப் பாதுகாத்து வந்த யு.என்.பி. அவர்களின் ஐக்கிய யத்திற்குத் தலைமைதாங்கியதுடன், ஸ்ரீமாவோ பண்டா ரநாயக்கா அரசாங்கத்தால் இயற்றப்பட்ட முற்போக் குச் சட்டங்களை மீறும்படி மக்களைப் பகிரங்கமாகத் தூண்டுவதின் மூலம் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும் முயற்சிசெய்தது.

அரசாங்க இயக்கத்தைக் கவிழ்த்து, பிற்போக்கு வாதிகளை அரியாசனத்திலேற்றுவதை நோக்கமாகக் கொண்டு ஒரு பொதுத்தேர்தலைத் தொடுப்பதற்கும்



அரசாங்கத்துக்கு எதிரான எல்லா இயக்கங்களையும் ஐக்கியப்படுத்துவதற்கும் அந்நிய ஏகாதிபத்தியமும், உள்நாட்டு முதலாளித்துவச் சக்திகளும் பகிரங்கமாக வும் மறைமுகமாகவும் படிப்படியாக முயற்சித்து வரு கின்றன என்று முற்போக்கு இயக்கத்தையும் அரசாங் கத்தையும் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும், மீண்டும் எச் சரித்தது.

தேசிய, விதேசிய பிற்போக்கின் இந்தப் பொது எதிர்த்தாக்குதல் அரசியல் போராட்டமாகவும், பொரு ளாதார சீர்குலைவு ஏற்படுத்துவதாகவும் மட்டும் இருக் காதென்றும், இப்பிற்போக்கு ஓர் இராணுவச் சதியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஏற்ச் னவே ஆரம்பித்து விட்டதென்றும் முற்போக்குக சக்திகளை முதன் முதலில் எச்சரிக்கை செய்தது கம்யூ னிஸ்ட் கட்சியே.

1962 ஜனவரி 9ந் திகதி பீட்டர் கெனமன் பாராளு மன்றத்தில் கூறியதாவது:.

''இந்த நாட்டில் ஒரு நிரந்தரமான இராணுவ ஆட்சியை நடத்துவதற்காக படிப்படியாக — ஆனால் உறுதியாக—நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று நாட்டையும், அரசாங்கக் கட்சி எம்.பி. க்களை யும், இந்நாட்டின் முற்போக்குச் சக்திகளையும் எச்சரிக்க வேண்டியது அவசியமென்று கம்யூனிஸ்ட் கட்சி சார் பில் நான் இங்கு கூறுகிறேன். வேலை நிறுத்த நிலைமை யைச் சமாளிப்பது என்ற பெயரால் படிப்படியாக உருவாக்கப்படுகின்ற ஒரு நிலைமையின் கீழ் சிவிலியன் ஸ்தாபனங்களின் கையிலுள்ள அதிகாரங்கள் நேரடி இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுகின் றன''.

1962 ஜனவரி 25ந் திகதி அவர் மேலும் அரசாங் கத்தை நோக்கி கூறியதாவது:—

''உங்களின் கழுத்தை அறுக்கும் ஒரு நண்பருடன் நீங்கள் குலாவுகிறீர்கள். உங்களிற் சிலர் தொழிலாளர்

ளர்க்கத்தை நசுக்குவதற்கு இராணுவத்தை உபயோகிக்க விரும்புகிறீர்கள். உங்களுக்காக இராணுவம் முழு முயற்சி செய்யும். ஆனால் தொழிலாளர் வர்க்கத்தை நசுக்குவதில் நீங்கள் வெற்றி பெற்றுவிட்டால், அடுத்து பலியாகப்போவது நீங்கள் தான் ..... நீங்கள் இந்த வாரம் எங்களைச் சிறையிலடைத்தால், ஒரு சில வாரங்களில் நீங்களோ உங்களிற் சிலரோ சிறையிலடைக்கப் படுவீர்கள். அதே இராணுவ சக்திகள் தான் உங்களையும் சிறையிலடைக்கும்.''

இரு நாட்களுக்குப் பிறகு அந்தப் பிற்போக்கான இராணுவச்சதி—அது நடைபெற ஒரு சில மணிநேரத்திற்கு முன்பு — கண்டுபிடிக்கப்பட்டது. ''ஒரு சில வாரங்களில் நீங்களும் சிறையிலடைக்கப்படுவீர்கள்.'' என்று கூறியதின் மூலம் கம்யூனிஸ்டுகள் சதிக்காரர்களைக் குறைவாக மதிப்பிட்டதைப்போல தோன்றியது. ஏனெனில், ஆட்சியாளரையும் இடதுசாரித் தலைவர்களையும் கைது செய்யும் நேரங்களிடையே ஓர் இடைவெளி சதித்திட்டத்தில் இருக்கவில்லை. அவர்கள் எல்லோரையும் ஒரே நாளில் கைது செய்து சிறையிலடைப்பதே சதிகாரர்களின் திட்டம்.

சதியை முறியடித்து, சதிகாரர்களுக்குத் தண்டனை கொடுக்கும் எல்லா முயற்சிகளிலும் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்துக்கு முழு ஆதரவும் கொடுக்க முன் வந்தது. 1962 ஜனவரி 29ந் திகதி கம்யூனிஸ்ட் கட்சி அரசியற் குழு விடுத்த ஓர் அறிக்கை கூறியதாவது;—

''ஒரு பிற்போக்கு இராணுவச் சதியை நடத்துவதற்கு ஆயுதப்படையிலும், போலிஸ் படையிலுமுள்ள ஒரு பகுதியினர் செய்த முயற்சியை முறியடிப்பதற்காக அரசாங்கம் எடுத்த மின்வேக நடவடிக்கையை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

''இந்தச்சதியையும் இது போன்ற பிற்போக்குச்சதிகளையும் பூரணமாகக் கண்டு பிடித்து இறுதியாக நசுக்குவதற்கு எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக கட்சி அறிவிக்கிறது.



இந்தச் சதியில் சம்பந்தப்பட்டவர்கள் உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தாலும் சரி, உயர்ந்த தாழ்ந்த அந்தஸ்துகளைக் கொண்டிருந்தாலும் சரி, மேற்கண்ட நடவடிக்கைகளைத் துணிச்சலுடன் எடுக்கும்படி அரசாங்கத்தைக் கட்சி கேட்டுக் கொள்கிறது.

''பிற்போக்கின் தாக்குதலிலிருந்து சிவில் நிர்வாகத்தின் மேன்மையையும், ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கும்படி, சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் (அரசாங்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி எத்தகைய வேறுபாடுகள் அவர்களிடையே இருந்தாலும் சரி), ஆயுதப் படைகளிலும், போலிஸ்படைகளிலுமுள்ள தேசபக்தர்கள்அனைவரையும் கட்சி கேட்டுக் கொள்கிறது.''

அறிக்கை இறுதியாகக் கூறியதாவது:—

''ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட தொழிலாளர் வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஜனநாயகத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் நடைபெறும் போராட்டத்தின் முன்னோடியாக முன்னணியில் நின்றார்கள்—என்றும் நிற்பார்கள். 1956 ஏப்ரல் மாதத்திலும் 1960 ஜூலை மாதத்திலும் பெற்ற மக்கள் வெற்றிகளை உருவாக்கிய தொழிலாளர் வர்க்கத்தையும் தேசியச் சக்திகளையும் கொண்டு அந்த வெற்றிகளைப் பாதுகாத்து விஸ்தரிப்பதற்கு கூட்டணியே நிச்சயமாக உத்தரவாதமளிக்கக் கூடியது என்பதை கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறது.''

இராணுவப் புரட்சி நடத்துவதற்குச் செய்யப்பட்ட பிற்போக்கான முயற்சி இறுதியில் முறியடிக்கப்பட்டது. ஆனால் பொருளாதார நிலைமை தேய்ந்து வந்தது. சில தவறான கொள்கைகள், பொருளாதாரத்தில் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் பலவீனமான நிர்வாகம் ஆகியவை மக்களிடையே பெருமளவு ஏமாற்றத்தை உண்டாக்கின. இந்த நிலைமையை பிற்போக்குவாதிகள் தங்களின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டனர்.

சாதாரண மக்கள் மீது மேலதிகப் பளுவைச் சுமத்தாமல், அந்நிய, உள்நாட்டு முதலாளிகள் மீது பளுவைச் சுமத்தி, நாட்டையும், மக்களையும் எதிர்நோக்கியுள்ள பொருளாதாரக் கஷ்டங்களைத் தீர்க்கும்படி கோரும் மக்கள் இயக்கத்தை—மக்கள் பட்ஜெட் இயக்கத்தை—கம்யூனிஸ்ட் கட்சி 1962 மே மாதத்தில் மிக வெற்றிகரமாக நடத்தியது.

பட்ஜெட்டைத் தயாரித்த பின்னர் அதன் குறைகளை எடுத்துக் காட்டுவதற்குப் பதிலாக, பட்ஜெட்டைத் தயாரிக்குமுன்பே பட்ஜெட்டுக்கான யோசனைகளைத் தெரிவிக்கும் சந்தர்ப்பம் (இந்த உரிமையை இதுவரை முதலாளிகள் மட்டுமே அனுபவித்து வந்தனர்.) இவ்வியக்கத்தின் மூலம் சாதாரண மக்களுக்கும் கிடைத்தது. இயக்கத்தின் இந்த அம்சம் தான் அநேகமாக இயக்கத்துக்கு மக்களின் உற்சாகத்தையும், விரிவான ஆதரவையும் பெற்றுக்கொடுத்தது. இயக்கத்தின் இந்த அம்சம், 1956க்குப் பின்னர் ஏற்பட்ட மக்களின் புத்துணர்ச்சிக்கமைய ஜனநாயகத்தை உண்மையில் விஸ்தரிக்க உதவியது.

கம்யூனிஸ்ட் கட்சி தனது சொந்த, திட்டவட்டமான பட்ஜெட் யோசனைகளைச் சமர்ப்பித்ததுடன், மக்களை இம்சிக்காமல், பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான நிதியை அரசாங்கம் தேடிக் கொள்ளக் கூடிய ஆறு வழிகளையும் எடுத்துக் காட்டியது.

அவைகளாவன:—

(1) அந்நியர்களின் தோட்டங்கள், அந்நிய வங்கிகள், அந்நிய காப்புறுதிக் கம்பெனிகள், அந்நிய ஏற்றுமதி நிறுவனங்கள், அந்நிய நிர்வாக ஏஜன்ஸி நிறுவனங்கள், சிலோன் டுபெக்கோ கம்பெனி, லீவர் பிரதர்ஸ் சிலோன் ஒக்ஸிஜன் போன்ற அந்நிய கம்பெனிகள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்குதல். பெற்றோலியம், இரசாயனப் பசளை, கருவாடு, உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், அத்தியாவசிய மருந்து வகைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதை-



யும், விநியோகிப்பதையும் அரசாங்கமே மேற்கொள்வது— இவைகள் அனைத்தும் வருடாந்தம் சுமார் 40 கோடி இலாபம் அரசாங்கத்துக்குத் தேடிகொடுக்கும்.

(2) சோஷலிஸ நாடுகளுடன் மிக விரிவான அடிப்படையில் வர்த்தகத்தை விருத்தி செய்தல்.

(3) புகையிரத சேவை, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்க வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றைச் சீரமைத்தல்.

(4) ஆயுதப் படைகளுக்கும் போலிஸுக்கும் செலவு செய்யப்படும் பணத்தைக் குறைத்தல்.

(5) வீணடித்தல், ஊழல் ஆகியவற்றை எதிர்த்து பெரும்போர் நடத்தல்.

(6) தொழில், விவசாய அபிவிருத்திக்குத்தேவைப்படும் உதவிகளைச் சோஷலிஸ நாடுகளிடமிருந்து பெறுதல். ஆகியவைகளே அந்த ஆறு வழிகள்.

1962 மே, ஜூன் மாதங்களில் 325க்கு மேற்பட்ட பொதுக் கூட்டங்களும், பல விரிவுரைகளும், விவாதங்களும் நடத்தப்பட்டன. விசேட பிரசுரங்களும் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன. சாதாரண மக்களின் நலத்தைப் பிரதிபலிக்கும் ஒரு பட்ஜெட்டைத் தயாரிக்குமாறு கோரி அரசாங்கத்துக்குச் சமர்ப்பிப்பதற்காக ஒரு பிரமாண்டமான மகஜரில் இலட்சக்கணக்கான கையெழுத்துகள் வாங்கப்பட்டன.

கூட்டங்களை ஏற்பாடு செய்யவும், வேறு எல்லா வழிகளிலும் மக்களின் பட்ஜெட் இயக்கத்தை தீவிரப்படுத்தவும் மக்கள் கமிட்டிகள் பலவிடங்களில் நிறுவப்பட்டன. உள்ளூர் பிரபலஸ்தர்கள், முற்போக்குக் கட்சிகளின் அங்கத்தினர்கள், ஆகியோரும்; கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற பல்வேறு உள்ளூர் ஸ்தாபனங்களும் இக் கமிட்டிகளில் அங்கம் வகித்தனர்.

அடுத்து வரும் வரவு - செலவுத் திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய

யோசனைகள் பற்றி விவாதிப்பதற்காக ஒரு தேசிய மகாநாடு கூட்டும் பொருட்டு இறுதியில் ஒரு தேசியக் குழு நிறுவப்பட்டது. தேசிய மகாநாட்டில் விவாதிப்பதற்கான ஒரு நகல் அறிக்கையையும் இக்குழு தயாரித்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பத்திட்டங்களை விரிவுபடுத்திய இந்த அறிக்கை பட்ஜெட்டை பொருளாதார அபிவிருத்திக்கான திட்டத்துடன் இணைக்க வேண்டிய அவசியத்தையும், பொருளாதாரத்தின் மீது அந்நிய ஏகபோக முதலாளிகள் கொண்டுள்ள பிடிப்பைத் தகர்க்க வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தியது. பொருளாதார விவசாயக் கொள்கையிலும், நமது வெளிநாட்டு வர்த்தகத்திலும் மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று அறிக்கை சிபார்சு செய்தது. பொருளாதார அபிவிருத்திக்கு உதவி புரியும்படி இலங்கையரின் தனியார் துறையை உற்சாகப்படுப்படுத்துவதற்காகவும், வரிக்கொள்கையில் மாறுதல்களைச் செய்வதற்காகவும் அறிக்கை பல யோசனைகளைத் தெரிவித்தது.

தேசிய மகாநாடு 1962 ஜூன் 30ந் திகதியும் ஜூலை முதற் திகதியும் நடைபெற்றது. இம் மகாநாடு மகத்தான வெற்றி பெற்றது. 417 ஸ்தானங்களைச் சேர்ந்த 823 பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்டனர். இம்மகாநாட்டின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் கணிசமான அளவு கலந்து கொண்டது தான். அந்தப் பிரதிநிதிகளில் அநேகர் மகாநாட்டில் பேசினர். மற்றும் பலர் எழுத்து மூலம் மகஜர்கள் சமர்ப்பித்தனர்.

பல்வேறு பிரதிநிதிகள் சந்தித்து அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், பரஸ்பரம் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கும் பொதுவான விஷயங்கள் பற்றி விவாதிப்பதற்கும் ஒரு கருத்தரங்கை உருவாக்கிக் கொடுத்ததின் மூலம் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே, நகரத்துக்கும், கிராமத்துக்குமிடையே ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கு மக்கள் பட்ஜெட் இயக்கம் உதவியாக இருந்தது. பல்வேறு பிராந்தியங்களிலும், பகுதிகளிலும் முற்போக்கு இயக்கத்தின் பல பிரிவுகளிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்கும் இது உதவியாக இருந்தது. இந்த இயக்கம் முழுவதும் இலங்கையில் பொருளாதார, சமுதாய விடுதலைக்காக நடைபெறும் போராட்டத்திலே ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கியது.

இடதுசாரி இயக்கத்தையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள முற்போக்கு சக்திகளையும் ஒன்று சேர்க்கும் இயக்கமொன்றினை 1962 ஆகஸ்டில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்தது. ''இந்த நெருக்கடியான கட்டத்திலே முற்போக்கு இயக்கத்தைத் தீவிரப்படுத்தவும், அதற்குத் தலைமை தாங்கவும், கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, எம். ஈ. பி. ஆகியவற்றின் ஐக்கியம் அவசியமாகும்'' என்று கட்சி மக்களுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் குறிப்பிட்டது.

ஐக்கியம் இம்மூன்று கட்சிகளை மட்டும் உள்ளடக்கியதாக இருந்தால், முற்போக்குச் சக்திகளின் விரிவான ஐக்கியத்தை உருவாக்க முடியாது. தீவிரக்கொள்கையைப் பின்பற்றுகிறவர்களும், இடதுசாரிகளுடன் ஒன்று சேரவேண்டிய அவசியத்தையும், அத்தகைய கொள்கையை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தையும், உணர்ந்தவர்களும் ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியிலும் அதனைச் சுற்றியும் கணிசமான பகுதியினராக இருப்பதால் அவர்களும் இந்த ஐக்கியத்தில் சேர்க்கப்பட வேண்டும்'' என்று அந்த வேண்டுகோள் கூறியது.

1962ம் ஆண்டில் அத்தகைய ஐக்கியத்துக்கான ஒரு சாதகமான அரசியற் சூழ்நிலை, அரிசி வெட்டுக்கு எதிரான ஐக்கிய நடவடிக்கையாலும், கியூபா — ஒத்துழைப்பு நடவடிக்கையாலும் வருடக்கடைசியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களாலும் உருவாக்கப்பட்டன. அமெரிக்க அரசாங்கத்தினதும், அந்நிய எண்ணெய்க் கம்பெனிகளினதும் பயமுறுத்தலினின்று இலங்கையின் சுயாதிபத்தியத்தையும், தன்மானத்தையும் பாதுகாப்பதற்காகவும், அமெரிக்காவினதும் இதர ஏகாதிபத்தியங்களினதும் இராணுவ ஆக்கிர

மிப்பை எதிர்த்து, வியட்நாமில் ஏகாதிபத்திய கையாட்களின் மிருகத்தனமான அடக்கு முறைக்கும் ஆளாகியுள்ள வியட்நாம் மக்களுக்கு ஒத்துழைப்பு அழிப்பதற்காகவும், 1963 ஆரம்பத்தில் மூன்று இடதுசாரிக் கட்சிகளும் சேர்ந்து நாடெங்கினும் ஒரு பெரிய இயக்கத்தை நடத்தியது. இந்த இயக்கத்தால் மேற்கண்ட ஐக்கியத்தை உருவாக்கும் வேலை மேலும் முன்னேறியது.

1963ல் காலிமுகத்திடலில் நடைபெற்ற பிரமாண்டமான மேதினக் கூட்டம்—ஒன்றுபட்ட இடதுசாரி இயக்கத்தால் நடத்தப்பட்ட முதலாவது கூட்டம் — எத்தகைய மாபெரும் சக்தி உருவாக்கப்பட்டது என்பதை சந்தேகத்துக்கிடமின்றி எடுத்துக்காட்டியது. 1963 ஆகஸ்டு 12ந் திகதி—வரலாற்றுப் புகழ் பெற்ற ஹர்த்தாலின் 10வது ஆண்டுப் பூர்த்தி விழாவன்று—கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும், எம். ஈ. பியும் ஒரு பொதுவேலைத் திட்டத்தினதும், உடனடிக் கோரிக்கைகளைக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்தினதும் அடிப்படையில், இடதுசாரி ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. மக்களின் பிரதான நலன்களுக்காகப் போராடுவதற்காகவும், உண்மையான சுதந்திர சுபீட்ச இலங்கையை உருவாக்குவதற்கு உத்தரவாதமளிக்கும் ஒரு புதிய அரசாங்கத்தை நிறுவுவதற்காகவும், ஓர் உண்மையான சோஷலிஸ சமுதாயத்திற்கு அத்திவாரமிடுவதற்காகவும் முன்னணியைச் சுற்றி ஒன்று திரளும்படி முன்னணியின் வேலைத் திட்டத்தையும் கொள்கைகளையும் ஆதரிக்கும் எல்லா மக்கள் பகுதிகளையும், ஸ்தாபனங்களையும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வேலைத் திட்டம் கேட்டுக் கொண்டது.

மூன்று இடதுசாரிக் கட்சிகளிடையே உருவான ஐக்கியம் தொழிற் சங்க இயக்கத்தில் ஐக்கியம் ஏற்படவும் உதவியது. 1963 செப்டம்பரில், இலங்கையிலுள்ள 14 தொழிற் சங்க சம்மேளனங்கள், தங்களிடையே நடத்திய ஆரம்ப விவாதங்களுக்குப் பிறகு ஒரு கூட்டுத் தொழிற் சங்கக் குழுவில் ஒன்றாக இணைந்ததுடன், முழு தொழிற் சங்க இயக்கத்துக்கும் பொதுவான 21 கோரிக்கைகளை தயாரித்தன.



சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் எல்லா வழிகளிலும் ஆதரித்துத் தூண்டப்பட்ட சண்முகதாசனும் மற்றும் சிலரும் தங்களின் சொந்த வேலைத் திட்டத்தையும் பத்திரிகைகளையும் கொண்ட ஒரு கோஷ்டியைக் கட்சிக்குள் உருவாக்கியதின் மூலமும், தொழிற்சங்கத் துறையில் அவர்களுக்கிருந்த செல்வாக்கை கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் எதிராகத் தொழிலாளர்களைத் தூண்டி விடுவதற்காகப் பயன்படுத்தியதின் மூலமும், போட்டி வாலிபர் ஸ்தாபனத்தை நிறுவியதின் மூலமும் கட்சியையும், கட்சியின் தலைமையிலுள்ள வெகுஜன ஸ்தாபனங்களையும் பிளவுப்படுத்தவும், அவற்றுள் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கவும் முயற்சி செய்தனர். அவர்களின் இந்த முயற்சியின் விளைவாக, இடதுசாரி, தொழிற் சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பிரயத்தனம் செய்வது கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரும் சிக்கலாகி விட்டது. இந்தப் பிளவுவாதிக் கோஷ்டியின் முக்கிய நோக்கங்களிலொன்று இடதுசாரி ஐக்கிய முன்னணியை எதிர்ப்பதாகும். மேடைப் பிரசங்கங்களிலும் பத்திரிகைப் பேட்டிகளிலும் அவர்கள் முன்னணியைத் தாக்கினர். இடதுசாரி ஐக்கிய முன்னணி ஊர்வலங்களுக்குப் போட்டியாக அவர்கள் தனி ஊர்வலங்கள் நடத்தினர்.

இவை அனைத்தும் ஒரு கடுமையான உள் கட்சிப் போராட்டத்தை ஏற்படுத்தின. இப்போராட்டத்திலே மத்தியக் குழுவிலும் கட்சியிலும் மிகப் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் ஒன்று சேர்ந்து பிளவுவாதிகளைக் களைந்தெறிந்தனர்.

1963 செப்டம்பரில் மத்தியக்குழு ''சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரச்சினைகளைப் பற்றி'' ஓர் அறிக்கை வெளியிட்டது. அண்மைக்காலத்தில் சீனத் தோழர்களின் அநேக செயல்களையும் அரசியல் கொள்கைகளையும் பற்றி அச்சத்தையும், வியப்பையும், வேதனையையும் இவ்வறிக்கை தெரிவித்தது.

அறிக்கை மேலும் கூறியதாவது:—

''இந்தக் கொள்கைகளுக்கும், செயல்களுக்கும் நாம் இணங்க முடியாது. அவை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பொதுக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதாகவும், சகோதரக் கட்சிகளிடையே குழப்ப நிலையைப் பரப்பி வருவதாகவும், கம்யூனிஸத்தின் செல்வாக்கையும் சர்வதேசக் கொள்கையையும் பாதிப்பதாகவும், சர்வதேசக் கம்யூனிஸ்ட், தொழிலாளர் வர்க்க, ஜனநாயக இயக்கங்களிலே பிளவையும், சீர்குலைவையும் ஏற்படுத்தும் அபாயத்தை உருவாக்கி வருவதாகவுமே எமக்குத் தோன்றுகின்றன''

மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மகாநாடுகளிலே அங்கீகரிக்கப்பட்ட 1957ம் ஆண்டுப் பிரகடனத்திலும், 1960ம் வருட அறிக்கையிலும் வகுக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையிலே மத்தியக் குழு தனது நிலையை உருவாக்கியிருப்பதுடன், சர்வதேசக் கம்யூனிஸ்ட் பொதுக்கொள்கையிலுள்ள பல அடிப்படை விஷயங்களை எதிர்க்கவும், சவால் விடவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி செய்யும் முயற்சிகளுக்குத் தங்களின் கடுமையான எதிர்ப்பையும் மத்தியக்குழு அறிவித்தது. யுத்தம், சமாதானம், சமாதான சகவாழ்வு, ஆயுத பரிகரணம், தற்கால சகாப்தத்திலே பிரதான முரண்பாடுகளின் தன்மை, உலக சோஷலிஸ முறையின் நடவடிக்கையை நிர்ணயித்தல், உலகப் புரட்சியில் தேசிய விடுதலை இயக்கம், புரட்சிகரப் போராட்டத்தின் கொள்கைகளுக்கும் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்குமிடையேயுள்ள உறவு, முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகர் இயக்கத்தின் பாதை, சோஷலிஸத்துக்கு மாறும் முறைகள், சித்தாந்தம் பற்றிய போக்கு வீர வணக்கத்தை அனுஷ்டித்தல், சோஷலிஸ நாடுகளுக்குமிடையேயும், சகோதரக் கட்சிகளுக்குமிடையேயும் இருக்க வேண்டிய உறவுகள் போன்ற முக்கிய பிரச்சினைகளே சம்பந்தப்பட்ட அந்த அடிப்படை விஷயங்களாகும்.

அறிக்கை இறுதியாக கூறியதாவது:—



சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதும்-1957.1960ம் ஆண்டுகளில் ஒன்று கூடி தயாரிக்கப்பட்ட உலகப் புரட்சி நடவடிக்கைகளின் வளர்ச்சி பற்றிய சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பொதுக் கொள்கைகளைப் பாதுகாப்பதும் எல்லா சகோதரக் கட்சிகளினதும் ஒரு முக்கிய கடமையாகியுள்ளது. கோஷ்டி நடவடிக்கைகளை உறுதியுடன் எதிர்ப்பது மூலமும், இயக்கத்தின் அடிப்படைப் பொதுக் கொள்கைகளை ஏற்றுக் கொள்வது மூலமும், சம்பந்தப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளை விரிவாக விளக்குவது மூலமும் அந்தக் கடமையை நிறைவேற்ற முடியும்.

அடுத்து வரும் மாதங்களில் கம்யூனிஸ்ட் கட்சி இதனை அதிக வெற்றியுடன் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

சண்முகதாசன் பிளவுக் கும்பல் கட்சிக்குள் தோற்கடிக்கப்பட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் கூட, இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமை ஸ்தானத்தில் தாங்கள் உருவாக்கிய எதேச்சாதிகார ஏற்பாடுகளைக் கொண்டு திருப்பித் தாக்குவதற்கு முயற்சி செய்தனர். தொழிலாளர்கள் இக்கருத்து வேற்றுமைகளின் உண்மையான விஷயங்களை அறிந்து கொள்ளுமுன்பு, அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட தொழிற்சங்க சம்மேளன வருடாந்தக் கூட்டத்தில் எம். ஜி. மெண்டிஸும் மற்றவர்களும் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த முயற்சி செய்தபோது, வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட காலிகளால் தாக்கப்பட்டனர்.

ஆனால் இந்தக் கொடிய முயற்சிகள் பிளவுவாதிகள் மீதே திருப்பி விடப்பட்டன. லிப்டன்ஸ், ப்றூக் பொன்ட்ஸ் கம்பெனிகளின் தொழிலாளர்களிடமிருந்து ஆரம்பித்து, தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பிளவுவாதிகளின் ஐக்கிய—எதிர்ப்பு, சீர்குலைவுக் கொள்கைகளைக் கண்டித்ததுடன் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் கொள்கைகளுக்கும் தாங்கள் அளித்து வரும் ஆதரவையும் நம்பிக்கையையும் மீண்டும் ஊர்ஜிதம் செய்தனர்.

இந்தப் போர்க்குணம் மிகுந்த தொழிலாளர்கள் தொழிற் சங்க இயக்கத்திலிருந்து பிளவுவாதிகளைத் துடைத்தெறிவதற்காகக் கம்யூனிஸ்டுகளுடன் கைகோர்த்துக் கொண்டனர். கொழும்பில் ஆரம்பமான அவர்களின் போராட்டம் வெளியூர்களுக்கும் பரவின. தோட்டங்களிலும், பஸ் டிப்போக்களிலும் ஏனைய வேலைத் தலங்களிலும் இப்போராட்டம் நடத்தப்பட்டது. இலங்கைத் தொழிற் சட்டங்களுக்கமைய லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனம் என்ற புதிய பெயரில் தங்களின் ஸ்தாபனத்தைத் திருத்தி அமைப்பதென்று தொழிலாளர்கள் 1964 ஜனவரியில் முடிவு செய்தனர். 1964 மார்ச்சில் லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் விசேட மகாநாடு நடைபெற்ற சமயத்தில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தில் முன்பு இணைந்திருந்த தொழிற் சங்கங்களில் மிகப் பெரும்பாலானவை அதிலிருந்து **விலகி,** லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தில் இணைந்தன. இவை அனைத்தும் இடதுசாரி ஐக்கிய முன்னணியையும், தொழிற் சங்க ஐக்கியக் கமிட்டியையும் பலப்படுத்துவதற்குப் பேருதவியாக இருந்தன.

பீட்டர் கெனமன், எம். ஜி. மெண்டிஸ், எல். டப்ளியூ. பண்டித, வி. ஏ. சமரவிக்ரம, எச். ஜி. எஸ். ரத்னவீர, எம். எல். அர்னேலிஸ் அப்புஹாமி, சி. குமாரசாமி, எஸ். நடேசன், பி. குமாரசாமி, எஸ் ஜே. டி. சில்வா, ஜே. ஏ. கே. பெரேரா, கே. ஏ. ஈ. பிரிட்டோ ஆகியோரும் மற்றும் பலரும் தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் பிளவுவாதிகளைத் தோற்கடிப்பதற்காகவும், பிழையற்ற ஒரு கொள்கைக்காகவும் நடந்த போராட்டத்திலே முக்கியமாகப் பங்குபற்றினர்.

கட்சியின் 25வருட வரலாற்றில் கட்சியைப் பிளவுபடுத்துவதற்காகச் செய்யப்பட்ட இந்த ஒரேயொரு முயற்சிக்குத் தலைமைத் தாங்கிய சண்முகதாசனின் கட்சி—விரோதக் கும்பல் விரைவில் கவலைக்குள்ளாகியது. சண்முகதாசனின் பிரதான சகாவான பி. குமாரசிரி அவரைக் கண்டித்து அவரைக் கைவிட்டுச் சென்று



விட்டார். அது முதல் சண்முகதாசனின் கோஷ்டி பல முறை பிளவுபட்டது. அவருடைய கோஷ்டியில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் பின்னர் சண்முகதாசனைக் கண்டித்து, அவர்களின் அரசியற் தவறுகளைத் தாக்கி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் மாசேதுங் கோஷ்டி முன் வைத்துள்ள தவறான கொள்கைகளை நிராகரித்து விட்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் மீண்டும் சேர்ந்தனர். சண்முகதாசன் பிளவுவாதிக் கோஷ்டியில் எஞ்சியிருந்தவர்களும் முற்போக்கு இயக்கத்தில் இருந்து விரைவில் பூரணமாக ஒதுக்கப்பட்டுவிட்டனர். பிற்போக்குவாதிகளும், ஏகபோக முதலாளித்துவப் பத்திரிகைகளும் அளித்துவரும் உதவிகளைக் கொண்டுதான் அவர்கள் சீவிக்க முடிகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணி இலங்கை அரசியல் நிலைமையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியதென்றால், அன்றையப் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1964 மார்ச் 28ந் திகதி ஒரு பொதுக் கூட்டத்தில் நிகழ்த்திய ஒரு முக்கியமான உரையில், பிற்போக்குச் சக்திகளை எதிர்த்துப் போராடவும், நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்லவும் உதவி செய்யும்படி இடதுசாரி கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். ''யு. என். பி. தலைமையிலுள்ள பிற்போக்குச் சக்திகளை எதிர்த்து தற்போதைய நெருக்கடிக்கு இடதுசாரித் தீர்வை அளிப்பதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இடதுபக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சக்திகளுடன் ஒத்துழைப்பதற்குத்'' தயாரென்று அறிவித்ததன் மூலம் பிரதமரின் வேண்டுகோளுக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி இணங்கியது.

இந்த நிலைமையிற்றான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது காங்கிரஸ் (ஏப்பிரல் 16ந் திகதி முதல் 19ந் திகதி வரை) கொழும்பில் கூடி, இடதுசாரி, முற்போக்குச் சக்திகளின் நலன்களை முன்னிட்டு நாட்டின் அரசியல் நெருக்கடி எவ்வாறு தீர்க்க முடியுமென்று வழிகாட்டியது.

• ஏழாவது காங்கிரஸின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் 14 சகோதர மார்க்ஸிய—லெனினிய கட்சிகளின் பிரதிநிதிகள் பிரசன்னமாக இருந்ததுதான். அக்கட்சிகளாவன:—

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, ஜெர்மன் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி, மங்கோலியா மக்கள் புரட்சிக் கட்சி, ஹங்கேரிய சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சி, செக்கோஸ்லவாக்கியா கம்யூனிஸ்ட் கட்சி, ஆஸ்திரேலியா கம்யூனிஸ்ட் கட்சி, பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி, இத்தாலி கம்யூனிஸ்ட் கட்சி, சூடான் கம்யூனிஸ்ட் கட்சி, கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சி, மெக்ஸிகோ கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. உலகில் அநேகமாகவுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளிடமிருந்தும் காங்கிரஸுக்கு வாழ்த்துச் செய்திகள் கிடைத்தன.

இடதுசாரி ஐக்கிய முன்னணியைக் கட்டி யெழுப்பியதில் கம்யூனிஸ்ட் கட்சி செய்த சேவையைப் பாராட்டி இலங்கை சமசமாஜக் கட்சியும், மகாஜன எக்ஸத் பெரமுனவும் (எம். ஈ. பி.) காங்கிரஸுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தன.

பொதுக்காரியதரிசி பீட்டர் கெனமன் மத்தியக் கமிட்டியின் சார்பில் காங்கிரஸில் அறிக்கை சமர்ப்பித்துப் பேசியதாவது:—

''இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் ஒத்துழைத்து இடதுசாரி வழிகள் மூலம் தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டுமென்ற கருத்து ஸ்ரீ. ல. சுதந்திரக்கட்சிக்குள்ளேயும், அதன் அரசாங்கத்தின் பகுதிகளிடையேயும் வளர்ந்து வருவது இந்த நெருக்கடியில் வரவேற்கத்தக்க அம்சமாகும்........

''இடதுசாரி ஐக்கிய இயக்கத்துக்கும் ஸ்ரீ. ல. சுதந்திரக்கட்சியினுள் முற்போக்குப் பகுதிகளுக்குமிடையே ஐக்கியம் உருவாக்கவேண்டுமென்பது நமக்கு ஒரு புதிய



கொள்கையன்று. சுதந்திரக் கட்சியினுள் தோன்றியுள்ள தீவிரமானதும் இடது பக்கம் செல்வதுமான மாற்றம் நமக்கு வியப்பை அளிக்கவுமில்லே. நமது கொள்கை நெடுகிலும் இந்த விஷயங்களைக் கருத்திற் கொண்டு தான் இருந்து வந்தது. ஆகவே நாம் தூரதிருஷ்டியுடன் முன்பு கூறிவந்தவைகளே இப்பொழுது உண்மையாக நடைபெறத் தொடங்கியதும் நாம் ஏன் பீதியடைய வேண்டும்?

''நமது கொள்கை சரியானதே என்பதை ஊர்ஜிதம் செய்யும் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் வரவேற்கிறோம். அதே சமயத்தில் நாம் தெளிவு படுத்த வேண்டிய விஷயங்கள் பல உண்டு.

''இடதுசாரி வழிகளில் தீர்வுகாண விழையும் சுதந்திரக் கட்சியினுள் வளர்ந்து வரும் தீவிர சக்திகளுக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குமிடையே ஒத்துழைப்பு, ஒரு பொது வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கை ரீதியானதாக இருத்தல் வேண்டும். பிற்போக்கை முறியடித்து அரசியல், பொருளாதார நெருக்கடியை ஒரு தீவிர வழியிற் தீர்ப்பதற்காக முற்போக்கு இயக்கத்தை உற்சாகப்படுத்தி ஒன்று திரட்டக் கூடியதாக அத்தகைய ஒரு வேலைத் திட்டம் இருத்தல் வேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழியினூடாக இதனைச் செய்ய முடியுமென்பதே எமது கருத்து...

''ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இடதுசாரிகளுடன் ஒன்று சேரவும் ஒத்துழைக்கவும் தயாராக இருப்பவர்கள் கீழ்க்காணும் முயற்சிகளைச் செய்தால் தற்போதைய நெருக்கடியை முற்போக்குச் சக்திகளுக்குச் சாதகமாகத் தீர்க்க முடியும்.

★ அவர்களின் கொள்கையிலும் வேலைத் திட்டத்திலும் புதிய மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியத்தை அவர்கள் உறுதியாக உணர வேண்டும்.

★ ஏகாதிபத்தியவாதிகளாலோ, ஏகாந்தவாதிகளின் நிர்ப்பந்தத்தாலோ தூண்டி விடப்பட்ட கம்யூனிஸ்ட்—எதிர்ப்பு அம்சங்களும், தொழிலாளர் வர்க்கத்துக்கும், சாதாரண மக்களுக்கும் எதிராகத் திருப்பி விடப்பட்ட கடந்த காலக் கொள்கைகளின் அம்சங்களும் அத்தகைய புதிய மாற்றங்களில் அடங்கியிருக்க கூடாது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

★ யு. என். பியுடன் கூட்டுச்சேர விரும்பும் தங்களின் சொந்த வலதுசாரிகளை அவர்கள் எதிர்க்க வேண்டும்.

★ இடதுசாரி ஐக்கிய முன்னணியை முழுவதாக எடுத்துக் கொண்டு, அத்துடன் ஒன்று சேரவும் ஒத்துழைக்கவும் அவர்கள் விரும்ப வேண்டும்.

''தற்போதைய நெருக்கடிக்கு முற்போக்கு வழியில் தீர்வுகாண்பதற்கான போராட்டம் சிக்கலானதாகும். தேசிய விவகாரங்களில் அத்தகைய தீவிரத் திருப்பம் உருவாக்குவதற்கு விரைவான இலகுவான தீர்வுகள் கிடையாது. அத்திருப்பம் சர்வதேச விளைவுகளையும் ஏற்படுத்தும். மக்களைத் திரட்ட சகல முயற்சிகளும் செய்யவேண்டும்......

''யு. என். பி.யும், இதர பிற்போக்குச் சக்திகளும்' அதிதீவிர—இடதுசாரிச் சீர்குலைவுவாதிகளும் மிகச் சுறுசுறுப்பாக செயல்படுவதால் அவ்வாறு மக்களைத் திரட்டுவது அத்தியாவசியமாகும். முற்போக்குச் சக்திகளிடையே குழப்பத்தையும் மன பேதத்தையும் உண்டாக்குவதற்கு ஏகபோகப் பத்திரிகைகள் ஒவ்வொரு நாளும் முயற்சி செய்துகொண்டிருக்கின்றன. யு. என். பி. தலைமையிலுள்ள பிற்போக்குவாதிகள் மாறும் நிலைமைகளுக்கேற்ப தங்களின் உபாயங்களையும் கோஷங்களையும் மாற்றிக் கொள்வதில் திறமை மிகுந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டிவிட்டார்கள்.

''எப்படியும், இந்த நிலைமைக்கான தீர்வு இடதுசாரி ஐக்கிய முன்னணியிலும், முன்னணியுடன் சேர்ந்துமே காணமுடியும். வேகமாக மாறும் ஒரு நிலைமையில் உருவாகும் ஒவ்வொரு திருப்பத்திலும் இடதுசாரி ஐக்கிய முன்னணி திட்டமிட்டுத் தலையிடுவதுடன், சம்பவங்களை முற்போக்குத் திசையில் திருப்பிவிட முயற்சி செய்யவும் வேண்டும். அது முதலில் நடவடிக்கை எடுப்பதை இழந்துவிடாமல், தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணியுள் நமது கட்சி இந்தக் கொள்கையையே தொடர்ந்து வற்புறுத்த வேண்டும்....

''தற்போதைய நிலைமைபோன்ற ஒரு நிலைமையிலே இடதுசாரி இயக்கத்துள் சந்தர்ப்பவாதப் போக்கும் தலைதூக்கக்கூடும் அத்தகைய போக்குகள் வளர்வது பற்றி சதா கண்ணும் கருத்துமாக இருப்பதுடன் அவற்றை எதிர்த்துப் போராடுவதும் அவசியமாகும்.

''இடதுசாரி ஐக்கிய முன்னணி 1963 ஆகஸ்டில் செய்துகொண்ட உடன்படிக்கை காட்டும் வழியில் ஒரு வேலைத்திட்டத்தைத் தயாரித்து, அதன் அடிப்படையிலே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுள் இடது பக்கம் நோக்கி இயங்கிக் கொண்டிருக்கும் பகுதிக்கும், இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குமிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காகப் பாடுபடுவதும், இடதுசாரி ஐக்கிய முன்னணியை உறுதிப்படுத்தி பலப்படுத்துவதும் தற்போதைய நெருக்கடியில் நமது கட்சியின் கடமையாகும். ஏகபோக பத்திரிகைகள் உச்சஸ்தாயில் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் முற்போக்குச்சக்திகளின் அரசாங்கம் பற்றிய பிரச்சினைகள் இந்த ஆரம்ப வேலைகளை நிறைவேற்றிய பிறகே, தோன்ற முடியும்.

''1963ம் வருடம் இ. ஐ. முன்னணியின் [உடன்படிக்கையில் கண்டுள்ள வழிக்கமைய தயாரிக்கப்பட்ட ஒரு வேலைத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு உறுதி பூணும் முற்போக்குச் சக்திகளின் அரசாங்கமொன்று ஏற்படுவதும் அதில் இ. ஐ. முன்னணி ஒரு தீர்க்கமான பொறுப்பை ஏற்பதும், நிச்சயமாக

வரவேற்கத் தக்க சம்பவங்களாகும். முக்கிய அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் பல செய்வதற்கும் காலனி முறைக்கு எதிராகவும், சமாதானத்திற்காகவும் நடத்தப்படும் போராட்டத்திலே இலங்கை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளைப் பலப்படுத்துவதற்கும், அத்தகைய அரசாங்கம் உதவி செய்ய முடியும்''

பிளவுவாதிகளைக் கொண்ட சண்முகதாசன் கும்பலுக்கெதிராக கட்சி வெற்றிகரமாக நடத்திய போராட்டத்தை ஏழாவது காங்கிரஸ் ஆராய்ந்தது. இந்தப் போர்ரட்டத்திலே கட்சி பெற்ற அனுபவங்கள் கட்சிக்கும் இடதுசாரி இயக்கத்திற்கும் பயன்படக் கூடியது மட்டுமல்ல — இதே மாதிரி தாக்குதலை எதிர்நோக்கும் இதர சகோதரக் கட்சிகளுக்கும் பயனளிக்கும்.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது திணிப்பதற்குச் சீனத் தலைவர்கள் முயற்சி செய்த அரசியற் கருத்துக்களைக் கண்டித்த காங்கிரஸ் அவற்றை நிராகரித்து விட்டது. 1957—பிரகடனத்தையும், 1960-அறிக்கையையும் காங்கிரஸ் ஆதரித்தது. சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் சீர்குலைவு நடவடிக்கைகளையும், மற்றக் கட்சிகளின் உள்விவகாரங்களில் அவர்கள் தலையிடுவதையும், சகோதரக் கட்சிகளிடையே உறவுகள் சம்பந்தப்பட்ட நியதிகளையெல்லாம் அவர்கள் மீறுவதையும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும், 1957, 1960ம் வருடக் கூட்டங்கள் வகுத்த கொள்கைகளை விசுவாசத்துடன் முன்னெடுத்துச் செல்லும் இதர சகோதரக் கட்சிகளையும் அவர்கள் அவதூறு செய்வதையும் எதிர்த்த காங்கிரஸ் அவற்றைக் கண்டித்தது. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஐக்கியத்தையும் ஒன்றுபட்டு நிற்பதையும், ப்ாதுகாத்து பலப்படுத்துவதற்காகச் சகோதரக் கட்சிகளின் மற்றொரு மகாநாடு கூட்டுவதையும் காங்கிரஸ் ஆதரித்தது.



25 முழு அங்கத்தினர்களையும் 12 அபேட்சக அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு மத்தியக் குழுவைக் காங்கிரஸ் தெரிவுசெய்தது.

ஏழாவது காங்கிரஸ் முடிந்ததும், இ. ஐ. முன்னணியின் பிரதிநிதிகளை அரசாங்கத்திற் சேர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் திருமதி பண்டாரநாயக்கா இ. ஐ. முன்னணியுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தார். ஆனல் யு. என். பி. யுடன் இரகசிய உடன்பாடு செய்துகொண்டு அரசாங்கத்தினதும் தங்களின் கட்சியினதும் முதுகில் விரைவில் குத்தவிருந்த திரு. சி. பி. டி சில்வா தலைமையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த வலதுசாரிகள், புதிய கூட்டரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினதும், எம். ஈ. பி. கட்சினதும் பிரதிநிதிகளைச் சேர்ப்பதைக் கடுமையாக எதிர்த்தார்கள். இதன் விளைவாக, இ. ஐ. முன்னணியிற் சேர்ந்திருந்த கட்சிகளில் ஒன்றின் — அதாவது: சமசமாஜக் கட்சியின்—பிரதிநிதிகள் மட்டும் இறுதியில் கூட்டரசாங்கத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழு 1964 ஜூன் 22ந் திகதி கூடி நிறைவேற்றிய தீர்மானம் கூறியதாவது:-

''அரசாங்கத்திற் சேருவதென்று சமசமாஜக் கட்சி தனியாகச் செய்த முடிவுக்கோ, அவ்வாறு செய்வதில் அது நடந்துகொண்ட முறைக்கோ கம்யூனிஸ்ட் கட்சி இணங்க முடியாது. யு. என். பி. தலைமையிலுள்ள பிற்போக்குச் சக்திகளையும், தீவிர வகுப்புவாதிகள்—போலிப் புரட்சிக்காரர்கள் ஆகியோரின் சீர்குலைவையும் தோற்கடிப்பதற்கும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள வலதுசாரிகளின் எதிர்ப்பை முறியடிப்பதற்கும், அரசியல் நெருக்கடி, நிர்வாக ஸ்தம்பிதம், பொருளாதாரத் தேக்கம் ஆகியவற்றை நீக்குவதற்கு அவசியமான பெருமுயற்சியைத் திரட்டுவதற்கும் போராடும் பொருட்டு எல்லா இடதுசாரி, முற்போக்குச் சக்திகளையும் வெற்றிகரமாக ஒன்றுதிரட்டி ஐக்கியப்

படுத்தித் தலைமைதாங்கப் போதுமான சக்தி இன்னும் குறைவாகவே இருக்கும் ஓர் அரசாங்கமே சமசமாஜக் கட்சியின் மேற்கண்ட முடிவின் விளைவாக ஏற்பட்டுள்ளது.

''ஆயினும், ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி — ச. ச. கட்சி அரசாங்கம் உண்மையில் நிறுவப்பட்டுவிட்டதால் இடதுசாரி, முற்போக்குச் சக்திகள் புதிய நிலைமையை நிதானமாகவும் ஆழ்ந்தும் ஆராய்ந்து அதற்கமைய செயல்பட வேண்டும். இந்த நெருக்கடியான கட்டத்தில் இடதுசாரிகளும், தீவிர முற்போக்குச் சக்திகளும் தங்களின் வலிமையைச் சரிவரப் பயன்படுத்தாமல், பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டு தங்களின் ஐக்கியத்தைப் பலவீனப்படுத்திக் கொண்டால், ஏகாதிபத்தியம், யு. என். பி., ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியிலுள்ள வலதுசாரிகள் ஆகியோரே இதனுல் பயனடைவர்......

''இந்தக்கட்டத்தில் ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி—இ. ஐ. முன்னணி கூட்டரசாங்கமொன்று நிறுவப்படுவதை ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சிக்கு உள்ளும் புறமும் உள்ள வலதுசாரி சக்திகள் தடுத்துவிட முடிந்தது. ஆனுல், ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சிக்குள் பிரதம மந்திரி தோற்றுவித்த இடதுசாரிகளுடன் ஒத்துழைக்கும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவோ, பின் வாங்கச் செய்யவோ அவர்களால் முடியவில்லை. அந்த நடவடிக்கைகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன.

''புதிய மந்திரிசபையில் இடதுசாரிகளின் நிலைமையும், இடதுசாரிகளுடன் ஒத்துழைக்க விரும்பும் ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியிலுள்ள முற்போக்குச் சக்திகளின் நிலைமையும் முன்பிருந்ததிலும் பார்க்கப் பலமடைந்துள்ளது.

''ஆதலின், இந்த அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த ஓராண்டு உடன்படிக்கையில் கண்டுள்ள முற்போக்குத் திட்டங்களைத்



தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக் காலம் முடியுமுன்பு சரியான முறையில் நிறைவேற்றும் பொருட்டு கம்யூனிஸ்ட் கட்சி, புதிய ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி—ச. ச. கட்சி அரசாங்கத்தை ஆதரித்து அத்துடன் ஒத்துழைக்கும்......

''புதிய அரசாங்கம் அறிவித்த முற்போக்குத் திட்டங்களை அமுல் நடத்துவதற்காகச் செய்யப்படும் எந்த முயற்சியையும் யு. என். பி. யும், அரசாங்கத்துக்கு வெளியே உள்ள இதர பிற்போக்குச் சக்திகள் மட்டுமின்றி ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியிலுள்ள வலதுசாரிகளும் எதிர்ப்பார்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை செய்கிறது. ஆகவே அந்தத் திட்டங்களை அமுலாக்குவதற்காகச் செய்யப்படும் எந்த முயற்சியுடனும் அந்தச் சக்திகளை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி தோற்கடிப்பதற்கான போராட்டமும் அத்தியாவசியமாகும். இதற்குப் புதிய அரசாங்கத்திலும் வெளியிலும் இருக்கும் இடதுசாரி, முற்போக்குச் சக்திகளின் திட்டமிடப்பட்ட முயற்சிகள் தேவைப்படுகின்றன.''

கம்யூனிஸ்ட் கட்சிதான் சொல்வதை அப்படியே செயல்படுத்தியது. மேற்கண்ட சம்பவங்களை உண்மைக்கு மாருக விமர்சனம் செய்து கொண்டு, புதிய அரசாங்கத்தில் தனக்கு இடம் கிடைக்காத காரணத்தால் வலதுசாரி பிற்போக்கின் கையில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட பிலிப் குணவர்தன போலன்றி, கம்யூனிஸ்ட் கட்சி பிற்போக்கை எதிர்த்து நடத்திய போராட்டத்திலே ஸ்ரீ.ல. சு க.—ச. ச. க. அரசாங்கத்துக்கு அளிக்கக்கூடிய எல்லா ஒத்துழைப்புகளையும் அளித்தது முதலாளித்துவ நிறுவனங்களால் நடத்தப்படும் தினசரிகளின் ஏகபோகத்தை முறியடிக்க அரசாங்கம் செய்த முயற்சிகளை கட்சி ஆதரித்தது. அரசாங்கத்தை வீழ்த்த பிற்போக்குவாதிகள் செய்த முயற்சிகளுக்கெதிராக கட்சி அரசாங்கத்துடன் கைகோர்த்து நின்றது.

பாராளுமன்றத்தில் எண்ணிக்கையிலே பெரும்பான்மை இருந்தாலும் பிற்போக்கின் எதிர்த்தாக்குதலை முறியடிப்பதற்குப் போதுமான பலம் புதிய அரசாங்கத்திடம் கிடையாதென்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பீடு சரியே என்று நிரூபிக்கப்பட்டது. அரசாங்கத்தை வீழ்த்துவதற்காகப் பெரும் தாக்குதலை நடத்துவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்குவாதிகள், எல்லா முற்போக்குச் சக்திகளும் அரசாங்கத்தில் இடம் பெறுததையும், பொருளாதார நிர்வாகத்தில் அரசாங்கம் செய்த தவறுகளையும் உடனே பயன்படுத்திக் கொண்டனர். முறையே கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும், சமசமாஜக் கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்ட சீர்குலைவுவாதிகளான சண்முகதாசன்—சமரக்கொடி கோஷ்டிகள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்தைப் பயன்படுத்த முயற்சி செய்வதன் மூலம் பிற்போக்குவாதிகளின் இயக்கத்துக்கு உதவி செய்தனர்.

21 கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் போது அரசாங்கத்துக்கு எதிராக முதலாளிகள் நடத்தும் தற்போதைய இயக்கத்தைத் தாங்கள் கண்டிக்கிறோம் என்பதைத் தெளிவு படுத்தவேண்டும் என்றும், பிற்போக்குவாதிகளின் இயக்கத்தை எதிர்த்துத் தோற்கடிப்பதினூடே 21 கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடைபெற வேண்டும் என்றும் லங்காதொழிற்சங்கங்களின் சம்மேளனம் யோசனை கூறியது.

என். சண்முகதாசன் (இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம்) பாலாதம்பு (இலங்கை வர்த்தகச் சிப்பந்திகள் சங்கம்) எஸ். தொண்டமான் (இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்) ஆகியோர் அவ்வாறு செய்ய மறுத்தனர். இறுதியில் லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனம் பொது சேவைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா ஜாதிக்க குரு சங்கமய ஆகியவை மட்டும் 21 கோரிக்கைகளை அரசாங்கத்திடமும் - தனியார்துறை முதலாளிகளிடமும் 1964 நவம்பர் 24ந் திகதி சமர்ப்பித்தன.



இதிலிருந்து இரு வாரங்களுள் பிற்போக்குவாதிகள் தந்திரமான, இழிவான முறைகளைக் கையாண்டு, சி. பி. டி. சில்வா தலைமையில் ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சியிலிருந்து வலதுசாரிகள் சிலர் பாராளுமன்றத்தில் ஒரு நெருக்கடியான கட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்து, 1964 டிசம்பர் 3ந் திகதி ஒரு வாக்கில் ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி—ச. ச. கட்சி அரசாங்கத்தைத் தோற்கடித்தனர்.

தாங்கள் விரும்பாத கொள்கைகளைக் கொண்ட முற்போக்கு அரசாங்கங்களை வீழ்த்துவதற்காக ஆசிய, ஆபிரிக்கப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியம் ஒழுங்கு செய்யவிருந்த பல அரசியற் சூழ்ச்சிகளிலும் சதிகளிலும் இது முதலாவதாகும்.

அரசாங்கத்தை வீழ்த்திய 'பாராளுமன்றச்சதியை'க் கண்டிப்பதற்காக லங்கா தொழிற்சங்கங்களின்சம்மேளனம், இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம், ஸ்ரீலங்கா சுதந்திரதொழிற்சங்க சம்மேளனம் உட்பட பொதுத் துறையிலும் தனியார் துறையிலுமுள்ள எட்டு பெரிய தொழிற்சங்க ஸ்தாபனங்கள் டிசம்பர் 9ந் திகதி அரைநாள் வேலைநிறுத்தமும், ஊர்வலமும், காலி முகத் திடலில் பொதுக் கூட்டமும் நடத்தின. கொழும்பு நகரம் முழுவதிலும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். சுமார் 80,000 தொழிலாளர்கள் ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்றனர். சுமார் இரண்டு இலட்சம் மக்கள் பொதுக் கூட்டத்திற் கலந்துகொண்டனர். இந்தக் கண்டனத்துக்கும், பிற்போக்குச் சக்திகளுக்கெதிரான ஆர்ப்பாட்டத்துக்கும் எதிராக சண்முகதாசனும், தம்புவும் செயல்பட்டார்களெனினும் அவர்களின் தொற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் பிற்போக்கை எதிர்த்து நடைபெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்கு விசேஷமாக விஜயம் செய்த திருமதி பண்டாரநாயக்கா, பாராளுமன்றம் கலைக்கப்படுமென்றும், புதிய தேர்தல் நடத்தப்படுமென்றும்

அறிவித்தார். இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற பொதுக் கூட்டத்திற்றுன், பொதுத் தேர்தலிலும், அதற்கு பிறகும் முற்போக்குச் சக்திகளின் போராட்டத்திற் ஈட்டி முனையாக விளங்கிய ''எத்த'' என்னும் புதிய தினசரிப் பத்திரிகை ஆரம்பிக்கப்படுமென்று திரு பீட்டர் கெனமன் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிவித்தார்.

1965 மார்ச் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது முற்போக்கு, பிற்போக்கு சக்திகளின் தனித்தன்மைகள் தெளிவாகத் தெரிந்தன. தேர்தற் போராட்டம் கடுமையாக நடைபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை மீண்டும் ஒரு போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்டன. இந்த ஒப்பந்தம் தேர்தல் போராட்டம் நடைபெறும்போது அபேட்சகர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்யும் ஓர் ஐக்கிய இயக்கமாக வளர்ச்சிபெற்றது.

ஆயினும், இந்தப் பொதுத் தேர்தலில் முற்போக்கு முகாம் தற்காலிகமாகப் பின்வாங்க நேரிட்டது, முழுச் சபையில் பெரும்பான்மை ஆசனங்களை யு. என். பி. பெறமுடியவில்லை. ஆனல் திரு. டட்லி சேனநாயக்கா திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியவர்களிடையே செய்து கொள்ளப்பட்ட ஓர் இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கத்தை யு. என். பி. நிறுவிக்கொண்டது.

— ● —



### ஏழாவது அத்தியாயம்

# யு. என். பி-சமஷ்டி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம்

1965 மார்ச் மாதத்தில் நிறுவப்பட்ட ''தேசிய'' அரசாங்கத்தில் மாறுபட்ட கொள்கையுள்ள ஏழு அரசியற் கட்சிகளும், கோஷ்டிகளும் சேர்ந்திருந்தாலும் அது, இலங்கையில் மிகவும் பிற்போக்கானது, ஏகாதிபத்திய-சார்பு கொண்ட இரு கட்சிகளான யு. என் பி. இலங்கை சமஷ்டி கட்சி (பெடரல் கட்சி) ஆகிய முக்கிய இரு கட்சிகளின் கூட்டரசாங்கமாகும். முன்பு ஒன்றுக்கொன்று சிண்டுபிடித்துக் கொண்டிருந்த இவ்விரு கட்சிகளும் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்தின்படி சமஷ்டி கட்சியின் பிரிவினைக் கொள்கைகளுக்கு யு. என். பி. பெருமளவில் விட்டுக் கொடுத்தது. இந்த அடிப்படையில், இரண்டாவது பொதுத் தேர்தலொன்றை எதிர்நோக்கவேண்டியதிலிருந்து யு. என். பி. தப்பிக்கொண்டது. இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்திருந்தால், 1960ல் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலின் விளைவு போன்று யு. என். பி. தோல்வி காணவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

புதிய அரசாங்கம் மக்களை வஞ்சிப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு கூட்டணியென்றும், சிங்கள, தமிழ் மக்களின் உயர்தர வர்க்கங்களின் தன்னலமுள்ள வர்க்க நலன்களை மட்டும் பாதுகாக்கும் ஒரு கூட்டணியென்றும் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சனம் செய்தது. ''இது வெளிநாட்டு முதலாளிகளினதும் பெரிய உள்நாட்டு முதலாளிகளினதும் அரசாங்கமாகும் இலங்கையின் நலன்களை வெளிநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு விற்பனை செய்வதற்குத் தயாராக இருக்கும் அரசாங்கமாகும், இலங்கையில் காலனி முறையை வளர்ப்பதற்கு முயற்சி செய்யும் ஓர் அரசாங்கமாகும். இந்த அரசாங்கம் ஏகாதிபத்தியத்துக்குச் சாதகமாக இருப்பதாலும், இது உயிர் வாழ்வதற்கு ஏகாதிபத்திய ''உதவியையே'' பெருமளவில் நம்பியிருப்பதாலும், இலங்கையின் சுதந்திரத்துக்கும், சுயாதிபத்தியத்துக்கும், 1965 முதல் அனுஷ்டித்து வந்த சமாதான வெளிநாட்டுக் கொள்கைக்கும், கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை மக்கள் பெற்றிருந்த வாழ்க்கைத்தர அபிவிருத்திக்கும், ஜனநாயக முன்னேற்றத்துக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டது என்பதை கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக்காட்டியது.

யு. என். பி. — சமஷ்டி அரசாங்கம் அமைக்கப்பட்டதிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்கள் அரசாங்கத்தின் தன்மைபற்றி கம்யூனிஸ்ட் கட்சி கூறிய விளக்கம் மிகவும் சரி என்பதை நிரூபித்து விட்டது.

இக்காலக் கட்டத்தில் அரசாங்கம் அந்நிய முதலாளிகளுக்கு பல முக்கிய சலுகைகளை அளித்துள்ளது. பிரிட்டிஷ், அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு அவர்களின் ஆஸ்திகள் தேசியமயமாக்கப்பட்டதற்குச் சட்டபூர்வமாகக் கொடுக்க வேண்டிய தொகையிலும் பார்க்க இரண்டரை கோடி ரூபாய் அதிகமாக நஷ்டஈடு வழங்கப்பட்டது. இலங்கையிலிருந்து இலாபத்தையும், இலாபப் பங்கீடுகளையும் ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்தும், அந்நியர்களுக்குச் சொந்தமான வங்கிகளில் புதிய பற்று வரவு கணக்குகளை ஆரம்பிப்பதைத் தடை செய்தும் முன்னுள் அரசாங்கம் விதித்த தடைகளை நீக்குவதற்கும் இந்த அரசாங்கம் இணைந்தது. அரசாங்கத்தின் முதலாவது இரு வரவு — செலவுத்திட்டங்களும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பெரிய முதலாளிகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளை ஏழு இலட்ச ரூபாய்க்கு மேல் குறைத்து விட்டது.



அதே சமயத்தில், அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்தும், மேற்கு ஜெர்மன் புதிய காலனிவாதிகளிடமிருந்தும் பொருளாதார உதவி பெறுவதற்கான ''சூழ்நிலை''யை உருவாக்கும் பொருட்டும், அரசாங்கம் அமெரிக்க—ஆதிக்கம் பெற்ற உலக வங்கியின் கட்டளைகளுக்கு அடிபணிந்து, மக்களுக்கு பலமான அடி கொடுத்தது. அரிசிப் பங்கீடு பாதியாகக் குறைக்கப்பட்டது. இலங்கை ரூபாய் இருமுறை மதிப்பு குறைக்கப்பட்டது—முதலில் நேரடியாக ரூபாயின் மதிப்பு 20% குறைக்கப்பட்டது. பின்னர் மறைமுகமாக வெளிநாட்டு நாணய செலவாணி சான்றிதழ் திட்டத்தின் மூலம் ரூபாயின் மதிப்பு மேலும் குறைக்கப்பட்டது. பல அத்தியாவசியப் பொருட்கள் மீது கடுமையான பங்கீடு அமுல் நடத்தப்பட்டது. மறைமுக சம்பள வெட்டு, தொடர்ந்து உயர்ந்துக் கொண்டிருக்கும் விலைவாசிகள், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றால் மக்கள் மீது பளு சுமத்தப்பட்டது.

ஏகாதிபத்தியவாதிகளை அவர்களின் பணப்பையைத் திறப்பதற்கு உடன்படச் செய்வதற்காக யு.என்.பி—சமஷ்டி அரசாங்கம் வெளிநாட்டுக் கொள்கைகளிலும் அவர்களைத் திருப்தி செய்யவே முயற்சி செய்தது. இந்த முயற்சி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வியட்நாம் ஜனநாயகக் குடியரசு, கொரிய ஜனநாயக குடியரசு ஆகியவற்றின் தூதரகங்களை ஆத்திர மூட்டுவதிலிருந்து ஆரம்பமாயிற்று. நடு நிலைமைக் கொள்கையிலிருந்து விலகிச் செல்ல அரசாங்கம் பல முயற்சிகளைச்செய்தது. ''ஏசியன்'' ஸ்தாபனத்தில் சேர அரசாங்கம்

செய்த முயற்சியிலிருந்தும்,வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பு, அரபு நாடுகளில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு ஆகியவைபற்றிய அரசாங்கத்தின் கொள்கையிலிருந்தும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி—இலங்கை சமசமாஜக் கட்சி-கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியால் உருவாக்கப்பட்ட மக்கள் எதிர்ப்பின் விளைவாக அரசாங்கம் பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் அரசியற் கூட்டணி ஸ்திரத்தன்மையை இழந்ததால், அது அதிகாரத்தில் நீடித்திருப்பதற்காக மென்மேலும் ஜனநாயக விரோத முறைகளைக் கையாண்டது. அதனது ஆட்சியில் 1000 நாட்களுக்கு மேல் அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்திக் கொண்டிருக்கிறது. அவசரகாலச் சட்ட அதிகாரமின்றி அதனுல் ஆட்சியில் நீடிக்க முடியாது என்பதைக் காட்டிவிட்டது.அது விரிவான முறையில் அடக்குமுறையைக் கையாண்டுள்ளது. தனது எதிரிகளிடம் அரசியல் வஞ்சம் தீர்த்தது. பொதுத் துறையிலுள்ள பல்லாயிரக் கணக்கான தொழிற் சங்கவாதிகளைப் பழி வாங்கியது.'எத்த' 'ஜனதின' போன்ற முற்போக்குப் பத்திரிகைகள் பல மாதங்களாக நசுக்கப்பட்டிருந்தன. இன்னும் அவை பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் நிர்வாக ஒடுக்குதலுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றன.

யு.என்.பி—சமஷ்டி அரசாங்கம் அவசரக்காலச் சட்டத்தின் போர்வையில் யு. என். பி—சமஷ்டி ஒப்பந்தத்தைப் படிப்படியாக அமுல் நடத்தியுள்ளது. பின்னர், முற்போக்குப் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் அமுல் நடத்தப்பட்டால், இலங்கையின் ஐக்கியமும், பிராந்திய ஒற்றுமையும் பாதிக்கப்படுவதுடன்,இலங்கையைப் பிரிக்கும் சமஷ்டிக் கட்சியின் நோக்கங்கள் நிறைவேறுவதற்கு அத்திவாரமும் அமைக்கப்பட்டுவிடும்.

தங்களின் ஏகாதிபத்திய சார்பு, பிற்போக்குக் கொள்கைகளை அமுல் நடத்துவதிலே யு.என்.பி-சமஷ்டி அரசாங்கம் தன்னிஷ்டப்படி காரியங்களை நடத்த



முடியவில்லை. 1956 முதல் பெற்ற வெற்றிகளை நாசமாக்குவதற்கும், ஏகாதிபத்திய—எதிர்ப்பு ஜனநாயகப் பாதையிலிருந்து விலகிச் செல்வதற்கும் செய்யப்பட்ட முயற்சி, ஸ்ரீ. ல. சு. கட்சி, ல. ச. ச. கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியின் தலைமையில் மக்களின் உறுதியான எதிர்ப்புக்கு ஆளாயிற்று

1966 ஜனவரி 8ந் திகதி யு. என். பி— சமஷ்டி அரசாங்கம் இரகசிய ஒப்பந்தத்தை அமுல் நடத்த முதல் நடவடிக்கை எடுத்த பொழுது ஸ்ரீ. ல. சு. கட்சி, ல. ச. ச. கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியின் தலைமையில் தொழிலாளர் வர்க்கமும், பொது மக்களும் ஓர் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தினர். ஒரு "தேசியத் துக்க தினம்" நடத்தி அன்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்களும், பொது மக்களும், பெருந் தொகையான பௌத்த பிக்குகளும் சேர்ந்து பாராளுமன்றத்துக்கு அமைதி ஊர்வலமொன்றுநடத்தினர். அரசாங்கத்தால் ஏவப்பட்ட போலிஸும்,இராணுவப்படையும் ஊர்வலத்தின் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர். கண்ணீர்புகை பிரயோகித்தனர். துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பௌத்த பிக்குகள் உட்பட பல நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். ஒரு பௌத்த பிக்கு கொல்லப்பட்டார். இவ்வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய சுமார் 50,000 அரசாங்கச் சிப்பந்திகள் வேலைநீக்கம் செய்யப்பட்டும், பெருந் தொகையானஅபராதம் விதிக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டனர்.

யு. என். பி — சமஷ்டி அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கையை எதிர்த்து நடைபெற்ற எல்லாப் போராட்டங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியில் நின்றதைப் போல 1966 ஜனவரி 8ந் திகதிப் போராட்டத்திலும் கட்சி முதல் வரிசையில் நின்றது. இந்தப் போராட்டங்கள் பல உருவங்களைப் பெற்றிருந்தன. தேர்தல் போராட்டம், உள்நாட்டு, சர்வதேசியப் பிரச்னைகள் சம்பந்தமபன மக்கள் இயக்கங்கள், ரூபாய் மதிப்புக் குறைவால் ஏற்பட்ட விளைவுகளை எதிர்த்து 1967 டிசம்பரில் தனியார் துறையில் ஏற்பட்ட பொது

வேலை நிறுத்தம் முதலியவைகளே அந்தப் போராட்டங்கள். தொழிலாளர் தங்களின் முக்கிய நலன்களுக்காக நடத்திய போராட்டங்களிலொன்றுன இந்தப் பொது வேலை நிறுத்தம் பல வாரங்கள் நடைபெற்றது. அதனுல் இலங்கையில் ஏற்றுமதிப் பொருளாதாரம் முழுவதும் அநேகமாக ஸ்தம்பித்தது.

யு. என். பி—சமஷ்டி அரசாங்கம் தாங்கள் விரும்பியபடி ஏகாதிபத்திய போஷகர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதிருந்ததற்கான முக்கிய காரணங்களிலொன்று, ஏகாதிபத்திய—எதிர்ப்பும், மக்கள் சக்திகளிடையே வளர்ந்து வரும் ஐக்கியமுமேயாகும்.

தொழிற்சங்க இயக்கத்தில் ஐக்கியம் உருவாக்கும் கொள்கை பெருமளவில் முன்னேறியது. இந்தக் கொள்கையைக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்துள்ளது. 1966 ஏப்பிரலில் லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனம் உட்பட 15 முக்கிய தொழிற்சங்க ஸ்தாபனங்கள் ஒன்றுகூடி தனியார்துறையிலும் பொதுத்துறையிலுமுள்ள தொழிலாளர்களுக்கான 15 கோரிக்கைகளைத் தயார் செய்தன. அத்துடன் தொழிற்சங்க ஸ்தாபனங்களின் கூட்டுக் கமிட்டியையும் மீண்டும் நிறுவின. இலங்கைத் தொழிற்சங்க இயக்கத்திலே இன்று மிகப்பெரிய பிரதிநிதித்துவ ஸ்தாபனம் இந்தக் கமிட்டியே.

இந்தக் கமிட்டியின் தலைமையில் 15 கோரிக்கைகளுக்கான போராட்டம் முன்னேறிச் சென்றுள்ளது. 1967 ஆகஸ்டில் இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றிலே மிக மேலான பிரதிநிதித்துவம் தாங்கிய ஒரு மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் கலந்துகொண்ட சுமார் 350 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்காக ஓர் இயக்கத்தை நடத்த தொழிற்சங்க ஸ்தாபனங்களின் கூட்டுக் கமிட்டிக்கு அதிகாரம் அளித்தது. இதனையொட்டி கொழும்பிலும், மாகாண நகரங்களிலும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. எல்லாப் பகுதிகளின் தொழிலாளர்



களும் திரட்டப்பட்டனர். இறுதியில் 1967 டிசம்பரில் தனியார் துறையில் பொதுவேலைநிறுத்தம் ஏற்பட்டது. அதற்கு முன்பு, தோட்டங்களில் கம்யூனிஸ்டுகள் தலைமையிலுள்ள யூனியன் ரூ. 17/50 விசேட பஞ்சப்படி கோரி நடத்தப்பட்ட ஒரு பெரிய தோட்டத் தொழிலாளர் போராட்டத்தில் கலந்துகொண்டது.

இந்த மூன்றுண்டுகளில் ஸ்ரீ. ல. சு. கட்சி, ச. ச. கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய மூன்று முக்கிய முற்போக்குக் கட்சிகளின் ஐக்கிய முன்னணி உருவாகத்தொடங்கியது. (கம்யூனிஸ்ட் கட்சி 4வதுகாங்கிரஸிலிருந்து இத்தகைய முன்னணியொன்றினை உருவாக்கும் கொள்கைக்காகப் போராடிவந்துள்ளது) பாராளுமன்றத்தில் ஒரு பொது எதிர்க்கட்சி நிறுவப்பட்டது. மூன்று கட்சிகளையும் கொண்ட ஒரு உயர்மட்டத் தொடர்புக் குழு அமைக்கப்பட்டது. இதனையொட்டி பாராளுமன்ற இடைத் தேர்தல்களிலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் அவ்வப்பொழுதிருந்த முக்கிய பிரச்சினைகள்மீது கூட்டு மக்கள் இயக்கங்கள் நடத்தப்பட்டன.

இவை அனைத்தும், மூன்று கட்சிகளும் ஒரு பொது வேலைத் திட்டம்பற்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கும், அதிகார பூர்வமாக ஐக்கிய முன்னணியை நிறுவுவதற்கும் சாதகமான ஓர் அரசியற் சூழ்நிலையை உருவாக்கின. 1968 பெப்ரவரி ஆரம்பத்தில் மூன்று கட்சிகளின் மத்தியக் கமிட்டிகள் தனித்தனியாகக் கூடி 25-அம்சப் பொதுவேலைத்திட்டத்தை ஏகமனதாக அங்கீகரித்தன. 1968 மார்ச் இறுதியில் கண்டியில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற கூட்டத்தில் இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு மக்களால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இதர இடங்களில் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் இப்பொதுவேலைத்திட்டம் விளக்கிக்கூறப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது ஆண்டு விழா, நடைபெற ஒரு மாதத்துக்கு முன்பு, 1968 ஜுன் 25ந் திகதி ஸ்ரீ. ல. சு. கட்சி- ச. ச. கட்சி-கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் கொழும்பில் அதிகார பூர்வமாக்க கையெழுத்திடப்பட்டது.

இந்த ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டதும், பொதுவேலைத்திட்டம், கையெழுத்திடப்பட்டதும், கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக்கு ஒரு பெரும் வெற்றியும், கம்யூனிஸ-எதிர்புக்கு ஒரு முக்கிய தோல்வியுமாகும். ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகளிடமிருந்தும் முற்போக்குச் சக்திகளிடமிருந்தும் கம்யூனிஸ்ட் கட்சியை ஒதுக்கித் தனிப்படுத்த இந்த ''கம்யூனிஸ்ட்- எதிர்ப்பு!'' முயற்சி செய்து வந்துள்ளது.

ஐக்கிய முன்னணி ஒப்பந்தம், இலங்கையில் சோஷலிஸ, ஏகாதிபத்திய-எதிர்ப்புச் சக்திகளின் ஐக்கியத்தில் ஒரு புதிய உயர்ந்த கட்டம் ஆரம்பமாகியுள்ளதை எடுத்துக்காட்டுகிறது. போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தங்களின் கட்டம் மேலும் முன்னேறிய ஒரு வளர்ச்சியை ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் குறிக்கிறது. இது பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் பரஸ்பர உதவிக்கும் கூட்டு நடவடிக்கைக்கும் வழி சமைக்கிறது. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராகக் கொண்ட, மூன்று கட்சிகளினதும் இதர முற்போக்குச் சக்திகளினதும் மக்கள் அரசாங்கமொன்றினை நிறுவும் ஒப்பந்தமே இந்த ஐக்கிய முன்னணி ஒப்பந்தம்.

அத்தகைய அரசாங்கமொன்று ஆட்சிபீடமேறினால் அமுல் நடத்துவதென்று சங்கற்பம் செய்யப்பட்டுள்ள 25-அம்சப் பொது வேலைத்திட்டம், மூன்று கட்சிகளின் கொள்கைகளில் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்படுபவைகளை உள்ளடக்கியிருப்பதுடன் அது ஓர் உண்மையான ஜனநாயக சுபீட்சமான இலங்கையை நோக்கி முன்னேறும் பாதையையும், இறுதியில் சோஷலிஸம் ஸ்தாபிப்பதையும் விரிவான அடிப்படையில் விளக்கிக் கூறுகிறது.

1965 தொட்டு நடைபெற்ற பாராளுமன்ற இடைத் தேர்தல்களினதும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களினதும் முடிவுகள், அரசாங்கத்தின் அரசியல் நிலைமை தகர்ந்து வருகிறதென்பதையும் ஸ்ரீ. ல. சு. கட்சி-ச. ச. கட்சி.- கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணியின் அரசியல் நிலைமை நாளுக்கு நாள் பலமடைந்து வருகிறதென்பதையும் ஊர்ஜிதப் படுத்துகின்றன.



இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை மக்களுக்கும், சுதந்திர, சோஷலிஸ இலட்சியங்களுக்கும் கடந்த கால் நூற்றாண்டாகச் செய்த சேவையின்பால் இந்த 25வது ஆண்டுவிழாவில் பெருமிதத்துடன் திரும்பிப் பார்க்க முடியும் அத்துடன், மார்க்சிஸம்-லெனினிஸம் தொழிலாளர் சர்வதேசியத்தின் மகோன்னத கொடிக்கு விசுவாசமாக நின்று, அதனால் வழிநடத்தப்பட்ட இந்த மகத்தான போராட்டத்தில் கட்சி மேலும் பங்குபற்றுவதாக எதிர்வரும் வருடங்களை நம்பிக்கையுடன் எதிர்பார்க்க முடியும்.

5660

— ● —

131542

S. K. K. N. Bharan. INUVIL

கொழும்பு 8, கொட்டா ரேட்
91ம் இலக்கத்திலுள்ள லங்கா
அச்சகத்தில் அச்சிடப்பட்டது.